Registered as a Newspaper

# உதயன் சஞ்சிகை

சுடர் : 37 கதிர் : 170 | ஞாயிற்றுக்கிழமை 15 மே 2022 | வைகாசி 01 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16+08 | விலை: 60/=

## பெரமுன, ஈ.பி.டி.பி. ரணிலுக்கு ஆதரவு

கொழும்பு, மே 15
ரணில் விக்கிரமசிங்க பிரத மராக நியமிக்கப்பட் 13

# முள்ளிவாய்க்கால் முற்றத்தில் படைத்தரப்பு கெடுபிடி

முல்லைத்தீவு, மே 15

தமிழின அழிப்பின் அடையாளமான முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை, முள்ளிவாய்க்கால் முற்றத்தில் நினைவுகூருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், பாதுகாப்புத் தரப்பினர் கெடுபிடிகளை ஆரம்பித்துள்ளனர். செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களுக்கு இடையூறு விளைவித்துள்ளதுடன், அங்கு இராணுவக் காவலரண் அமைத்து கண்காணிக்கும் நடவடிக்கையையும் ஆரம்பித்துள்ளனர். 13

இனப்படுகொலையை நினைவேந்திய

## யாழ். பல்கலை மாணவருக்கு புலனாய்வுப்பிரிவு மிரட்டல்

யாழ்ப்பாணம், மே 15
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் 13

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு இடையூறுகளை ஏற்படுத்த வேண்டாம்

பிரதமர் ரணிலுக்கு சீ.வீ.கே. கடிதம்

யாழ்ப்பாணம், மே 15
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் எதிர்வரும் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் கடைப்பிடிக்கப்படவுள்ள நிலை 04

முள்ளிவாய்க்கால் நினைவு நாளில்

## தேச விடுதலையை பிரகடனம் செய்வோம்

மாவை. அறைகூவல்

யாழ்ப்பாணம், மே 15
இனப்படுகொலை அரங்கேறிய முள்ளிவாய்க்கால் நினைவுநாளில் தமிழ்த் தேசத்தின் விடுதலையைப் பிர 13

## வவுனியாவில் முளைத்தது இராணுவச் சோதனைச் சாவடி

வவுனியா, மே 15
ஏ 9 வீதியில் கொக்குவெளிப்பகுதியில் புதிய இராணுவச்சோதனைச்சாவடி ஒன்று நேற்று அமைக்கப்பட்டுள்ளது. 13

## முள்ளிவாய்க்கால் நினைவுநாளில் விடுதலைப் புலிகள் தாக்குதலாம்!!!

புலனாய்வுப் பிரிவை மேற்கோள்காட்டி இந்தியாவின் 'தஹிந்து' நாளிதழ் விஷமம்

(விரிவு - பக்:10)

## குமுதினிப்படகு படுகொலை நினைவேந்தல் இன்று

யாழ்ப்பாணம், மே 15
குமுதினி படகுப் படுகொலையின் 37ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று கடைப்பிடிக்கப்படவுள்ளது. 13

## வடக்கு - கிழக்கிலிருந்து முள்ளிவாய்க்காலுக்கு பேரணி

யாழ்ப்பாணம், மே 15
'இன விடுதலையைத் தேடி, முள்ளிவாய்க்கால் நோக்கி' எனும் தொனிப்பொருளில் மாபெரும் மக்கள் எழுச்சிப் 13

## 4 பழைய அமைச்சர்களே மீண்டும் பதவியேற்பு

(விரிவு - பக்:14)

## மஹிந்த இன்னமும் தலைமறைவு

நேற்றைய கூட்டத்துக்கும் வரவில்லை

(விரிவு - பக்:14)

## ரணில் இன்று விசேட உரை

'கோத்தாகோக' மவிலுள்ளவர்களின் நலன்களைக் கவனிக்கவும் குழு 13

நிபந்தனையோடு

## அமைச்சுப் பதவிக்கு 'ரெடி'!

அறிவித்தார் விக்னேஸ்வரன்



யாழ்ப்பாணம், மே 15
நாட்டை தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்கக் கூடிய ஒருவர் என்ற அடிப்படை 13




noolaham.org | aavanaham.org

# டொலரைப் பெறுவது உச்சக்கட்டச் சவால்

## பணம் அச்சிட நேரிடலாம் பிரதமர் ரணில் தெரிவிப்பு

**கொழும்பு, மே 15**

**நாட்டின் தற்போதைய நிலைமையில் சுமார் மூன்று பில்லியன் டொலர் தேவைப்படுகிறது. இதனைப் பெற்றுக்கொள்வதே எமக்கு இருக்கும் முதலாவது சவால். பணத்தை அச்சிடுவது எனது கொள்கை இல்லை என்றாலும், பணத்தை அச்சிட நேரிடும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



சர்வதேச செய்திச்சேவையொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மிக உக்கிரமான பொருளாதார நெருக்கடியை நாம் எதிர்நோக்கி வருகின்றோம். ஆங்கிலேயர்கள் மற்றும் ஒல்லாந்தர் ஆட்சிக்காலங்களில்கூட இவ்வாறான பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டிருக்காது என நான் நினைக்கின்றேன். இந்த ஆண்டே எமக்கு மிகவும் கடினமான ஆண்டு. அந்நியச் செலாவணி இல்லை. அரசாங்கத்துக்கு வருமானம் கிடையாது. அந்நியச் செலாவணியுடன் வர்த்தகங்கள் நடக்கவில்லை என்றால் வருமானம் குறையும். ரூபா மூலம் கிடைக்கும் வருமானத்தை அதிகரிக்க வேண்டும். அந்நியச் செலாவணியுடன் வர்த்தகம் செய்யவில்லை என்றால், வரியைச் செலுத்த முடியாது. வரி குறைக்கப்பட்டுள்ளது. தொழில் வாய்ப்புகளை இழக்க நேரிடும்.

பணத்தை அச்சிடவில்லை என்றால், அரச ஊழியர்களுக்கு ஊதியத்தை வழங்க முடியாது. நாட்டில் வரிசைகளை இல்லாமல் செய்ய வேண்டும். சாதாரண இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தவேண்டும் - என்றார். (கு-இ)

# ஐ.தே.க. மூத்த தலைகள் நாடாளுமன்றம் வர வாய்ப்பு

கொழும்பு, மே 15

ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஐந்து பேரை நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமிப்பதற்கான தயார்ப்படுத்தல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த ஐவரைப் பதவி விலகச்செய்து, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகளை தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர்களாக்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரசிங்க பிரதமராகப் பதவியேற்றுள்ள நிலையில், நாடாளுமன்றத்தில் அவர் தனித்துச் செயற்பட முடியாது என்ற காரணத்தால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சில மாதங்களுக்கு முன்பிருந்தே பேசப்பட்டு வந்த தேசிய அரசாங்கம் தொடர்பான யோசனையின் போதும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகளைத் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யும் விடயம் முன்வைக்கப்பட்டிருந்தது.

அதேவேளை, புதிய அமைச்சரவையில் 18 பேர் அங்கம் வகிப்பார்கள் என்று கூறப்படுகின்றது.

பொதுஜன பெரமுனவுக்கு 8 அமைச்சுகளும், ஐக்கிய மக்கள் சக்திக்கு 5 அமைச்சுகளும், சுதந்திரச் கட்சிக்கு சில அமைச்சுப் பொறுப்புக்களும் வழங்கப்படலாம் என்று தெரியவருகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தேசிய மக்கள் சக்தி என்பன அமைச்சுப் பதவிகளை ஏற்பதில்லை என்று அறிவித்துள்ள நிலையில், இந்த விடயத்தில் இன்னமும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்றும் தெரியவருகின்றது. (எ-இ)

# மக்கள் ஆணைக்கு முரணாக ரணிலை நியமித்தார் கோத்தா

## குற்றஞ்சாட்டுகின்றார் கம்மன்பில

கொழும்பு, மே 15



அரசியல் தீவிரவாத செயற்பாட்டுக்கு நாட்டு மக்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்திய காரணத்தாலேயே முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச பதவி விலகினார். அவர் பதவி விலகியது சர்வகட்சிகளை உள்ளடக்கிய இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்காக அல்ல . பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இப்போது அதிர்ஷ்ட இலாபச்சீட்டு கிடைத்துள்ளது- இவ்வாறு முன்னாள் அமைச்சர் உதயகம்மன்பில தெரிவித்தார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பொதுஜன பெரமுனவுக்கு ஜனாதிபதி தேர்தலிலும், பொதுத்தேர்தலிலும் கிடைத்த மக்களாணைக்கு முரணாகவே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்துள்ளார்.

சர்வகட்சி தலைமையிலான இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருந்த போதும் அதற்குப் பிரதான எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி ஆகியன இணக்கம் தெரிவிக்கவில்லை.

மாற்று நடவடிக்கைகள் ஏதும் இல்லாத காரணத்தினால் ஜனாதிபதி இவ்வாறான தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார்.

சமூகக் கட்டமைப்பில் தற்போது தோற்றம் பெற்றுள்ள சகல பிரச்சினைகளுக்கும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவும் அவரது தரப்பினருமே பொறுப்புக்கூற வேண்டும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் நோக்கம் எமக்கு கிடையாது. அவர் தலைமையிலான அரசாங்கத்தில் எவ்வித அமைச்சுப் பதவிகளையும் பொறுப்பேற்கப்போவதில்லை.

நாட்டுக்கு நன்மை பயக்கும் தீர்மானங்களுக்கு மாத்திரம் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்-என்றார். (எ-இ)

# பிரதி சபாநாயகர் பதவிக்கு பெண் எம்.பியை நிறுத்துக!

## கட்சித் தலைவர்களிடம் ரணில் கோரிக்கை

கொழும்பு, மே 15

புதிய பிரதி சபாநாயகராக யாரை நியமிப்பது என்பது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை அவரைச் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் குழுவிடம் இந்த விடயத்தைப் பிரதமர் தெரிவித்தார் என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றம் எதிர்வரும் 17ஆம் திகதி கூடும்போது பிரதி சபாநாயகர் நியமிக்கப்படுவார் என்று குறிப்பிட்டதுடன், பெண் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு இந்த வாய்ப்பை வழங்க வேண்டும் என்று கட்சித் தலைவர்களிடம் பிரதமர் கோரிக்கை விடுத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது . (எ-இ)

# ரணிலின் ஐ.தே.க.வுக்கு ஆசனம் வழங்கத் தயார்!

## பெரமுன கூறுகின்றது

கொழும்பு, மே 15

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குத் தீர்வுகாண பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாடாளுமன்றத்தில் அவரது ஐ.தே.கவின் பிரதிநிதித்துவம் தேவையென்றால் அவருக்குப் பல தேசியப்பட்டியல் ஆசனங்களை வழங்குவதில் பிரச்சினை இல்லை எனப் பொதுஜன பெரமுனவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் முதிர்ந்த அரசியல்வாதியாக இருந்து நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குத் தீர்வைத் தேடினால் தமது கட்சி அதற்கு ஆதரவளிக்கும் எனவும் இந்தத் தருணத்தில் கட்சி பேதமின்றி அனைத்து தரப்பினரும் நாட்டைப் பலப்படுத்த இணங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# ராஜபக்சக்களின் பிரதிநிதியே ரணில்!



## இராதாகிருஷ்ணன் சாட்டை

கொழும்பு, மே 15

புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ராஜபக்சக்களின் பிரதிநிதியாகவேசெயற்படுகின்றார். எனவே, அவருக்கு ஆதரவு வழங்க முடியாது என்று மலையக மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் வீ. இராதாகிருஷ்ணன் தெரிவிக்கையில்,

ரணில் 5 தடவைகள் பிரதமர் பதவியை வகித்தவர். 6ஆவது தடவையாகவும் பிரதமர் பதவியேற்றுள்ளார். எனினும், எந்தவொருமுறையும் தனது பதவிக் காலத்தை அவர் முழுமையாகப் பூர்த்தி செய்தது கிடையாது. கடந்த பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்கவால் 20 ஆயிரம் வாக்குகளைக்கூட பெறமுடியாமல் போனது.

தேசியப் பட்டியல் ஊடாகவே நாடாளுமன்றம் வந்தார். அவருக்கு மக்கள் ஆணை இல்லை. ராஜபக்சக்களுடன் ரணில் இணைந்துள்ளார். மொட்டுக் கட்சி ஆட்சிதான் வரப்போகின்றது. ராஜபக்ச போய், ரணில் வந்துள்ளார். இதுதான் ஏற்பட்டுள்ள மாற்றம். இதனை மக்கள் ஏற்கமாட்டர். நாடாளுமன்றம் கூடும்போது, ரணிலுக்குப் பெரும்பான்மை உள்ளதா? என்பது தெரியவரும். புதிய அரசில் இணையமாட்டோம். அமைச்சுப் பதவிகளை ஏற்கமாட்டோம்.

எதிரணியில் இருந்து செயற்படுவோம். ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம் - என்றார். (கு-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவை கைதுசெய்க

## இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கோரிக்கை

**கொழும்பு, மே 15**

**காலி முகத்திடலில் கடந்த திங்கட்கிழமை அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்திய முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் சந்தேகநபர்களைக் கைது செய்யவேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கம், ஜனாதிபதி மற்றும் பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

பொலிஸ் மா அதிபரிடம் எழுத்து மூலம் முறைப்பாடு செய்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த ஒன்றியத்தின் பிரதம செயலாளர் மஹிந்த ஜயசிங்க இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்திய குழுவினருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டமைக்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்கின்றோம்.

நாடளாவிய ரீதியில் அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், ஜனாதிபதி பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க மறுத்து வருகின்றார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஜனாதிபதி உடன்படிக்கையில் ஈடுபட்டுள்ளார். பதவியைத் துறக்க வேண்டும் என்று மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அவர் செவிசாய்க்க மறுக்கிறார் - என்றார். (எ-இ)

## மஹிந்தவை கைதுசெய்யுமாறு கோட்டை நீதிமன்றில் மனு!

கொழும்பு, மே 15

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச உட்பட 7 பேரை கைதுசெய்யவேண்டும் என்று கோரி, கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குற்றவியல் அச்சுறுத்தலில் ஈடுபடுவதற்கான சதியில் ஈடுபட்டமை, காலிமுகத்திடல் மற்றும் அலரிமாளிகையின் முன்னால் அமைதியான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதலை மேற்கொள்வதற்கு உதவியமை ஆகிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அவர்கள் கைதுசெய்யப்பட வேண்டும் என்று மனுவில் கோரப்பட்டது. (ம)

## அரச எதிர்ப்பாளர்கள் மீது தாக்குதல் நடத்தியோரை தண்டிக்கவேண்டும் ரணில்

### பௌத்த சங்கம் வலியுறுத்து

கொழும்பு, மே 15

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதே பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் முக்கியமான பணியாக இருக்கவேண்டும் என கொழும்பு இளையோர் பௌத்த சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளதாவது:-

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களும், அவர்களுக்கு உதவிய மற்றும் உறுதுணையாக இருந்த அரசியல் சக்திகளும் உடனடியாக கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். எத்தகைய மாற்றத்தையும் எதிர்கொண்டு ஒழுக்கம் மற்றும் சட்டத்தை மதிக்கும் நல்ல சமூகத்தை உருவாக்குவதற்கான வழிமுறைகளை புதிய பிரதமர் செய்துகாட்ட வேண்டும் - என்று அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது. (எ-இ)



## நீண்டதூர ரயில் சேவை ஆரம்பம்

கொழும்பு, மே 15

நீண்டதூர ரயில் சேவைகள் நேற்றுமுதல் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி கல்கிஸை - காங்கேசன்துறை, கொழும்பு, கோட்டை- பதுளை மற்றும் மருதானை - பெலியத்த ஆகிய மார்க்கங்களின் ரயில் சேவைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலதிக தகவல்களை 1971 என்ற இலக்கத்துக்கு அழைத்துப் பெறலாம் எனவும் ரயில்வே திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது. (ச-இ)

## ஷஷி வீரவன்ஸவின் வழக்கு தீர்ப்பு மீண்டும் ஒத்திவைப்பு

கொழும்பு, மே 15

பொய்யான தகவல்களை முன்வைத்து முறையற்ற விதத்தில் இராஜதந்திர கடவுச்சீட்டை பெற்றுக்கொண்டமை, அதை வைத்திருந்தமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவின் மனைவி ஷஷி வீரவன்ஸவுக்கு எதிராக தொடரப்பட்டுள்ள இரு வழக்குகளின் தீர்ப்பு மூன்றாவது தடவையாக நேற்றுமுன்தினம் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது.

எதிர்வரும் 27ஆம் திகதிவரை தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு நேற்றுமுன்தினம் கொழும்பு பிரதான நீதிவான் நந்தன அமரசிங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அப்போதே தீர்ப்புக்காக இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டது. (எ-இ)

## ரம்புக்கனை துப்பாக்கிச் சூடு சந்தேகநபர்களுக்கு மறியல்

கொழும்பு, மே 15

கேகாலை, ரம்புக்கனையில் நடந்த மக்கள் ஆர்ப்பாட்டத்தின்போது ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள கேகாலை முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.கீர்த்திரத்ன மற்றும் 4 பொலிஸ் அதிகாரிகளுக்கான விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் கேகாலை நீதிவான் வாசனா நவரத்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது கே.கீர்த்திரத்ன தவிர்ந்த ஏனைய சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

கீர்த்திரத்ன நீதிமன்றில் முன்னிலையாகதமை தொடர்பில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் சிறைச்சாலை மருத்துவமனை மருத்துவர் ஆகியோரிடம் அறிக்கை கோரவேண்டும் என்று நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

வழக்கில் சம்பந்தப்பட்ட இரண்டு பவுஸர்களையும் 275 லட்சம் ரூபா பெறுமதியான பிணையில் உரிமையாளர்களிடம் விடுவிக்க உத்தரவிட்ட நீதிவான், அவற்றின் கட்டமைப்பை மாற்றவோ அல்லது வேறு தரப்பினருக்கு விற்கவோ தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான அனைத்து அறிக்கைகளையும் சமர்ப்பிக்கவேண்டும் என்று குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்ட நீதிவான், சந்தேகநபர்களை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (எ-இ)



# அமரகீர்த்தி அத்துகோரள அடித்தே கொல்லப்பட்டார்

## உடற்கூற்றுப் பரிசோதனையில் தகவல்

கொழும்பு, மே 15

நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள, அடி காயங்களா லேயே உயிரிழந்துள்ளார் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அரச எதிர்ப்பாளர்கள் மீது பெரமுனவின் ஆதரவாளர்கள் தாக்குதல் மேற்கொண்டதை அடுத்து நாடெங்கும் கலவரம் வெடித்தது. நிட்டம்புவ பிரதேசத்தில் 9ஆம் திகதி பிற்பகல் இடம்பெற்ற அசம்பாவிதங்களையடுத்து அமரகீர்த்தி அத்துகோரள 'தற்கொலை' செய்து கொண்டார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.

நிட்டம்புவவில் பொதுமக்கள் மீது நாடாளுமன்ற உறுப்பினரின் பாதுகாப்புப் பிரிவினர் துப்பாக்கிச் சூடு நடத்திய நிலையில், அமரகீர்த்தி அத்துகோரள கட்டடமொன்றில் தஞ்சம் புகுந்துள்ளார். பொதுமக்கள் கட்டடத்தை சுற்றி வளைத்தமையால் அவர் தனது துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்தார் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டது.





இந்த நிலையில், நாடாளுமன்ற உறுப்பினரின் மரணம் தொடர்பில் நடத்தப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையில், அவர் அடி காயங்களால்தான் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சம்பவத்தில் உயிரிழந்த நாடாளுமன்ற உறுப்பினரின் பாதுகாப்பு அதிகாரியும் கடுமையாக தாக்கப்பட்டு பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளார் என்றும், இதனால் மூளையில் குருதிக்கசிவு ஏற்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



SLT-MOBITEL MOBILE
PREPAID
மற்றும்
POSTPAID
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்,

இதயம் போதும் எனும் வரை SCROLL செய்யுங்கள்
விரல்கள் போதும் எனும் வரை CHAT செய்யுங்கள்
கண்கள் போதும் எனும் வரை VIDEO பாருங்கள்
நீங்கள் விரும்பும் 9 App இற்கும் வேண்டியளவு
data மற்றும் மேலதிகமாக 2GB.
398 ரூபா இற்கு #170# அழைத்து அல்லது
SELFCARE APP ஊடாக இப்போதே அக்டிவ் செய்யுங்கள்.
SLTMOBITEL

# சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் கொல்லப்பட்டோருக்கு அஞ்சலி

**யாழ்ப்பாணம், மே 15**

**முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின் மூன்றாம் நாள் நினைவேந்தலான நேற்று, நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் கொல்லப்பட்டோருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.**



1995ஆம் ஆண்டு ஜுலை மாதம் 9ஆம் திகதி போர்க்காலத்தின் போது நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் ஏராளமான பொது மக்கள் தஞ்சமடைந்திருந்தனர். இதன்போது தேவாலயத்தின் மீது இலங்கை வான்படையால் தாக்குதல் நடத்தப்பட்டதில் சுமார் 150க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர். அவ்வாறு கொல்லப்பட்டவர்களுக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் மூன்றாம் நாளான நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணித்தலைவி வாசுகி சுதாகர், பிரதேசசபை உறுப்பினர்கள் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-125.27)

கனரக வாகன சாரதி ஓட்டுனர்
(CONTAINER DRIVER)


ஐரோப்பிய நாடு - ஸ்லோவேக்கியா (SLOVEKIYA)
* அடிப்படை சம்பளம் 2000 யூரோக்கள் (இலங்கை ரூபா 800,000.00)
* அங்கீகரிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளில் நிரந்தரமான வேலைவாய்ப்பு (Resident Permit)
* ஸ்லோவேக்கியாவில் (Slovakia) நிரந்தரமான குடியிருப்பு வழங்கப்படும்.
* வெளிநாட்டு சாரதி அனுமதிப்பத்திரம் (ITCA)
* தொழிநுட்ப அட்டை (Techno Graph Card).
* தொழிநுட்ப மற்றும் சாரதிக்கான சர்வதேச அறிவுரைகளுடன் சம்பளத்தோடு பயிற்சிகள் வழங்கப்படும்.
* சேவை நீடிப்புடன் ஒரு வருட ஒப்பந்தம்.

தொலைபேசி அழைப்பிற்கான நேரம் காலை 9.00 முதல் மாலை 5.00 வரை

முக்கிய விடயங்கள்
* வெளிநாட்டுக் கடவுச்சீட்டு (Passport)
* கனரக வாகன சாரதிப்பத்திரம் (Heavy Vehicle)
* ஆங்கில அறிவு இருத்தல் வேண்டும்.

TEASTAR INTERNATIONAL (PVT) LTD
146, PEARL PARK COMPLEX, NEGOMBO ROAD, WATTALA.
Tel: 076 0419792



*யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின் மூன்றாம் நாள் நினைவேந்தல், முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியில் நேற்று இடம்பெற்றது.* (க-125)

முதலாம்பக்கத்தொடர்ச்சி...

*முள்ளிவாய்க்கால்...*

யில் அதற்கு பொலிஸாரால் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரால் எவ்வித இடையூறுகளையும் ஏற்படுத்த அனுமதிக்க வேண்டாம் என, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம், வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இந்துக்கள் மற்றும் பௌத்தர்கள் என்ற வகையில் வன்முறையால் கொல்லப்பட்ட ஆன்மாக்களின் சாபம் பற்றி நாம் அறிவோம். இந்த நாட்டை இந்த ஆன்மாக்களின் சாபம் சுற்றி அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருவது தெளிவானது. கர்மவினையின் தாக்கங்களே இந்த நாட்டை தாக்குகின்றன என்பதும் தெளிவு. இந்த ஆன்மாக்களை நினைவு கூர்ந்து பிரார்த்தனை செய்வதால் அவை அமைதி பெறுகின்றன என்பது எமது சமய நம்பிக்கையாகும்.

இறுதியாக படுகொலை இடம்பெற்ற முள்ளிவாய்க்காலில் மேற்குறிப்பிட்டவாறு உயிரிழந்த ஆன்மாக்களுக்கு அமைதியான முறையில் எதிர்வரும் 18ஆம் திகதி அஞ்சலி மற்றும் பிரார்த்தனை செய்ய தமிழ் மக்கள் மிகவும் தீர்மானமாக உள்ளனர்.

எனினும், முல்லைத்தீவு பொலிஸார் இதனை தடை செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை கவலைக்குரியது. இது மிகவும் துரதிர்ஷ்டவசமானதும், எமது அடிப்படை சமய மற்றும் சமூக உரிமைகளை மறுக்கும் செயலாகும்.

இந்த விடயத்தில் தாங்கள் தலையிட்டு, முள்ளிவாய்க்காலில் இடம்பெறவுள்ள நினைவஞ்சலி மற்றும் பிரார்த்தனை நிகழ்வுகளில் தலையிடாதிருப்பதற்கான பணிப்புக்களை முல்லைத்தீவு பொலிஸாருக்கு வழங்கவும் - என்றுள்ளது. (அ-ஒ-5)

## இலங்கை போர்ச்செய்திகளை அறிக்கையிட்டவர் உயிரிழப்பு



கொழும்பு, மே 15

இலங்கையில் இடம்பெற்ற போர் தொடர்பான செய்திகளை ஊடகங்களுக்கு அறிக்கையிட்டவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் சிட்னிக்கான இலங்கையின் துணைத் தூதுவராகக் கடமையாற்றிய லக்ஷ்மன் ஹுலுகல்லவே உயிரிழந்துள்ளார்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவிவகித்த காலத்தில், விடுதலைப்புலிகள் அமைப்புக்கும், இலங்கைப் படையினருக்கும் இடையிலான போர் தொடர்பான செய்திகளை ஊடகங்களுக்கு வழங்கிவந்த, தேசியப் பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளராக இவர் கடமையாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-இ)

# காணாமல் ஆக்கப்பட்டோரை கண்டுபிடிப்பதற்கு உதவுங்கள்

## தென்னிலங்கைப் போராட்டக்காரர்களிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 15

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களைக் கண்டுபிடிப்பதற்கு தென்னிலங்கையில் போராட்டத்தில் ஈடுபடுவோர் உதவவேண்டும் என்று வடக்கு - கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பில் சங்கச் செயலாளர் ஆ.லீலாதேவி தெரிவிக்கையில், இலங்கையில் எந்த அரசாங்கம் வந்தாலும் எதுவுமே மாறப்போவது கிடையாது. வடக்குக்கு ஒரு நீதியும் தெற்குக்கு ஒரு நீதியும் என்ற நிலைப்பாடே காணப்படுகின்றது. ஆனந்த சுதாகரன் மற்றும் சுனில் ரத்நாயக்க ஆகியோருக்கு நடந்த விடயங்களில் இருந்து இதனை உணர்ந்து கொள்ளமுடியும்.

எமது உறவுகள் கையளிக்கப்பட்ட பின்னரே காணாமலாக்கப்பட்டவர்கள் என்பதை தென்னிலங்கைப் போராட்டக்காரர்கள் விளங்கிக் கொள்ளவேண்டும். மறைமுகமான இடங்களில் வைக்கப்பட்டுள்ள வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களை மீட்டுத்தர உதவிசெய்ய வேண்டும். தமிழர்கள் கடந்த காலங்களில் ஏன் அடக்கப்பட்டார்கள், வன்முறை ஏன் உருவாக்கப்பட்டது என்பது தொடர்பிலும் போராடுபவர்கள் சிந்திக்கவேண்டும் - என்றார். (க-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தக் காரணம் கொண்டும் போராட்டத்தை கைவிடாதீர்

## முன்னிலை சோசலிசக் கட்சி தெரிவிப்பு

**கொழும்பு, மே 15**

**புதிய அரசாங்கமொன்று அமைக்கப்பட்டதன் பின்னர் எரிபொருள், எரிவாயு, மருந்து வகைகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்கச் செய்தவுடன் போராட்டத்தைக் கைவிடாது தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வது அவசியம் என முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்விச் செயலாளர் ஜெயக்கொடி தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அதிகூடிய நாடாளுமன்ற ஆசனங்களைக் கொண்டிருந்த மஹிந்த ராஜபக்ச அரசாங்கம் மக்களின் போராட்டத்தைக் கண்டு அஞ்சி நடுங்கிப்போனது.

இதன் மூலம் மக்களே அதிகாரமிக்கவர்கள் என்பது உறுதியாகிறது. 'கோத்தா கோ கம' என்பது கோத்தாபய ராஜபக்சவைச் செல்லுமாறு கூறுவது மாத்திரமன்றி நாட்டில் உள்ள நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையையும் அகற்றவேண்டும் என்பதையே வலியுறுத்துகின்றது.

மக்களால் ஓரங்கட்டப்பட்ட ரணில் விக்ரமசிங்கவை பிரதமராக நியமித்தமையை ஏற்றுக்கொள்ள முடியாது.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு யாரால் சர்வதேச நாணய நிதியத்திடமும், வெளிநாட்டுகளிடமும் அதிகளவான கடன் தொகையைப் பெற முடியுமோ அதனைக் கருத்தில் கொண்டே பிரதமர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனால் நாட்டின் கடன் சுமை மேலும் அதிகரிக்குமே தவிர குறையாது.

நாட்டின் அந்நியச் செலாவணியை அதிகரிப்பதற்காக ஆக்கபூர்வமான செயற்றிட்டங்கள் வகுக்கப்படுவது அவசியம் -என்றார். (ம)

# பொருளாதார மீட்சிக்கு நியூஸி. 500,000 டொலர்

கொழும்பு, மே 15

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு இலங்கைக்கு, 5 லட்சம் டொலரை வழங்க நியூஸிலாந்து முன்வந்துள்ளது.

விவசாயிகள் மற்றும் சிறுவர்களுக்காக இந்த நிதி வழங்கப்படும் என்று நியூஸிலாந்து வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

உலக உணவுத் திட்டம் மற்றும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு ஆகியவற்றின் ஊடாக இலங்கைக்கு இந்த நிதியுதவி வழங்கப்படும்.

அதேவேளை, இலங்கைக்கும் நியூஸிலாந்துக்கும் இடையிலான 30 வருட ஒத்துழைப்பு மேலும் வலுப்படும். இந்த 30 வருட காலத்துக்குள் நியூஸிலாந்து இலங்கைக்கு 25.07 மில்லியன் நியூஸிலாந்து டொலரை அபிவிருத்தித் திட்டங்களுக்காக உதவியாக வழங்கியுள்ளது என்று நியூஸிலாந்தின் வெளிவிவகார அமைச்சர் நனையா தனது ருவிற்றரில் பதிவிட்டுள்ளார். (க-இ)

# ரஞ்சனை விடுவிக்கக்கோரி கலைஞர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மே 15

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்யக்கோரி, வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு முன்பாக கலைஞர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ராமநாயக்க அரசியல் பழிவாங்கலுக்கு ஆளானவர் என்பதால், வெசாக் தினத்தன்று அவரை விடுதலை செய்ய வேண்டும் என்று அங்கு கூடிய நடிகர்கள், கலைஞர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கோரிக்கை விடுத்தனர். (க-இ)



# இலங்கைக்கு வருவோருக்கு பிரிட்டன் எச்சரிக்கை!

கொழும்பு, மே 15

தற்போது அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரமின்மை காரணமாக இலங்கைக்கான அநாவசிய பயணங்களைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று பிரிட்டனின் வெளிநாட்டு பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகம் அறிவுறுத்தியுள்ளது.

இலங்கையில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன் நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் மே 9ஆம் திகதி வன்முறைகள் உட்பட பல சம்பவங்கள் இடம்பெற்றன.

நீங்கள் இந்த நேரத்தில் இலங்கையில் இருந்தால் அல்லது பயணத்தைத் திட்டமிட்டால், நீங்கள் உள்ளூர் அதிகாரிகளின் ஆலோசனையைப் பின்பற்றவேண்டும் என்று பிரிட்டனின் வெளிநாட்டு, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகம் அறிவுறுத்தியுள்ளது. (எ-இ)

# தற்போது அமைக்கப்பட்டிருப்பது இடைக்கால அரசாங்கம் அல்ல!

## இது கோத்தா - ரணில் அரசாங்கம் என சிங்கள தேசிய ஒன்றியம் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 15

நாட்டில் தற்போது அமைக்கப்பட்டிருப்பது தேசிய அரசாங்கமோ அல்லது இடைக்கால அரசாங்கமோ அல்ல. இது கோத்தா - ரணில் அரசாங்கம் என்று சிங்கள தேசிய அமைப்புகள் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.

புதிய பிரதமரின் தலைமையில் அமைக்கப்படும் அரசாங்கம் தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதில் வழங்குகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது அமைக்கப்பட்டுள்ள புதிய அரசாங்கம் சந்திரிகா - ரணில், மைத்திரி- ரணில் அரசாங்கங்களுக்கு இணையானது.

அரசியல் கட்சிகளுடன் கூடிய நிறைவேற்றுச் சபையால், பிரதமர் தெரிவு செய்யப்படவில்லை என்பதால் இதை ஜனாதிபதியின் தனிப்பட்ட முடிவாகவே கருதநேரிடும்.

பெரும்பாலும் சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணிந்து, கோத்தாபய ராஜபக்ச இந்த முடிவை எடுத்திருக்கலாம்.

இதனடிப்படையில் 2003ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்க நிறுத்திய இடத்தில் இருந்து அவர் மீண்டும் ஆரம்பிக்கலாம் -என்றார். (ம)

# ரஞ்சன் ராமநாயக்க விரைவில் விடுதலை?

கொழும்பு, மே 15

சிறையில் உள்ள ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்வது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்கவை விட அதிகமான தவறு செய்தவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றும், ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை மிகவும் நியாயமானது என்றும் காரியவசம் தெரிவித்தார். (எ-இ)

# 244 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு

கொழும்பு, மே 15

வெசாக் தினத்தை முன்னிட்டு, ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, 244 சிறைக்கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படும் என்று சிறைச்சாலைகள் பேச்சாளரும், சிறைச்சாலைகள் ஆணையாளருமான சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

தண்டம் செலுத்தத் தவறியமைக்காக சிறைத்தண்டனை அனுபவிப்பவர்கள், 40 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்கள் இவ்வாறு விடுவிக்கப்படுவர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)



# பிரச்சினைக்குத் தீர்வு காணவே பிரதமர் பதவியேற்றார் ரணில்

## அகிலவிராஜ் தெரிவிப்பு

கொழும்பு, மே 15

ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஏற்றது நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவே என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரசாங்கத்தை அமைப்பதற்கு நாடாளுமன்றத்தில் ஏற்கனவே 124 பேருக்கு மேல் ஆதரவு தெரிவித்துள்ளனர். இளைஞர்களின் எதிர்காலம் தொடர்பாகப் பிரதமரிடம் திட்டங்கள் உள்ளன. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை அமைப்பதில் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.

ஆனால் அதற்கு அனைவரும் பங்களிக்க முடிந்தால் அனைவரது எண்ணங்களையும் செயற்படுத்த முடியும்- என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ரணில் என்னும் மாயமான்

இலங்கையின் பொருளாதார நெருக்கடி உச்சமடைந்தபோது நாட்டின் ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரை கூறிக் கொண்டிருந்தவர் ரணில் விக்கிரமசிங்க. ஆனால் அவரது அறிவுரைகளை மமதையால் அப்போதைய ஆட்சியாளர்களான ராஜபக்சக்கள் செவிமடுக்கவில்லை. ரணில் விக்கிரமசிங்க போன்ற ஒருவரே இலங்கையின் ஆட்சிப் பீடத்துக்கு தலைமை தாங்கவேண்டும் என்ற கருத்தியல் மக்கள் மத்தியில் வாழை மரத்தில் ஊசி ஏற்றுவதைப் போன்று ஏற்றப்பட்டது. இறுதியில் நாட்டில் நடந்தேறிய சம்பவங்கள், ரணிலை ஆட்சிப் பீடத்தில் அமர்த்தி விட்டன.

''ரணில் ஆட்சிப்பீடமேறினால் மேற்குலக நாடுகள் தாராளமாகக் கைகொடுக்கும். இலங்கையின் பொருளாதாரம் பழையபடி நிமிர்ந்துவிடும். ரணில் மந்திரத்தால் மாங்காய் பறிப்பார்'' என்றெல்லாம் கயிறு திரிப்புக்கள் இதுவரை நடந்தேறின. இந்த 'பில்டப்புக்கள்'' ரணில் விக்கிரமசிங்கவுக்கு சவாலாக இருக்கப் போன்றன. குறிப்பிட்ட காலத்துக்குள் மக்களுக்குத் தெரியக்கூடிய வகையிலான மாற்றங்கள் (அதாவது வரிசையுகம் முடிவுக்கு வருதல், பொருள்கள் தட்டுப்பாடின்றி கிடைத்தல், விலைக் குறைப்பு என்பன) நடைபெறாவிட்டால், ரணில் மீதான விம்பம் மக்கள் மத்தியிலிருந்து தானாகவே உடைந்துவிடும். அந்த விம்பத்தைத் தகர்ப்பதற்கான வேலைகளை ஐக்கிய மக்கள் சக்தியினரும், மக்கள் விடுதலை முன்னணியினரும் முன்னின்று செய்வார்கள்.

இவை எல்லாம் ஒருபுறம் இருக்க, ரணில் விக்கிரமசிங்க என்ற குள்ளநரியால் அரசியலில் சதுரங்க காய் நகர்த்தல்களைச் செய்து வெற்றிபெறுவதைப் போன்று பொருளாதாரத்தில் வெற்றிபெற முடியுமா என்ற கேள்வி அவரது கடந்த காலச் செயற்பாடுகள் வாயிலாக எழுந்து நிற்கின்றது.

அதிகாரங்கள் குறைக்கப்பட்ட மைத்திரிபால என்ற ஜனாதிபதியின் கீழ், ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பணியாற்றினார். மேற்குலகின் விசுவாசி என்று கூறப்படுகின்ற ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்திலேயே, அம்பாந்தோட்டைத் துறைமுகம் 99 ஆண்டுகள் குத்தகைக்கு, மேற்குலகின் விரோதியாக இருக்கின்ற சீனாவுக்கு தாரைவார்க்கப்பட்டது. சீனாவிடம் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு செய்த காரியம், அந்தத் துறைமுகத்தை 99 ஆண்டுகள் குத்தகைக்கு சீனாவுக்கு கொடுத்ததுதான்.

அப்படிப்பட்ட ரணில் விக்கிரமசிங்க இப்போது மாத்திரம் நாட்டைக் கடன் நெருக்கடிகளிலிருந்து விடுவித்து, பொருளாதார மேம்பாட்டுக்கு அழைத்துச் செல்வார் என்பதை நம்புவது கடினமாக இருக்கின்றது.

இவற்றுக்குமேலாக, ராஜபக்சக்கள் நாட்டைக் கொள்ளையடித்தார்கள், அவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படவேண்டும் என்று எவ்வளவு தூரம் வலியுறுத்தப்படுகின்றதோ அதேபோன்றதொரு குற்றத்தின் பொறுப்பாளிதான் ரணில் விக்கிரமசிங்கவும்.


ரணில் விக்கிரமசிங்க என்ற தனிமனிதனின் முடிவால் இலங்கையின் மத்திய வங்கி ஆளுநராக சிங்கப்பூர் குடிமகனான அர்ஜுன் மகேந்திரன் நியமிக்கப்பட்டார். அவர் தனது மருமகனுடன் இணைந்து, ராஜபக்சக்கள் 10 ஆண்டுகளில் ஏப்பம்விட்ட சொத்துக்களை ஒரே மாதத்தில் ஏப்பம்விட்டார். பிணைமுறி மோசடி இன்று வரை பொறுப்புக்கூறப்படாத ஒன்றாகவே இருக்கின்றது. இதற்கு தலைமைப் பொறுப்பாளி – மிஸ்டர் கிளீன் (?) ரணில்தான்.

இப்படிப்பட்ட ஒருவரையே நாட்டின் பொருளாதார மீட்பராக மக்கள் நம்பிக்கொண்டிருக்கின்றனர்.

காலம் மக்களுக்கு விரைவில் பதிலைச் சொல்லும்.

நாளொரு நல்வார்த்தை

“நீ சிறிய செயல்களுக்கு உண்மையுள்ளவனாக இருந்தால் பெரிய செயல்களுக்கு அதிகாரியாகலாம்” - இயேசு



# ரணில் தலைமையிலான அரசில் பதவி வேண்டாம்

## காலைவாரவும் மாட்டோம் என்று தமிழ் முற்போக்கு கூட்டணி அறிவிப்பு

**கொழும்பு, மே 15**

**புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில் எமது கட்சி பங்கேற்காது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணி அறிவித்துள்ளது.**

இது தொடர்பில் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமது அரசாங்கத்தில் பங்கேற்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எமக்கு அழைப்பு விடுத்தார். அவரது அழைப்புக்கு நன்றிகூறி, கொள்கை அடிப்படையில் அதை நாம் நாகரிகமாக மறுத்துவிட்டோம். ஆனால், அதற்காக நாம் கட்சி அரசியல் செய்து கூச்சல், குழப்பம் விளைவிக்க விரும்பவில்லை. வாழ்வாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் மக்களை மீட்க அவரால் இயன்றதைச் செய்யட்டும்.

சர்வதேச தொடர்பாடல் தொடர்பான, ரணிலின் பலம் மூலம் நாட்டுக்கு நன்மை நடக்குமாயின் அதை நாம் முழு மனதுடன் வரவேற்கிறோம். இன்றைய சூழலில், நாடாளுமன்றத்தில் அவரது அரசின் காலை இழுத்து விடும் எந்தவொரு முயற்சியையும் நாம் ஆதரிக்க மாட்டோம்.

நாட்டில் பொருளாதாரப் பிரச்சினைகள் உள்ளன. எமது நாடு வாங்கியுள்ள கடன்களை உரிய காலத்தில் திருப்பிச்செலுத்த முடியாதுள்ளது. ஆகவே கடன் தந்தோரிடம் பேசி கடன் திருப்பிச் செலுத்துவதை மறுஅட்டவணைப் படுத்தவேண்டும்.

அரசமைப்பு ரீதியாக, குறைந்தபட்சம் 20ஐ நீக்கி மீண்டும் 19 ஐக் கொண்டு வரவேண்டும் - என்றுள்ளது. (கு-இ)

### காலிமுகத்திடல் கலவரம்

## போராட்டக்காரர்களிடமும் விசாரணைக்குத் தீர்மானம்!

கொழும்பு, மே 15

காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் பிரதிநிதிகள் இருவரை அழைத்து, பெரமுனவின் ஆதரவாளர்களால் நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் விசாரிப்பதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

கடந்த 9ஆம் திகதி காலிமுகத்திடலில் இடம்பெற்ற கலவரத்தில் சட்டத்தை நிலைநாட்டத் தவறியமை தொடர்பில் ஆராய்வதற்காக மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நேற்று ஆணைக்குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தார்.

தொடர் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து அவர் விளக்கமளித்ததாக மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக காலிமுகத்திடலில் இடம்பெற்றுள்ள ஆர்ப்பாட்டக்காரர்களின் பிரதிநிதிகள் இருவரை அழைத்து வெளிப்படுத்திய விடயங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (ம)

நாளை 16.05.2022 திங்கட்கிழமை வைகாசி 02

சுபநேரம் : 11.53 - 01.23

ராகுகாலம்: 07.23 - 08.53

வைகாசி விசாகம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்று இடம்பெற்றது. நூற்றுக்கணக்கான பக்தர்கள் இந்தத் திருவிழாவில் கலந்துகொண்டனர். (ம-17)

# 65,000 தொன் உரம் இலங்கைக்கு

கொழும்பு, மே 15

இலங்கைக்கு உடனடியாக 65 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரத்தை வழங்க இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்தியக் கடன் திட்டத்தின்கீழ் குறித்த யூரியா உரம் வழங்கப்படவுள்ளதாக இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியின் கீழ், குறித்த உதவி வழங்கப்படவுள்ளதாகவும், அத்துடன் நடப்பு பருவகால நெற்பயிர்ச் செய்கைக்கான மொத்த உரத்தேவை இதனூடாக பூர்த்தி செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# தமிழகக் கடலோரத்தில் அதிதீவிர கண்காணிப்பு!

**இராமேஸ்வரம், மே 15**

**இலங்கையில் இருந்து இந்தியாவின் தமிழகத்துக்குள் அகதிகளாகப் பலர் ஊடுருவுவது அதிகரித்துள்ளதால் தமிழகத்தில் கரையோரக் கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.**

இலங்கையில் வரலாறு காணாத பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. வாழ்வாதாரத்துக்குச் செய்வதறியாது பலநூறு குடும்பங்கள் பரிதவித்துக் கொண்டிருக்கின்றன. கலவரங்கள் மற்றும் உறுதித்தன்மையற்ற ஆட்சி என்பனவும் இலங்கையின் பொருளாதாரத்தைச் சின்னாபின்னமாக்கியிருப்பதால் பல குடும்பங்கள் செய்வதறியாது இந்தியாவுக்குள் ஊடுருவுகின்றன. இந்த நிலையிலேயே புகலிடக் கோரிக்கையாளர்களைத் தடுப்பதற்காக தமிழகத்தில் கரையோரக் கண்காணிப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், அண்மையில் கொழும்பு சிறையில் இருந்து தப்பியவர்களும் இந்தியாவுக்குள் ஊடுருவதற்கு வாய்ப்புக்கள் உள்ளதாகக் கருதப்படும் நிலையில் அவர்கள் தொடர்பான தகவல்களும் பரிமாறப்பட்டு தேடுதல்கள் இடம்பெற்று வருகின்றன. (கு-56)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மே 15

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டு நடுவர் சங்கத்தின் பொதுக் கூட்டம் சங்க அலுவலகத்தில் இன்று முற்பகல் 9.30 மணிக்கு தலைவர் கா.பீ.ஜெயவிந்தன் தலைமையில் நடைபெற்றவுள்ளது. இதில் அனைத்துத் தாச்சி நடுவர்களையும் கலந்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-9)



## கலப்பை திருட்டு

யாழ்ப்பாணம், மே 15

உரும்பிராய்கிருஷ்ணன்கோயில் பகுதியில் அமைந்துள்ள கமநல சேவைகள் திணைக்களத்தில் வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்தின் கலப்பை திருடப்பட்டுள்ளது எனக் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-27)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், மே 15

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை துறட்டிப்பனை அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளன.

இதன்போது பிரதம குருக்கள் சிவஸ்ரீ ச.மதுசூதனக்குருக்கள் அருளாசி உரையையும் வேதபாராயணத்தையும் நிகழ்த்தவுள்ளார். (ச)

## மாணவர்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

சாவகச்சேரி, மே 15

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்குக் கொரோனாத் தடுப்பூசியின் இரண்டாம் டோஸ் செலுத்தப்பட்டு வருகின்றது.

12 வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலைகளில் கடந்த 9ஆம் திகதி முதல் தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகின்றது.

இரண்டாம் டோஸ் செலுத்தாத மாணவர்கள் கட்டாயம் முகக்கவசம் அணிந்து வகுப்பில் இருக்கவேண்டும் என்று அந்தந்த வகுப்பாசிரியர்கள் அறிவித்திருந்தனர். அதனையடுத்து தடுப்பூசி செலுத்தாத மாணவர்கள் நேற்று சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்குச் சென்று தடுப்பூசியைப் பெற்றனர். (க-9)

## வீதி விபத்தில் இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், மே 15

வீதி விபத்தில் சிக்கி 21 வயது இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை நுணாவில் பொலிஸ் நிலையத்துக்கு அண்மித்த ஏ-9 வீதியில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் சாவகச்சேரி நோக்கி வந்த வாகனமும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச-9)

## மழை தொடரும்

கொழும்பு, மே 15

நாட்டின் தென்மேற்குப் பகுதியில் நிலவும் மழையுடனான வானிலை தொடரும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இன்று மழை பெய்யும் எனத் திணைக்களம் அறிவித்துள்ளது. வடக்கு மாகாணத்திலும் அநுராதபுரம் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 15

'நாடு எதிர்கொள்ளும் அரசியல் பொருளாதார நெருக்கடிகளும், மக்களும்' என்ற தலைப்பிலான விசேட கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையில் இடம்பெறும்.

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கலந்துரையாடலில் விசேட உரையை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர் ஆற்றுவார்.

தொடர்ந்து சபையோர் கருத்துரைகளுடன் திறந்த கலந்துரையாடலும் இடம்பெறும். (சு-இ)

## க.பொ.த. சாதாரண பரீட்சைக்கான அனுமதி அட்டை இணையத்தில்

கொழும்பு.மே 15

2021ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை, பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் பதிவிறக்கம் செய்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி தொடக்கம் ஜுன் மாதம் முதலாம் திகதிவரை பரீட்சை நடைபெறும். அதற்கான அனுமதி அட்டைகள் ஏற்கனவே தபாலில் அனுப்பப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் அனுமதி அட்டையை இதுவரை பெற்றுக்கொள்ளவில்லை என்றால், www.doenets.lk ஐப் பார்வையிடலாம். G.C.E.O/L 2021 ஐக் கிளிக் செய்து, அனுமதி எண்ணைச் சேர்த்து உள்ளடக்கத்தைப் பதிவிறக்கம் செய்யலாம்.

பெயர் மாற்றங்கள், தலைப்பு மாற்றங்கள் மற்றும் திருத்தங்கள் இருந்தால், www.onlineexams.gov.lk/cec என்ற இணைப்புக்குச் சென்று அந்தத் திருத்தங்களை ஒன்லைனில் செய்வதற்கும் வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன தெரிவித்துள்ளார். (கு-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ROOM வாடகைக்கு

நல்லூர் பின்வீதியில் Room வாடகைக்கு உண்டு. ஆண்கள் மட்டும் விரும்பத்தக்கது.

தொடர்பு 076 6088 338

## வாடகைக்கு

திருநெல்வேலியில் Room வாடகைக்கு உண்டு. (பெண்)

077 112 0314

## வேலைவாய்ப்பு

இலங்கையில் முதற்தர நிறுவனமான LOLCயில் பகுதி நேரமாகவோ அல்லது நிரந்தரமாகவோ வேலைவாய்ப்பு A/L சித்திபெற்ற மாணவர்கள் 2022 A/L பரீட்சை எழுதிய மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

076 890 3761

## பூசகர் தேவை

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் வதிவிட வசதியுடன் கூடிய சிறிய ஆலயத்திற்கு பூசகர் (பிராமணர்) தேவை.

077 608 7687

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நுணாவில் மத்தியில் A9 வீதியிலிருந்து 100m தூரத்தில் வைரவர் கோவிலுக்கு அண்மையில் 8 பரப்பு விஸ்தீரணமுள்ள பயன்தரு மரங்கள் உள்ள (மா, பலா, தென்னை தேக்கு) நல்ல தண்ணீர் கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

(CS 44616) (3/6)

076 759 7610, 075 151 0721

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், அரச உயர் பதவியிலுள்ளோர், அரச உத்தியோகத்தர் ஆசிரியர், வங்கியலாளர், நில அளவையாளர், சட்டத்தரணிகள், தனியார் துறையினர் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்களும் மிகப்பொருத்தமாக உடன் பெற்றுக் கொள்ளலாம். ஏழு நாட்களும் திறந்திருக்கும்.

264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.

077 138 7596
021 222 9306

(CS 44661) (3/6)


## மரண அறிவித்தல்



### கந்தசாமி கமலாதேவி

நவாலி வடக்கு புலவர் வீதி, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி கமலாதேவி நேற்று (14.05.2022) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தசாமியின் (S.K.S நல்லெண்ணெய் உரிமையாளர்) மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: செ. கந்தசாமி (கணவர்)
(S.K.S நல்லெண்ணெய் உரிமையாளர்)

(CS 44659) (3/6)


## வேலையாட்கள் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் உணவகத்திற்கு றைஸ் மற்றும் கொத்து ரொட்டி தயாரிப்பவர்கள் தேவை. (தங்கியிருந்து வேலை பார்ப்பவர்கள்)

தொடர்புகளுக்கு:
077 668 7688
077 711 0075

(CS 19791) 16


## எரிபொருளுடன் சென்ற ரயில் தடம்புரண்டது!

கொழும்பு, மே 15

ரம்புக்கனையில் இருந்து பேராதனை நோக்கி எரிபொருளை ஏற்றிச்சென்ற ரயிலொன்று தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. ரம்புக்கனை - கன்சலப் பகுதியில் இந்த விபத்து சம்பவித்துள்ளது. இதனால், ரம்புக்கனைக்கும் கண்டிக்கும் இடையிலான ரயில் சேவைகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. விபத்தை அடுத்து ரயிலுக்கும் ரயிலில் இருக்கும் எரிபொருளுக்கும் இராணுவத்தினரால் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (ம)

## மரண அறிவித்தல்



தோற்றம் 22 . 03 . 1942

மறைவு 13 . 05 . 2022

### திரு. சிற்றம்பலம் சிவலிங்கம்

இராமையன்கல் மில் முதலாளி - வவுனியா,கொழும்பு முன்னாள் வர்த்தகர்.

ஊர்காவற்றுறை சுருவிலைப் பிறப்பிடமாகவும்,கொழும்பு பம்பலப்பிட்டி அரச தொடர்மாடியை வதிவிடமாகவும் கொண்ட திரு.சிற்றம்பலம் சிவலிங்கம் அவர்கள் 13.05.2022 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற திரு.சிற்றம்பலம் வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும்,காலஞ்சென்ற திரு.சரவணமுத்து நல்லம்மா (திருநெல்வேலி) தம்பதிகளின் அருமை மருமகனும்,மரகதவல்லியின் (பாப்பா) ஆருயிர்க் கணவரும்,காலஞ்சென்ற Dr.ராசலிங்கம்,காலஞ்சென்ற இராசலட்சுமி மற்றும் மகாலட்சுமி,காலஞ்சென்ற ஆனந்த லட்சுமி மற்றும் சந்திரமதி,காலஞ்சென்ற சிறீஸ்கந்தராஜா மற்றும் அருள்கந்தராஜன்,நவநீதராஜன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சண்முகலிங்கம் (Northern Industry - Jaffna) மற்றும் Dr.மைத்ரி,காலஞ்சென்ற Dr.ஸ்ரீகாந்தன் மற்றும் பாலசுப்பிரமணியம், இந்திராணி,சோமாவதி மற்றும் திலகவதி,காலஞ்சென்ற சொர்ணலிங்கம் மற்றும் கோமளா, Dr.முத்துலிங்கம்,புனிதவதி ஆகியோரின் அருமை மைத்துனரும்,சிவசங்கர்,பவதாரணி,பிரதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,கிர்ஜா,திவாகரன்,தர்ஷனா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் விவேகா,விதுஷா,பவ்யா,திவ்யா,பிரதீத்,அட்ரிகா,சிவா ஆகியோரின் அருமை பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக புதன்கிழமை 18.05.2022 காலை 10.00 மணியிலிருந்து பி.ப 6.00 மணிவரை பொரளை ஜெயரட்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, ஈமக்கிரியைகள் 19.05.2022 வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் பொரளை ஜெயரட்ன மலர்ச்சாலையில் நடைபெற்று கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

No 2 "L" தொடர்மாடி
பம்பலப்பிட்டி,
கொழும்பு - 04.
011 2501850,0777586012

மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## விழிநீர்த் துளிகள் சுரக்க இறுதிப் பயணம்

அன்னை மடியில் 15 . 10 . 1955

ஆண்டவன் அடியில் 13 . 05 . 2022



### விமலாதேவி தங்கலிங்கம்

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கணேசபுரம் கிளிநொச்சி, மற்றும் ஸ்பெயினை வதிவிட மாகவும் கொண்ட அமரர் விமலாதேவி தங்கலிங்கம் அவர்கள் கடந்த (13.05.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார் என்பதனை ஆழ்ந்த மன வேதனையுடன் விழிநீர் சுரக்க அறியத் தருகின்றோம்.

அன்னார் காலஞ்சென்ற உடுப்பிட்டி தங்கராசாப்பத்தர், கனகாம்பிகை ஆகியோரின் பாசமிகு இரண்டாவது மகளும், காலஞ்சென்ற வரணி இராசையாப்பத்தர் இராசலட்சுமி ஆகியோரின் அருமை மருமகளும், தங்கலிங்கம் (ஸ்பெயின்), அவர்களின் அன்பு மனைவியும், தர்மானந்த் (ஸ்பெயின்), அனுஸ்பிரியா (பிரான்ஸ்), திஷாந்த் (ஸ்பெயின்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தமிழ்ப்பிரியா (கனடா), சுதாந்தன் பிரான்ஸ்), உமாஜனி (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரான்ஸ் சுபிக்ஷா, ஆதீஷா, ஆதீஷன், சக்திஷா மற்றும் இலங்கை குட்டி, விமலா ஆகியோரின் அருமை பேர்த்தியும், காலஞ்சென்ற ஆறுமுகானந்தாஸ்வரன், தவமணிதேவி, தவேஸ்வரன், விமலேஸ்வரன், விக்கினேஸ்வரன், காலஞ்சென்ற தங்கேஸ்வரன், மற்றும் சசிகலாதேவி, இராஜேஸ்வரன், இறஞ்சினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலேஸ்வரி (கனடா), திலகேஸ்வரி (இங்கிலாந்து) ஈஸ்வரலிங்கம் (இலங்கை), கணேசலிங்கம் (கனடா), இராஜலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.05.2022) ஞாயிற்றுக்கிழமை 08.00 - 10.30 மணி வரை Calle Comuneros De Castiio is மலர்ச்சாலையில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்

தங்கலிங்கம் - 0034612246246
தர்மானந்த் - 0034612200002
அனுஸ்பிரியா - 0033605909216
திஷாந்த் - 0034632166666

(CS 18246) (3/6)

## தென்மராட்சியில் விலங்குகளால் காயப்படுவோர் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மே 15

தென்மராட்சிப் பிரதேசத்தில் நாய், பூனை போன்ற விலங்குகளால் காயப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனவே நாய், பூனை, அணில், குரங்கு, கீரி போன்ற விலங்குகளின் கடிக்காயம், நகக்கீறல் போன்றவற்றுக்கு உள்ளாகும் அனைவரும் காலதாமதமின்றி சாவகச்சேரி ஆதார மருத்துவமனையை அணுகி மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுமாறு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினர் தெரிவித்துள்ளனர்.

(க-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** நட்புகளால் ஆதாயம் காண்பீர்கள். உற்சாகமான நாள். திட்டமிட்டு செயற்படும் ஒன்றில் வெற்றி உண்டாகும். உறவினர்களுடன் மனக் கசப்பு விலகி ஒன்றுசேர்வீர்கள்.

**இடபம்:** வீட்டில் இருந்த சங்கடம் விலகி மகிழ்ச்சி உண்டாகும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். நினைத்தது வெற்றியாகும். எதிர்பார்த்திருந்த லாபகரமான தகவல் இன்று வந்து சேரும்.

**மிதுனம்:** முக்கியப்பணி ஒன்றில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். நேற்றிருந்த மனஅழுத்தம் விலகுவதால் தைரியம் கூடும். இழுபறியாக இருந்த செயல் முடிவு பெறும்.

**கடகம்:** மனதிற்கினிய நிகழ்ச்சி நடைபெறுவதால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பணியிடத்தில் உண்டான பிரச்சினை மறையும். நிம்மதி காண்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**சிம்மம்:** வெளிவட்டாரத்தில் மதிப்பும், மரியாதையும் கூடும். நட்பு வட்டம் விரியும். எதிர்பாராத வருமானத்தால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். நினைத்த செயலில் வெற்றி உண்டாகும்.

**கன்னி:** இன்று தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிடைக்காமல் போகும். திடீர் என்று ஏற்பட்ட நெருக்கடியை சமாளிக்க வேண்டியதாக இருக்கும். தொழிலில் புதிய நெருக்கடி உண்டாகலாம்.

**துலாம்:** நேற்றைய இழுபறியான ஒரு வேலை இன்று முடிவுக்கு வரும். குழப்பம் உண்டாகி செயலில் தடுமாற்றத்தை காண்பீர்கள். பிரச்சினைகள் தோன்றி மறையும்.

**விருச்சிகம்:** திடீர் செலவு ஏற்பட்டு உங்களைத் திண்டாட்டத்தில் விடும். உங்கள் கௌரவத்துக்காக ஆடம்பர செலவுகளை மேற்கொள்வீர்கள். பழைய கடன்களை அடைப்பீர்கள். நிம்மதியான நாள்.

**தனுசு:** பணியிடத்தில் உங்கள் உழைப்புக்கான மரியாதை ஏற்படும். தொழிலில் லாபகரமான போக்கு ஏற்பட்டு வரவு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் ஆர்வம் கூடும்.

**மகரம்:** தொழிலில் முதலீடு செய்வதால் லாபம் அதிகரிக்கும். நீண்ட நாள் பிரச்சினை ஒன்று முடிவுக்கு வரும். மகிழ்ச்சி காண்பீர்கள். எதிர்காலம் குறித்த பயம் வந்து போகும். மனஅமைதி தேவை.

**கும்பம்:** இழுபறிகளுக்குப் பின் உங்கள் முயற்சி நிறைவேறும். கடந்த இரண்டு நாள்களாக இருந்த நெருக்கடி விலகும். உறவினர் ஒருவரால் குடும்பத்தில் நன்மை உண்டாகும்.

**மீனம்:** வெளிஇடங்களில் மதிப்பு, மரியாதையை குறைத்துக்கொள்ளாதீர்கள். பணியிடத்தில் மேலதிகாரியால் நெருக்கடி உண்டாகும். உங்கள் செயல்களில் தடை ஏற்பட்டு பின் நிறைவேறும்.

## வடகொரியாவில்

# 21 பேர் கொரோனாவுக்குப் பலி 18 ஆயிரம் பேருக்குத் தொற்று

**பியாங்யாங், மே 15**

**வடகொரியாவில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி 21 பேர் பலியாகியுள்ளனர் எனவும் இதுவரை 18 ஆயிரம் பேருக்கு தொற்றுப் பாதிப்பு உறுதியாகியுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.**



வடகொரியா, கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனைகளால் உலகையே அதிரவைத்த நிலையில் தற்போது கொரோனா அலையால் பாதிக்கப்பட்டுள்ளது.

இரண்டரைக் கோடி மக்கள் தொகையைக் கொண்ட வடகொரியாவில் மருத்துவக் கட்டமைப்பு வசதிகள் போதுமானளவு இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. வடகொரியாவில் நேற்றுமுன்தினம் ஒருவருக்கு தொற்றுப்பாதிப்பு கண்டறியப்பட்டது.

இந்த நிலையில் அங்கு 21 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர் என அதிர்ச்சித் தகவலை வடகொரியா அரசு ஊடகம் வெளியிட்டுள்ளது.

இதேவேளை, அங்கு ஒரு லட்சத்து 87 ஆயிரம் பேர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு, தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதுகுறித்து சுகாதார நிபுணர்கள் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்கனவே கொரோனாத் தொற்று இருந்துள்ளது. இப்போதுதான் அதிகாரிகள் அறிவித்துள்ளனர். அத்துடன் ஒமிக்ரோன் மாறுபாடும் தலைநகர் பியாங்யாங்கில் வெடித்துள்ளது. ஊரடங்கு, பொது முடக்கக் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவித்தனர்.

இந்தநிலையில் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன், முதன்முறையாக முகக்கவசம் அணிந்து கூட்டத்தில் பங்கேற்ற காட்சிகள் வெளியாகியுள்ளன. (ச-இ)

# ஐக்கிய அரபு இராச்சிய மன்னர் காலமானார்

*40 நாள்கள் துக்கதினம் அனுஷ்டிப்பு*



ஐக்கிய அரபு இராச்சியத்தின் அதிபர் ஷேக் கலீஃபா பின் சையத் அலி நஹ்யான் உடல்நலக்குறைவால் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

அவருக்கு வயது 74.

அவரது மறைவுக்கு உலக நாடுகள் பலவும் இரங்கல் தெரிவித்து வருகின்றன.

இவர் உலகின் பணக்கார மன்னர்களில் ஒருவராகக் கருதப்பட்டவராவார்.

இதேவேளை அவரின் மறைவையடுத்து அந்த நாட்டில் 40 நாள்கள் துக்கம் அனுஷ்டிக்கப்படும் எனவும் அமைச்சகங்கள், அரசுத் துறைகள், தனியார் நிறுவனங்கள் என அனைத்தும் மூன்று நாள்களுக்கு மூடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# ஜசிந்தா ஆர்டெர்னுக்கு கொரோனாத் தொற்று

வெலிங்டன், மே 15

நியூஸிலாந்து பிரதமர் ஜசிந்தா ஆர்டெர்னுக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இந்தத் தகவலை அந்த நாட்டின் பிரதமர் அலுவலகம் தெரிவித் துள்ளது.

அவருக்கு கொரோனா வைரஸுக்கான அறிகுறிகள் லேசாக உள்ளன எனவும், மேலும் அவர் ஏழு நாள்களுக்கு வீட்டில் தனிமைப்படுத்தப்படுவார் என்றும் அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# தாயக மண்ணில் அரங்கேறிய இனப்படுகொலையை மறக்கவும் மாட்டோம்: மன்னிக்கவும் மாட்டோம்

இறுதிக்கட்டப்போரின் போது 2009ஆம் ஆண்டு மே மாதத்தில் இதே நாளில் உதயனில் வெளியான செய்திகள் நினைவூட்டலுக்காக.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டு

# இரண்டு மாதத்தில் 21ஆவது திருத்தம்

**கொழும்பு, மே 15**

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கம் நியமிக்கப்பட்டு இரண்டு மாதங்களுக்குள் அரசமைப்பின் 21ஆவது திருத்தம் நிறைவேற்றப்படும் என்று தகவல் வெளியாகியுள்ளது.**

சுயாதீன ஆணைக் குழுக்களுக்கு அதிகாரம் வழங்குதல் மற்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறைமையின் அதிகாரங்களைக் குறைத்தல் போன்ற விடயங்கள் உள்ளடக்கிய அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களைக் கருத்திற்கொண்டு 21 ஆவது அரசமைப்பு திருத்தம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

ஏற்கனவே, பல கட்சிகள், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் 21ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளன. 21ஆவது திருத்தச் சட்டத்தை விரைவில் அறிமுகப்படுத்த வேண்டும் என்று பல எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடந்த நாள்களில் ஊடக சந்திப்புகள் நடத்திக் கூறியுள்ளனர்.

அத்துடன், 21ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டால் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கத் தயார் என்று சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தப் பின்னணியிலேயே அரசமைப்பின் 21ஆவது திருத்தம் கொண்டுவரப்பட நகர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(எ-இ)

## காலிமுகத்திடல் வன்முறையால் 40 தனியார் பேருந்துகள் தீக்கிரை

கொழும்பு, மே 15

காலிமுகத்திடலில் அண்மையில் இடம்பெற்ற வன்முறையில், அலரிமாளிகைக்கு வாடகை அடிப்படையில் அனுப்பப்பட்ட சுமார் 40 பேருந்துகள் புதுப்பிக்க முடியாத அளவுக்குத் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன என்று தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவிக்கையில்;

பொதுஜன பெரமுனக் கட்சிக் கூட்டம் என்று குறிப்பிட்டே சுமார் 60 தனியார் பேருந்துகளை வாடகை அடிப்படையில் முன்னாள் அமைச்சர்கள் பெற்றுக் கொண்டனர். 60 பேருந்துகளில் 8 பேருந்துகள் மாத்திரம் ஆதரவாளர்களின் சொந்தப் பேருந்துகள். ஏனைய பேருந்துகள் தனியார் பேருந்து உரிமையாளர்களுடையவை.

காலிமுகத்திடல் போராட்டத்தைத் தொடர்ந்து தனியார் பேருந்துகள் மீது தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட் டன, அவை தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. சுமார் 40 பேருந்துகள் முழுமையாகத் தீக்கிரையாகியுள்ளன. அவற்றின் உதிரிப்பாகங்களும் திருடப்பட்டுள்ளன.

தீக்கிரையாக்கப்பட்டுள்ள பேருந்துகளுக்கு காப்புறுதிகளும் வழங்கமுடியாது என்று காப்புறுதி நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன. எனவே தனியார் பேருந்துகள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் விசேட விசாரணைகளை முன்னெடுக்குமாறு பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளுக்கு இனி தனியார் பேருந்துகளை வழங்கப் போவதில்லை என்று கொள்கை ரீதியில் தீர்மானம் மேற்கொண்டுள்ளோம் - என்றார். (க-இ)

## தாக்குதல் நடத்துவதற்காக புலிகள் ஒருங்கிணைவாம்!

கொழும்பு, மே 15

இலங்கை கடும் பொருளாதார அரசியல் நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகள் தாக்குதலை மேற்கொள்வதற்காக ஒன்றிணைகின்றனர் என இந்திய நாளிதழான தி இந்து நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

அதிகரித்து வரும் வன்முறைகளுக்கு மத்தியில் இலங்கை அவசரகால நிலையை இரண்டு தடவை பிரகடனம் செய்துள்ள நிலையில், சர்வதேச தொடர்புகளைக் கொண்டுள்ள புலம்பெயர் தமிழர்களின் ஒரு பகுதியினர் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் படையினருக்கும் இடையிலான மோதலில் தங்கள் பிரசன்னத்தையும் வெளிப்படுத்த முயல்கின்றனர் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தன்று தாக்குதலை மேற்கொள்வதற்கு சில முன்னாள் போராளிகள் திட்டமிட்டுள்ளனர். தங்கள் திட்டங்களை நிறைவேற்ற சில முன்னாள் போராளிகள் தமிழ் நாட்டுக்குள் நுழைந்துள்ளனர் என்று புலனாய்வு தகவல்களை மேற்கோள்காட்டி சில தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

மாநில புலனாய்வு மற்றும் பொலிஸ் துறையைச் சேர்ந்த விசேட குழுவினர், ஆயிரம் கிலோமீற்றர் கடலோரப் பகுதியை கண்காணிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று அந்த நாளிதழ் தெரிவித்துள்ளது.

(எ-இ)

## மக்களின் கோரிக்கைகளுக்கு மாறாகச் செயற்படமாட்டோம்

### சஜித் தெரிவிப்பு



கொழும்பு, மே 15

அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டத்தில் இறங்கியுள்ள மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றவே நாமும் திட்டமிட்டுள் ளோம். மக்களுக்கு துரோகம் இழைக்கும் முடிவுகளை எடுக்க மாட்டோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவித்தார்.

காலிமுகத்திடல் ஜனநாயகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள 'சர்வ கட்சிப் போராளிகள்' குழுவினர், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை நேற்றுச் சந்தித்ததோடு, அவர்களின் கோரிக்கை அடங்கிய பிரேரணையும் கையளித்தனர்.

அதனை ஏற்றுக்கொண்ட சஜித் மேலும் தெரிவிக்கையில்;

ஜனாதிபதி பதவிவிலக வேண்டும் என்ற நிலைப்பாடானது நிலையானது. குறிப்பிட்ட காலவரையறைக்குள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குதல், 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை மீளக்கொண்டு வருதல், நிர்வாக மற்றும் நீதித்துறை அதிகாரங்களை நிறுவுதல் போன்ற ஜனநாயகச் செயற்பாடுகளுக்கான அர்ப்பணிப்பில் ஐக்கிய மக்கள் சக்தி மாற்றமின்றி உறுதியாக உள்ளது - என்றார்.

(க-இ)

## வன்முறைகளைத் தூண்டுவதால் இளைஞர்களின் எதிர்காலம் வீண்

### நிமல் லன்சா தெரிவிப்பு

இளைஞர்களிடையே நாட்டில் வன்முறைகளைத் தூண்டுவதால் அவர்களின் எதிர்காலமே வீணாகி விடும். மற்றவர்களின் கனவுகளும் அழிந்துவிடும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்சா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது முகநூலில் பதிவிட்டுள்ளதாவது:-

நாட்டின் எதிர்காலத்தைக் கையில் எடுக்கவிருக்கும் இளைஞர்களிடையே வன்முறையைத் தூண்டுவது தான் தீவிரமான நிலைமை. இவ்வாறான வன்முறைகளில் இருந்து இளைஞர் குழுக்களை விடுவித்து அவர்களைச் சரியான பாதையில் வழிநடத்த வேண்டும். எதிரியின் வீட்டுக்குத் தீ வைக்காதீர்கள். இந்த மாதிரியான அழிவை வேறு யாருக்கும் செய்யாதீர்கள். ஏனென்றால் ஒருவருடைய கனவு, எதிர்காலம், பெருமை மற்றும் மகிழ்ச்சி அதற்குள் உள்ளது. உங்கள் மத போதனைகளின்படி செயற்படுங்கள் - என்றுள்ளது. (க-இ)

# மஹிந்தவுக்குச் செய்த தீங்குக்கு நிச்சயம் அனுபவிப்பார் கோத்தா

### உதயங்க வீரதுங்க சாபம்

கொழும்பு, மே 15

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு கொடுத்த துன்ப துயரங்களுக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நிச்சயமாக அனுபவிக்க நேரிடும் என ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவரும், ராஜபக்ச குடும்பத்தின் நெருங்கிய உறவினருமான உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

தனது முகநூல் பக்கத்தில் மஹிந்த ராஜபக்சவுக்காகப் பதிவிட்டுள்ள உருக்கமான பதிவொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

வரலாற்றில் எந்தவொரு தலைவரும் செய்யாத வகையில் மஹிந்த ஆதரவாளர்களை துரத்தி துரத்தி தாக்கிய ரணிலை பிரதமர் பதவியில் அமரச் செய்ததன் பின்னணியில் இருப்பது மேற்குலகின் சதியேயாகும்.

தன்னை ஜனாதிபதி ஆசனத்தில் அமரச் செய்த சகோதரன் உள்ளிட்ட அணியை மனிதாபிமானமற்ற சூழ்ச்சியால் வெளியேற்றிய பாவத்தை எனது அன்னை இன்று உயிருடன் இருந்திருந்தால் ஒரு போதும் அனுமதித்திருக்க மாட்டார். அதிகாரம் கைவிட்டு போகும்போது கோத்தாபயவுக்கு இந்த பாவம் நிச்சயமாக புரியும். மகிந்த ராஜபக்சவுக்கு இழைத்த துன்ப துயரங்களுக்கான எதிர்வினைகளை கோத்தாபயவுக்கு விதி நிச்சயமாக வழங்கும் - என்று அந்தப் பதிவில் தெரிவித்துள்ளார்.

(எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வாரத்துக்கான பெற்றோலே இருப்பு

கொழும்பு, மே 15

**நாட்டில் மட்டுப்படுத்தப்பட்ட பெற்றோலே இருப்பில் உள்ளது. அதுவும் அடுத்த வாரத்துக்கு மாத்திரமே போதுமானது என்று இலங்கை தனியார் எரிபொருள் பவுஸர் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

ஒரு தொகை டீசலை ஏற்றிய கப்பல் நாட்டை வந்தடைவுள்ளது. அதற்கு அரசாங்கம் பணம் செலுத்தத் தவறினால் எதிர்வரும் 17ஆம் திகதி மீண்டும் மற்றொரு கப்பல் வரும். தற்போது மருத்துவ மனைகள், பாதுகாப்புப் படைகள் மற்றும் பிற அத்தியாவசிய சேவை வழங்குநர்களுக்கு மாத்திரமே டீசல் விநியோகிக் கப்படுகின்றது. அத்துடன் பெற்றோல் மாத்திரமே எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விநியோகிக்கப் படுகிறது என்று சங்கத்தின் தலைவர் சாந்த சில்வா தெரிவித்துள்ளார். (க-இ)

## செவ்வாய்க்குப் பின்னர் எரிபொருள் இருக்காது



கொழும்பு. மே 15

நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமைக்குப் பின்னர் நாட்டில் எரிபொருள் நெருக்கடி மோச மடையும் என்று தொழிற்சங்கவாதியான ஆனந்த பாலித தெரிவித்துள்ளார். ஏப்ரல் மாதம் 29ஆம் திகதிக்குப் பின்னர் அரசாங்கம் இந்தியாவிலிருந்து டீசலை இறக்குமதி செய்யவில்லை. பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி முதல் 95 ஒக்ரேன் பெற்றோலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எரிபொருள் இறக்குமதியின் அடிப்படையில் ஒரு தரகுக்கட்டண மாபியா உள்ளது. இதுவே எரிவாயுத் தட்டுப்பாட்டுக்கு வழிவகுத்துள்ளது. எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பல தொழிற்சாலைகளை மூடவேண்டிய அபாயம் ஏற்பட்டுள்ளது - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## பொலிஸ் நிலையம் முன்பாக எரிவாயுக்காகப் போராட்டம்

கொழும்பு,மே 15

எரிவாயு பெற்றுத் தரக்கோரி கொழும்பு கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக மக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கொழும்பு கோட்டை நோக்கிய வீதியை மறித்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை - நாவின்ன சந்தியில் உள்ள ஹைலெவல் வீதியில் எரிவாயு கோரி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. அந்தப் பகுதியில் வாகனப் போக்கு வரத்தும் தடைப்பட்டது. ஹோமாகம மற்றும் கொலன்னாவப் பிரதேசங்களிலும் எரிவாயு வழங்கக் கோரி வீதியை மறித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (க-இ)


**பூமாலை கட்டுவதற்கு ஆள் தேவை**

நல்லூர் கோயில் அருகில் உள்ள பூமாலை கட்டும் கடைக்கு ஆள் தேவை. பெண்கள் விரும்பத்தக்கது.

077 348 4932

**பணிப்பெண் தேவை**

யாழ் நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.

076 751 8138

**வேலையாட்கள் தேவை**

யாழ் நகரிலும் திருநெல்வேலியிலும் உள்ள வியாபாரஸ்தாபனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

1. கணக்கு பதியுனர் 2. காசாளர்
3. களஞ்சியக்காப்பாளர் 4. சிட்டை எழுதுனர்
5. பணசேகரிப்பாளர் 6. விற்பனையாளர்
7. சமையலாளர்

சம்பளம் 30,000/= மேல் வழங்கப்படும்.
ஆண் பெண் இருபாலரும் தேவை.

077 843 5502

**ஒப்பரேற்றர்கள் தேவை**

லேத் மெசின், ஆணி மெசின், முள்ளுக்கம்பி மெசின்களில் வேலை செய்த அனுபவம் உள்ளவர்களும் பழகவிரும்புபவர்களும். 10 HP, 15 HP Second hand மோட்டார்களும் தேவை.

077 252 3155
wirenail@hotmail.com

**இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்**

பிரிவு 39

- Diploma in English / Spoken English
- Diploma in ICT
- Diploma in Singala
- Diploma in Political Science
- Diploma in Psychology & Counselling

■காலம்:- 3 மாதங்கள் ■சான்றிதழ் வழங்கப்படும்.

- Diploma in Law (pre-law degree)-1 Year

ஆரம்பம்:
21,22/05/2022 . 10.00AM

IPS திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P:- 021 434 0229
076 685 2529

**காணி விற்பனைக்கு**

சுன்னாகம் வீதி, புத்தூரில் நில.பர.05 குளி 05 விஸ்தீரணம் கொண்ட கொழும்பு சுப்பர்மார்ட் பிரைவட் லிமிடட் நிறுவனமும் அத்துடன் இணைந்த வீடும், சுற்று மதிலும், கிணறும், அமைந்த வியாபார நிலையமானது விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு:- 071 480 3765

**வீடு வாடகைக்கு**

அண்மையில் புனருத்தாரணம் செய்யப்பட்ட விசாலமான, வசதியான வீடு சுண்டுக்குளி மகளீர் கல்லூரி, சென்.ஜோன்ஸ் ஆண்கள் பாடசாலை, பலசரக்கு, மரக்கறி கடைகளுக்கு அண்மையில் வாடகைக்கு உண்டு.

வீட்டின் அம்சங்கள்

- விசாலமான வரவேற்பறை
- 4 அறைகள் (குளிரூட்டப்பட்ட, மின்விசிறி பொருத்தப்பட்ட அறைகள்)
- வசதியான சமையலறை
- நவீன குளியலறை கழிப்பறை

தொடர்பு : 076 527 4305

**வேலைவாய்ப்பு**

இலங்கையின் முதற்தர நிறுவனங்களில் ஒன்றான LOLC இன் கோண்டாவில் கிளைக்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. Walk In Interviw Monday To Wednesday. 8.30 AM

தொடர்பு:- 077 560 2579

**"YWCA" கட்டடம் வாடகைக்குண்டு**

யாழ்நகருக்கு மிக அண்மையில் பிரதானவீதியில் கருத்தரங்குகள், வைபவங்கள், காட்சியறைகள், பிரத்தியேக வகுப்புகள் நடத்துவதற்கு ஏற்ற கட்டடம் வாடகைக்கு உண்டு. வாகன தரிப்பிடவசதியுடன் கூடியது.

(cs 44657) (2.6) தொடர்பு: 077 554 6648

**வெளிவாரிப் பரீட்சைகள் மற்றும் துரித மீட்டல் வகுப்புக்கள்-2022**

✔கலை முதற் தேர்வு - 2022 (பழைய பாடத்திட்டம்) (இறுதிச் சந்தர்ப்பம்) வகுப்புக்கள் 21-05-2022 ஆரம்பமாகின்றன

✔சகல கலைத்துறைப் பாடங்களுக்குமான துரித மீட்டல் ஆரம்பமாகவுள்ளதால் நேரடியாக/ Zoom ஊடாக தொடர்புகொண்டு தங்கள் பதிவினை உறுதிப்படுத்தவும்.

மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர்:
077 465 2439 / 077 6021 794
தொடர் கொள்ளவும்.

15.05.2022 இணைப்பாளர்.

**மஞ்சள் விற்பனைக்கு**

சிகிரியாவிலுள்ள எமது விவசாயப் பண்ணையில் மஞ்சள் விற்பனைக்குண்டு. மொத்தமாக கொள்வனவு செய்பவர்கள் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:-Dr.Aruna
077 735 0950, 077 742 8702


"ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமக"

## மரண அறிவித்தல்

### மணிவேலழகன் நாகவிபூசன்



ஊரெழு மேற்கு சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மணிவேலழகன் நாகவிபூசன் அவர்கள் கடந்த (12.05.2022) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மணிவேலழகன் லோமாவதி தம்பதியரின் செல்வப்புதல்வனும், வடிவேலு-மணியம்மா தம்பதியர் மற்றும் கதிரேசு நவரத்தினம் தம்பதியர் ஆகியோரின் ஆசைப் பேரனும், மகிழரசி, நிஷாந்தினி, பத்மவிதுர்ஷன் ஆகியோரின் அன்புச் சகோதர னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பொக்கனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

(CS 19718)1-6

## மரண அறிவித்தல்



தோற்றம்: 09.04.1954 மறைவு: 13.05.2022

### திருமதி மேசி ஜெயறோசா யேசுராசா

(விஞ்ஞான ஆசிரியை)

குருநகரைச் சேர்ந்த, யா/புனித பத்திரிசியார் கல்லூரியின் ஓய்வுநிலை ஆசிரியை திருமதி மேசி ஜெயறோசா யேசுராசா அவர்கள் 13.05.2022 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற எசேக்கியேல் (ஆசிரியர்), றெஜினா (ஆசிரியை) தம்பதிகளின் அன்பு மகளும்; திரு.அ.யேசுராசா (ஓய்வுபெற்ற தபாலதிபர் - எழுத்தாளர்) அவர்களின் அன்பு மனைவியும்; காலஞ்சென்ற அத்தனாஸ், செபஸ்தியானா தம்பதிகளின் மருமகளும்; யோகருமார் (சிங்கப்பூர்), மேளின் (அவுஸ்திரேலியா), ஜெயக்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும்; பவானி (சிங்கப்பூர்), யேசுரட்ணம் (அவுஸ்திரேலியா), முத்துராணி; அந்தோனியாப்பிள்ளை, கிறிஸ்தீனம்மா, ஜெயசீலன், ஜெயசீலி, அடைக்கலமலர், சகாயமலர் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 16.05.2022 (திங்கள்) பி.ப.3.00மணிக்கு நல்லடக்கத்துக்காக, இல.01 ஓடைக்கரை வீதியிலுள்ள அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு, யாழ்ப்பாணம் மரியன்னை பேராலயத்தில் நிகழ்த்தப்படும் இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து, புனித பத்திரிசியார் கல்லூரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் :
அ.யேசுராசா (கணவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி இராசையா கமலாதேவி

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், தாவடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா கமலாதேவி கடந்த (12.05.2022) அதிகாலை 12.30 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சற்குணம் முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், வைரமுத்து இராசம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும், குகவரதன் (இலண்டன்), சத்தியா, புனிதவதி (கனடா), பத்மா (இலண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தி (இலண்டன்), உதயகுமாரன், சோதியலிங்கம் (கனடா), சதீசன் (இலண்டன்), ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், மகேஸ்வரி, மகாதேவன், நடராசா, பரமேஸ்வரி, அன்னபூரணம் மற்றும் சிவனேசம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கஜானி, லக்சனா (இலண்டன்), தனஸ்ரீ, கோபி - அமிர்தா, கஜனா, வெங்கடேஸ் (கனடா), சுபீட்சன், சுயேட்சன் (இலண்டன்), ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சேயோனின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டு கொள்ளுகிறோம்.

(CS 44650 (3/6))

தகவல் :
குடும்பத்தினர்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
28
.
03
.
1965



மறைவு
25
.
05
.
2021

## அமரர் சின்னராசா சிவநேசன்

நாள்கள் முன்னூற்று அறுபத்தைந்து தான் கடந்ததுவோ!
நீங்கள் மண்ணுலகம் நீங்கி விண்ணுலகம் சென்று!
அப்பா! உங்கள் உருவம் தான் மண்ணுலகை விட்டு பிரிந்தது.
ஆனால் என்றும் எம்மனங்களில் உணர்வாய் கலந்துள்ளீர்கள்!
எம் நினைவுகள் அழியும் வரை உங்கள் நினைவுகள்
- எம்மைவிட்டு விலகாது.

எம் சுவாசக்காற்றில் நீக்கமற நிறைந்துள்ள அப்பா!
நீங்கள் என்றும் எங்களை வழிநடத்துங்கள்
அப்பா! நீங்கள் இறைவனின் கமலப்பாதங்களில்
பெரும் பேறு பெற்றுய்ய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

M.S. Lane
கோண்டாவில் கிழக்கு. (cs.39209) (2.6)

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டி அழைப்பும், நன்றி நவிலலும்



## அமரர் யோசேப் ஜெகதீஸ்வரன்

(காந்தி, தமிழவன்)

(தமிழ் ஆசிரியர், கிளி/பிரமந்தனாறு மகாவித்தியாலயம்)

தாயின் மடியில்
04.08.1981

இறைவனடியில்
01.04.2022

அன்புள்ளம் கொண்ட உங்களுக்கு
- இப்படி ஒரு விதியா?
தேடிய தலைவா! தெய்வமாகினீரோ?
ஈர விழிகளுடன் காத்திருக்கிறேன்
பக்கத்தில் வந்து துணையாகிவிடும்.

புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், அளவெட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட யோசேப்-ஜெகதீஸ்வரன் (காந்தி, தமிழவன்) அவர்கள் கடந்த 01.04.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

எங்கள் பாசதீபம் இவ்வுலகை விட்டுச்சென்ற 45ஆம் நாள் நிறைவும், அந்தியேட்டி நிகழ்வும் 15.05.2022 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அழைப்பிதழ் கிடைக்காத உறவுகள் தனிப்பட்ட அழைப்பாக இதனை ஏற்றுக்கொண்டு இந்நிகழ்வில் கலந்துகொள்ளவும். அத்துடன் எமது இழப்பை அ[illegible]து இதுவரை சரீர உதவிகளையும் தந்து பக்கத்துணையாய் இருந்தவர்களுக்கும், நேரில் வருகை [illegible]ந்தோர்க்கும், முகநூல் இணையத் தளங்களின் ஊடாக எமது துயரை உ[illegible]கம் முழுவதும் பகிர்ந்தோர்க்கும், தொலைபேசி மூலமாக எமக்கு ஆறுதல் கூறியோருக்கும், அஞ்சலி நிகழ்வினை நடாத்திய கிளி/பிரமந்தனாறு மகாவித்தியாலய பாடசாலை சமூகம், மற்றும் புங்குடுதீவு உறவுகளுக்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டோர்க்கும் நன்றிகள் பல உரித்தாகட்டும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

ஆசிரியமணி செல்லையா வீதி,
அளவெட்டி தெற்கு, அளவெட்டி

077 288 7537

மனைவி
குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு

"இருந்தாலும் மறைந்தாலும் பெயர் சொல்ல வேண்டும் இவர் போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்"

தோற்றம்
03
.
12
.
1932



மறைவு
16
.
04
.
2022

கடந்த 16.04.2022 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

## அமரர் பொன்னு இராசையா

அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் நேற்று (14.05.2022) சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (16.05.2022) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்கு தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

'இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்.'

[illegible] ...ரி அம்மன் வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்
077 070 3472

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் தாக்குதலா? வெறும் புரளி
# பாதுகாப்பு அமைச்சு மறுப்பு

கொழும்பு, மே 15
விடுதலைப் புலிகள் மீண்டும் ஒன்றிணைந்து தாக்குதல் நடத்தவுள்ளதாக வெளியான த ஹிந்து நாளிதழின் செய்தி வெறும் புரளி என்று பாதுகாப்பு அமைச்சு மறுப்புத் தெரிவித்துள்ளது.

அவ்வாறான உளவுத் தகவல்கள் ஏதும் தமக்குக் கிடைக்கவில்லை என்றும் தற்போதைக்கு புலிகளின் செயற்பாடுகள் குறித்த எந்தவித தகவல்களும் இல்லை யென்றும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

### முள்ளிவாய்க்கால்...

2009 ஆம் ஆண்டு இறுதிக்கட்டப்போரின் போது ஸ்ரீலங்கா அரச படைகளின் தாக்குதலில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் சிறு நிலப்பரப்புக்குள் சிக்குண்டு உயிரிழந்தனர். முள்ளிவாய்க்கால் இனவழிப்பை தமிழர்கள் ஆண்டு தோறும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரமாகக் கடைப்பிடித்து வருகின்றனர். மே 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் முற்றத்தில் எழுச்சியுடன் நினைவேந்தலை நடத்தி வருவது வழமை.

கடந்த காலங்களிலும் பாதுகாப்புத் தரப்பின் பல்வேறு கெடுபிடிகளையும் தாண்டி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கடைப்பிடிக்கப்பட்டது. அதேபோன்று இந்த ஆண்டும் பாதுகாப்புத் தரப்பு எத்தகையை கெடுபிடிகளை, எத்தகைய வடிவத்தில் விதித்தாலும் அதை உடைத்தெறிந்து உணர்வுபூர்வமாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கடைப்பிடிக்கப்படும் என்று பொது அமைப்புக்கள் உறுதிபடத் தெரிவித்துள்ளன. (அ-ஒ-5)

### தேச...

கடனம் செய்வோம் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ.சேனாதிராசா அறைகூவல் விடுத்துள்ளார்.

'இனப்படுகொலை நடைபெற்றது என்பதை நிரூபிப்பதற்காகத்தான் ஒவ்வொரு ஆண்டும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கடைப்பிடிக்கப்படுகின்றது. இனப்படுகொலையை பிரதிபலித்து நிற்கும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இலங்கையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வை எட்டுவதற்கு பலமானதாக இருக்கும் என்று நம்புகின்றோம். மே 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவிடத்திலும், பொருத்தமான தங்களிடங்களிலும் ஒன்றுகூடி அஞ்சலி செய்து அந்த மக்கள் ஆத்ம சாந்திக்காகவும் தமிழ்த் தேச மக்கள் விடுதலை பெறுவதற்காகவும் எம்மை அர்ப்பணிக்கிறோம் என்று பிரகடனம் செய்ய வாருங்கள்' என்று அவர் விடுத்துள்ள அறிக்கையில் அழைப்பு விடுத்துள்ளார். (அ-ஒ-5)

### ரணில்...

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு இன்று விசேட உரையாற்றவுள்ளார். அத்துடன் கோத்தா கோ கமவிலுள்ள போராட்டக்காரர்களின் நலன்களை கவனிப்பதற்காக கொழும்பு மாநகர மேயர் ரோசி சேனநாயக்க மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜயவர்தன தலைமையில் குழுவும் அமைத்துள்ளார். (அ-ஒ-இ)

### குமுதினிப்படகு...

காலை 7.45 மணிக்கு நெடுந்தீவு புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுவதுடன் மரநடுகையும் மேற்கொள்ளப்படவுள்ளது. நெடுந்தீவு இறங்கு துறையில் அமைந்துள்ள குமுதினி படகுப் படுகொலை நினைவாலயத்தில் உயிரிழந்தவர்களுக்கு நினைவஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

1985ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி நெடுந்தீவு துறைமுகத்திலிருந்து 64 பயணிகளுடன் பயணித்த குமுதினி படகு, இலங்கை கடற்படையினரால் நடுக்கடலில் வழிமறிக்கப்பட்டு அதிலிருந்த குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என்று 36 பேரை அவர்கள் கொடூரமாக வெட்டி படுகொலை செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-20)

### அமைச்சுப் பதவிக்கு...

யில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தனது ஆதரவு உண்டு என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அமைச்சுப் பதவியை ஏற்பதாக இருந்தால், காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, இனப்பரம்பலை மாற்றும் வகையிலான சிங்களக் குடியேற்றங்கள், பௌத்தமயமாக்கல், அரசியல் தீர்வு உள்ளிட்ட விடயங்களில் ஆக்கபூர்வமான முன்னேற்றம் காணப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-5-7)

### யாழ். பல்கலை...

வாரத்தை கடைப்பிடித்த மாணவர்கள் சிலருக்கு, இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொள்பவரால் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. உளரீதியாக அவர்களை அச்சுறுத்தும் இந்த நடவடிக்கை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடுவதற்கு மாணவர்கள் தயாராகி வருகின்றனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியில் கடந்த 12ஆம் திகதி நினைவேந்தல் இடம்பெற்றிருந்தது. இதில் பல்கலைக்கழக மாணவர்கள் பங்கேற்றிருந்தனர்.

அவ்வாறு கலந்து கொண்ட மாணவர்களது தொலைபேசி இலக்கங்களுக்கு, 0761314936 என்ற தொலைபேசி இலக்கத்திலிருந்து வட்ஸப் ஊடாக மிரட்டல் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாணவரது புகைப்படமும் வட்டமிடப்பட்டு அவர்களது விவரங்கள் வட்ஸப் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அந்த இலக்கத்திலிருந்து தொடர்பு கொண்டு, இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் என்று கூறும் ஒருவர் மாணவர்களை அச்சுறுத்தியுள்ளார்.

மாணவர்களை உளவியல் ரீதியாக அச்சுறுத்தும் இந்த நடவடிக்கை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-125)

### பெரமுன,...

டுள்ளதனை வரவேற்றுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற குழு, ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் அமைக்கப்படவுள்ள புதிய அரசாங்கத்துக்கு முழு ஆதரவை வழங்குவதாக உறுதியளித்துள்ளது. அந்தக் கட்சியின் நாடாளுமன்றக் குழு நேற்றுக் கூடியது. இதன்போதே இந்தத் தீர்மானம் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் அமைக்கப்படவுள்ள புதிய அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க ஈ.பி.டி.பியும் தீர்மானித்துள்ளது என்று அந்தக் கட்சியின் செயலர் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

### வவுனியாவில்...

அங்கு அமைந்துள்ள இராணுவ முகாமுக்கு முன்பாகவே இந்தச் சோதனைச் சாவடி நிறுவப்பட்டுள்ளது.

வவுனியாவில் ஏற்கனவே ஓமந்தை, நெடுங்கேணி, பம்பைமடு, ஈரப்பெரிய குளம் பகுதிகளில் இராணுவச் சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ஒ-110)

### வடக்கு - ...

பேரணி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்து முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்துக்குச் செல்லவுள்ளது. முள்ளிவாய்க்கால் இன அழிப்பு தினத்தின் 14 ஆம் ஆண்டு நினைவு நாள் எதிர்வரும் 18ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் இன்று மு.ப. 10 மணிக்கு பொத்துவில் பிள்ளையார் கோவிலில் ஆரம்பிக்கும் பேரணி மட்டக்களப்பு கல்லடி வரை சென்று நிறைவடையும். 16 ஆம் திகதி திருகோணமலை சென்று 17 ஆம் திகதி வவுனியா நகர் நெடுங்கேணி ஊடாக முல்லைத்தீவை சென்றடையும்.

வடக்கில் 16 ஆம் திகதி காலை 8 மணிக்கு வல்வெட்டித்துறை அம்மன் கோவில் ஆரம்பிக்கவுள்ள பேரணி பொலிகண்டி, பருத்தித்துறை, நெல்லியடி, நல்லூர், யாழ். பல்கலைக்கழகம், யாழ். நகர் ஊடாக செம்மணி, நாவற்குழி, கைதடி, சாவகச்சேரி ஊடாக சென்று பரந்தனை அடையும்.

17 ஆம் திகதி காலை பரந்தனில் இருந்து பூநகரி, வெள்ளாங்குளம், மல்லாவி, மாங்குளம் சென்று ஏ-9 வீதி ஊடாக கிளிநொச்சி, மீண்டும் பரந்தன் சென்று விசுவமடு, புதுக்குடியிருப்பு, கேப்பாப்பிலவு ஊடாக முல்லைத்தீவை சென்றடையும்.

இரு பேரணிகளும் 18 ஆம் திகதி காலை முல்லைத்தீவிலிருந்து வட்டுவாகல் ஊடாக முள்ளிவாய்க்கால் முற்றத்தைச் சென்றடையவுள்ளதாக ஏற்பாட்டாளர்களான வடக்கு - கிழக்கு பொது அமைப்புக்கள் அறிவித்துள்ளன. (அ-ஒ-7)


**தேவை**

Austin A55 Car தேவை
ஒஸ்டின் A55 கார் தேவை. விற்க விரும்புவோர் தொடர்புகொள்ளவும்.
077 397 3166

**Electronic Technician தேவை**

Power supply, UPS, Moniter, மற்றும் Printer திருத்து வேலை தெரிந்தவர்கள் வேலைக்கு தேவை.
077 397 3166

**திருமண சேவை**

உள்நாடு, வெளிநாடு, அரச, தனியார் உத்தியோகத்தர்கள் மற்றும் அனைவருக்கும் பொருத்தமானவர்களை தேர்ந்தெடுக்க அழையுங்கள். காரியாலய வேலைக்கு ஆண் பெண் உடனடியாக தேவை
076 112 4145

**விற்பனைக்கு**

Electric PIZZA Oven
Double Door (பீசா அவன்)
விலை 8 லட்சம்
077 236 7848


## மரண அறிவித்தல்

### வைத்தியன் கந்தசாமி (JP)



தோற்றம்:25.06.1944 மறைவு:14.05.2022

மாதகல் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வைத்தியன் கந்தசாமி (JP) கடந்த (14.05.2022) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியன் பொன்னி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஐயன் முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், அம்பிகாவதியம்மாவின் அன்புக் கணவரும், Dr.சிவாதரன், கங்கா, வசீகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தீபிகா, முருகையா, ஆர்த்தி ஆகி யோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் போதி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

(CS 19730 11-6)

## மரண அறிவித்தல்

### சூசைப்பிள்ளை அல்வீனஸ் ( தங்கத்துரை சம்மாட்டி )

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தை சேர்ந்த சூசைப்பிள்ளை அல்வீனஸ் (சம்மாட்டி) நேற்று (14.05.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை மாகிரட் அவர்களின் மூத்தமகனும் காலஞ்சென்றவர்களான பேதுருப்பிள்ளை பிலோமினா அவர்களின் அன்பு மருமகனும் மேரி லூசியாவின் அன்புக்கணவரும் அலோடியா (ஆசிரியர்-யா/மயிலணி மகாவித்தியாலயம்) அவர்களின் அன்புத் தந்தையும் றொனி கிளிபோர்ட் அவர்களின் அன்பு மாமனாரும் குலோவிஸ் அல்றின், அநைஸ் பிலோமியா ஆகியோரின் அன்புத் தாத்தாவும் அலோசியஸ் தாசன், ஜோன் அரியதாஸ், ஜெனோசியஸ், அலன்றோஸ் அமலசோதி, ஜெராட் மேரி றோஸ், அலோசியஸ் மரியதாஸ் யூடித் கொலஸ்டிகா (ஆசிரியர்-யா/இராமநாதன் கல்லூரி மருதனார்மடம்), மரியதாஸன் நொயலின் அருட்பணி சூசைப்பிள்ளை அல்றின் (OMI), (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பெனடிக் மங்களேஸ்வரி, அலன்றோஸ், எட்மன், எடிசன், ஸ்கூர்மன் யசிந்தா, டேவிட் மரினா, அன்ரன் மேரி கிறிஸ்டினா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (16.05.2022) திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச்சென்று திருப்பலியின் பின்னர் புனித அந்தோனியார் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொலைபேசி இல:
077 599 3791

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.பிக்களை பாதுகாக்கத் தவறியமைக்காக பொலிஸ்மா அதிபர் பதவி விலகவேண்டும்

## பெரமுனவினர் ஜனாதிபதியிடம் வலியுறுத்து

**கொழும்பு, மே 15**

**நாடாளுமன்ற உறுப்பினர்களை பாதுகாக்கத் தவறிய பொலிஸ்மா அதிபர் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என ஜனாதிபதி முன்னிலையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.**

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும், பொதுஜன பெரமுன உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது.

91 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதில் பங்கேற்றுள்ளனர். பாதுகாப்பு காரணங்களுக்காக ராஜபக்ச குடும்பத்தினர் உள்ளிட்ட ஏனையோர் பங்கேற்கவில்லை. இதன் போது நாட்டில் ஏற்பட்ட மோதல் நிலைமை தொடர்பில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அவ்வேளையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அரசியல் பிரமுகர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த தவறிய பொலிஸ்மா அதிபர் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஜனாதிபதி ஆணையிட்டும், பொலிஸ்மா அதிபர் உரியவகையில் செயற்படவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஷ் பத்திரண சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகே, இராணுவத் தளபதி மீதும் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். (ஒ-44)

# மஹிந்த இன்னமும் தலைமறைவு

## நேற்றைய கூட்டத்துக்கும் வரவில்லை

கொழும்பு, மே 15

பிரதமர் பதவியை இராஜினாமா செய்த மஹிந்த ராஜபக்ச கடந்த 10 ஆம் திகதி முதல் இன்றுவரை தலைமறைவாகவே வாழ்கின்றார்.

பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்கும், ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்குகூட மஹிந்த ராஜபக்சவரவில்லை. சமல் ராஜபக்ச, நாமல் ராஜபக்ச ஆகியோரும் சமுகமளித்திருக்கவில்லை.

பஸில் ராஜபக்சவும், சஷிந்திர ராஜபக்சவும் பங்கேற்றனர் என்று மொட்டுக் கட்சியின் செயலர் சாகர காரியவசம் தெரிவித்தார். (ஒ-44)

# வெற்றிலைக்கேணி கொலை சந்தேகநபர் பொலிஸில் சரண்

கிளிநொச்சி, மே 15

வெற்றிலைக்கேணியில் ஆண் ஒருவர் கடந்த 10ஆம் திகதி கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகநபர் ஒருவர் பொலிஸில் சரணடைந்துள்ளார். அவரை கிளிநொச்சி நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தினர். 14 நாள்கள் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஒ-213)

# வீடுகளை எரித்த சகலரும் 2 வாரங்களுக்குள் கைது

## பெரமுன எம்.பிக்களிடம் உறுதியளித்தார் ஐ.ஜி.பி.

வன்முறைச்சம்பவங்களுடன் தொடர்புபட்ட அனைவரும் இன்னும் இரு வாரங்களுக்குள் கைது செய்யப்படுவார்கள் என்று பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் உறுதியளித்துள்ளார் பொலிஸ்மா அதிபர்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும், பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது. இதன்போது மக்கள் பிரதிநிதிகளை பாதுகாக்க பொலிஸ்மா தவறிவிட்டார் என அவருக்கு எதிராக சரமாரியாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டது. இதனையடுத்து பொலிஸ்மா அதிபர், கூட்டம் நடைபெற்ற ஜனாதிபதி மாளிகைக்கு அவசரமாக அழைக்கப்பட்டார். சம்பவம் தொடர்பில் பொலிஸ்மா விளக்கமளித்துள்ளார்.

மேற்படி சம்பவங்கள் தொடர்பில் இரு மூத்த பிரதி பொலிஸ்மா அதிபர்கள் தலைமையில் விசாரணைகள் இடம்பெறுகின்றன. தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புபட்ட அனைவரையும் இரு வாரங்களுக்குள் கைது செய்யமுடியும், எனவும் உறுதியளித்துள்ளார். (ஒ-44)

# எம்.பிக்களின் வீடுகளைச் சேதப்படுத்தியோர் மீது பாய்ச்சலை ஆரம்பித்தது பொலிஸ்

கொழும்பு, மே 15

மே 9ஆம் திகதி வன்முறைகளின்போது, முன்னாள் அமைச்சர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, துமிந்த திஸாநாயக்க, எஸ்.எம். சந்திரசேன, சன்ன ஜயசுமன ஆகியோரின் வீடுகளைத் தாக்கியதாகக் கூறி 8 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவின் நாவலபிட்டி வீடு மற்றும் மன்றத்தின் மீதான தாக்குதல் குறித்து நால்வரும், துமிந்த திஸாநாயக்க, எஸ்.எம். சந்திரசேன, சன்ன ஜயசுமன ஆகியோரின் வீடுகள் மீதான தாக்குதல் குறித்து நான்கு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

அளுத்கமகேவின் வீடு மீது நாவலப்பிட்டியில் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. தாக்குதலைத் தொடர்ந்து அவரின் செயலர் 16 பேரின் பெயர்களைக் குறிப்பிட்டு பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். இந்த 16 பேரில் நால்வரையே நாவலப்பிட்டி பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர். இதன்போது சந்தேகநபர்களுக்காக இரு சட்டத்தரணிகள் கட்டணமின்றி முன்னிலையாகினர். இந் நிலையில் முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த நாவலபிட்டி நீதிவான் நிலந்த விமலவீர அவர்களை ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான சொந்த பிணைகளில் செல்ல அனுமதியளித்தார்.

இதேவேளை- முன்னாள் அமைச்சர்களான துமிந்த திஸாநாயக்க, எஸ்.எம். சந்திரசேன மற்றும் சன்ன ஜயசுமன ஆகியோரின் அநுராதபுரம் இல்லங்கள் மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறி, தேரர் ஒருவரும், பிரதேசத்தின் பிரபல வர்த்தகர் ஒருவரும் உள்ளடங்கலாக நால்வரை அநுராதபுரம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதேவேளை- அன்றைய தினம் வன்முறைகளை ஆரம்பித்து வைத்த மஹிந்த ஆதரவு குண்டர்கள் எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

# வீடுகளை இழந்த எம்.பிக்களுக்கு உடனடியாக வீடு வழங்கப்பணிப்பு

கொழும்பு, மே 15

கடந்த 9ஆம் திகதி மஹிந்த ஆதரவுக் குண்டர்களுக்கு ஆதரவளித்தமையால், வீடுகளை இழந்து இடம்பெயர்ந்து வாழும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலவத்துகொட வீடமைப்புத் திட்டத்தில் உள்ள வீடுகளை தற்காலிகமாக வழங்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஆளும் தரப்பின் 55 நாடாளுமன்ற உறுப்பினர்களது வீடுகள் தீ வைத்து எரித்து அழிக்கப்பட்டுள்ளன என்று, ஜனாதிபதியுடனான நேற்றைய கூட்டத்தில் பெரமுன எம்.பிக்கள் சுட்டிக்காட்டினர். (ஒ-இ)

# சொகுசு வாகனங்களை கைவிட்ட பொதுஜன பெரமுன எம்.பிக்கள்

ஜனாதிபதி மாளிகையில் நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சுஸுகி மாருதி காரில் வந்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அநேகர் விலை உயர்ந்த சொகுசு வாகனங்களை வைத்துள்ளனர். அதிலும் ஆளும் தரப்பில் அதிகமானவர்களிடம் விலை உயர்ந்த வாகனங்களே உள்ளன. நாடாளுமன்ற அமர்வு, ஆளுந்தரப்பு கட்சி கூட்டங்களில் சொகுசு வாகனங்கள் பவனியாக வரும்.

எனினும், நேற்றைய கூட்டத்தில் வழக்கத்துக்கு மாறாக ஏராளமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் சாதாரண வாகனத்திலேயே வந்துள்ளனர்.

அரசியல்வாதிகள் சொகுசு வாழ்க்கை வாழ்கிறார்கள் என்ற அபிப்பிராயம் அண்மை நாள்களில் தீவிரமடைந்துள்ளதுடன், ஆளுந்தரப்பு அரசியல் பிரமுகர்களின் சொகுசு வாகனங்கள், வீடுகள் அண்மையில் தீ வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

# 4 பழைய அமைச்சர்களே மீண்டும் பதவியேற்பு

கொழும்பு, மே 15

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த பழைய அமைச்சர்கள் 4 பேர் நேற்று மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சராக பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சராக தினேஷ் குணவர்த்தன, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக பிரசன்ன ரணதுங்க, மின்சாரம் மற்றும் வலுசக்தி அமைச்சராக காஞ்சன விஜேசேகர ஆகியோர் நேற்றுப் பதவியேற்றனர்.

இவர்கள் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான அமைச்சரவையிலும் அமைச்சுப் பதவிகளை வகித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)



தினேஷ் குணவர்த்தன | காஞ்சன விஜேசேகர | ஜி.எல்.பீரிஸ் | பிரசன்ன ரணதுங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணுக்காயில்
# குளவிகொட்டியதில் ஒருவர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, மே 15

துணுக்காய் பகுதியில் மரத்திலிருந்து விழுந்த குளவிக் கூட்டில் இருந்த குளவி கொட்டியதில் ஒருவர் உயிரிழந்ததோடு அவரது மனைவி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

துணுக்காய், ஆலங்குளம் பகுதியை சேர்ந்த ஓய்வுபெற்ற சாரதியான முருகேசு பாலச்சந்திரன் (வயது-72) என்பவரே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். நேற்று பி.ப. 2 மணியளவில் பனை மரத்தில் இருந்த இராட்சத குளவிக் கூட்டை பருந்து கொத்தியுள்ளது. குளவிக்கூடு கீழே விழுந்தபோது வீட்டின் வெளியே நின்ற கணவரை குளவிகள் மொய்த்துக் கொட்டியுள்ளன. வலியின் காரணமாக அவர் எழுப்பிய அவலக் குரல் கேட்டு வீட்டின் உள்ளே இருந்து வெளியே வந்த மனைவி மீதும் குளவிகள் கொட்டியுள்ளன.

இதனையடுத்து அயலவர்களின் உதவியுடன் இருவரும் மல்லாவி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட முன்னரே கணவர் உயிரிழந்துள்ளார். மனைவி சிகிச்சை பெற்று வருகின்றார். (ஒ-இ)

## மோடி பிரதமராக இருந்திருந்தால்
# முள்ளிவாய்க்காலில் தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கமாட்டார்கள்
### பா.ஜ.க. தமிழகத் தலைவர் அண்ணாமலை பேச்சு



**சென்னை, மே 15**

**மோடி 2008இல் பிரதமராக இருந்திருந்தால் தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கமாட்டார்கள் என்று தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.**

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் கருத்தரங்கு சென்னை தி.நகரில் நேற்று நடைபெற்றது. இதில் தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை கலந்து கொண்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நிகழ்ச்சியில் நான் கலந்து கொண்டதால், பல தலைவர்கள் புறக்கணித்துள்ளனர். ஆனால், அவர்களும் பல்வேறு காலகட்டத்தில் இலங்கை மக்களுக்காகப் போராடியுள்ளனர்.

மீண்டும் காலச் சக்கரத்தை மாற்றியமைக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தால் 2008ஆம் ஆண்டு மோடியை பிரதமராக மாற்ற வரம் கேட்டிருப்பேன்.

மோடி வைரம் என்று எனக்குத் தெரியும், ஆனால் அவரைப் பற்றி யாரும் இங்கு பேசவில்லை. அதனால், நான் பேச வேண்டிய சூழல் உள்ளது. மோடி உரக்கப் பேசினால் அமெரிக்காவே கேட்கும். போர் உச்சக் கட்டத்தில் இருக்கும்போது நரேந்திர மோடி பிரதமராக இருந்திருந்தால் தமிழர்கள் யாரும் இறந்திருக்கமாட்டார்கள்.

அந்த கால கட்டத்தில் இந்தியா எடுத்த முடிவு மிகவும் தவறானது. இலங்கைப் பிரச்சினைக்கான தீர்வைக் கொடுக்கின்ற ஒரே ஒரு மனிதர் நரேந்திர மோடியைத் தவிர யாரும் கிடையாது. பா.ஜ.க. கட்சியை சேர்ந்தவன் என்று இதைக் கூறவில்லை. ஒரு மனிதனாகக் கூறுகிறேன். ஈழத் தமிழ் மக்கள் இந்தியாவின்மீது கடும் கோபத்தில் இருந்தனர். 2009 போரில் இந்தியா தமிழர்களுக்கு ஆதரவு தராததால் நம்மை அவர்கள் நம்பாமல் இருந்தனர். ஆனால் தற்போது நிலைமை மாறிவிட்டது. யாழ்ப்பாணக் கலாசார மையத்தை மோடி கட்டிக் கொடுத்துள்ளார். இலங்கைத் தமிழர் விவகாரத்தில் மோடி சரியான வகையில் காய் நகர்த்தி வருகிறார். தனி ஈழம் உருவாக்கப்பட்டால் உலகத்தில் சிறிய நாடாக அதுதான் இருக்கும். இலங்கைக்கு இதுவரை 20 ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேல் இந்தியா உதவி செய்துள்ளது - என்றார். (ஒ-இ)



# மரக்கிளை வெட்டியவர் தவறி வீழ்ந்து உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 15

மாமரத்தில் ஏறி கிளைகளை வெட்டியவர் தவறி வீழ்ந்து பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

நேற்றுப் பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மானிப்பாய், சங்குவேலி தெற்கைச் சேர்ந்த நாகேந்திரம் நகுலேந்திரன் (வயது-48) என்ற 6 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

25 அடி உயரத்தில் ஏறி மரத்தின் கிளையை வெட்டும்போது அவர் நின்ற கிளை முறிந்ததால் தவறி வீழ்ந்துள்ளார். கீழே வீழ்ந்து சுயநினைவற்றுக் காணப்பட்ட அவரை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்த போதும் ஏற்கனவே உயிரிழந்துவிட்டாரென மருத்துவ அறிக்கையிடப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் இறப்பு விசாரணைகளை முன்னெடுத்தார். (அ-ஒ-26-125)

# பிரதி சபாநாயகர் தெரிவு மீண்டும் வாக்கெடுப்பு!!!
### ரணிலின் கோரிக்கை உதாசீனம்

கொழும்பு, மே 15

நாடாளுமன்றத்தில் பிரதி சபாநாயகர் பதவிக்கு, அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் ராஜபக்சவை களமிறக்குவதற்கு ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது.

அத்துடன், சபை முதல்வராக அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவையும், ஆளுங்கட்சி பிரதம கொறடாவாக பிரசன்ன ரணதுங்கவையும் நியமிப்பதற்கும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும், பிரதி சபாநாயகர் பதவிக்கு பெண் நாடாளுமன்ற உறுப்பினர் ரோகினி விஜயரத்னவை நிறுத்தியுள்ளது. இதனால் இரகசிய வாக்கெடுப்புமூலமே தேர்வு இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை - பிரதி சபாநாயகர் பதவிக்கு அனைத்துக் கட்சிகளும் இணைந்து பெண் ஒருவரை நியமிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-44)

# ரணிலின் அரசும் சர்வாதிகார அரசே!
### சஜித் சாடல்



கொழும்பு, மே 15

ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சிலர், அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவுள்ளதாக சில ஊடகங்கள் பொய்யான வதந்திகளை பரப்பி, 'சர்வாதிகார அரசாங்கத்துக்கு' ஒட்சிசனை வழங்க முயற்சிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். சலுகைகளுக்காக மனசாட்சிக்கு துரோகம் செய்யும் உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவுக்கு நேற்று கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அதில், அமையவுள்ள அரசாங்கத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பங்களிப்பை வழங்குமாறு கோரியிருந்தார். சம்பிரதாய அரசியலில் இருந்து விலகி, நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க ஆட்சியில் பங்கேற்குமாறும் குறிப்பிட்டிருந்தார்.

அதற்குப் பதில் கடிதத்தை உடனேயே அனுப்பி வைத்த சஜித், பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக எடுக்கப்படும் சரியான தீர்மானங்களுக்கு ஆதரவளிப்போம் எனவும் அரசாங்கத்தில் இணைவதில்லை என்று ஜனாதிபதியிடம் தெரிவித்த நிலைப்பாட்டிலேயே இருக்கிறோம் - என்றும் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-இ)

# அநுர - அமெ. தூதுவர் நேற்றுத் திடீர் சந்திப்பு

கொழும்பு, மே 15

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நேற்றுத் திடீரென சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

நேற்றுப் பிற்பகல் மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் அமெரிக்கத் தூதுவருடன் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது எனவும், நாட்டின் நடப்பு அரசியல் நிலைமைகள் குறித்தும், பொருளாதார நெருக்கடி குறித்தும் இந்தச் சந்திப்பின் போது கருத்துப் பரிமாறிக் கொள்ளப்பட்டது எனவும் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

'பொருளாதார நெருக்கடிக்கு நிலையான, உள்ளடக்கிய தீர்வுகளை நோக்கி நகரும் இலங்கை அரசின் முயற்சிகளை ஊக்குவிப்பதற்காக நான் பலதரப்பட்ட அரசியல் பிரதிநிதிகளைத் தொடர்ந்து சந்தித்து வருகின்றேன். அந்தவகையில் இலங்கையர்கள் எதிர்கொள்ளும் மிக அவசரமான சவால்கள் குறித்து விவாதிக்க நான் அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்தேன்' என்று அமெரிக்கத் தூதுவர் தனது ருவிற்றர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-இ)

# காணாமற்போன மீனவர் சடலமாக நேற்று மீட்பு

மன்னார், மே 15

சௌத்பார் கடலில் மீன்பிடிப்பதற்குச் சென்ற மீனவர், புகையிரத பாலத்துக்கு அருகாமையிலுள்ள பள்ளத்தில் விழுந்து காணாமற் போயிருந்த நிலையில் நேற்று சடலமாகக் கண்டு பிடிக்கப்பட்டார்.

இரு பிள்ளைகளின் தந்தையான ஜாக்கிலின் றாகல் (வயது-29) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மீன்பிடிக்குச் செல்லும் போது புகையிரதப் பாலத்துக்கு அருகிலிருந்த பள்ளத்தில் விழுந்துள்ளார். அவரைத் தேடும் நடவடிக்கையில் உள்ளூர் மீனவர்கள், கடற்படையினர் ஈடுபட்டனர். இந்த நிலையில் நேற்றைய தினமே அவரது சடலத்தைக் கண்டுபிடித்தனர். மன்னார் பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ஒ-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருநகர் பகுதியில் நேற்று முள்ளிவாய்க்கால் கஞ்சி

யாழ்ப்பாணம், மே 15

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தின் மூன்றாம் நாள் நினைவு தினத்தை முன்னிட்டு, முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வேலன் சுவாமிகள், யாழ். மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி, வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களது உறவுகள், சமூகமட்ட அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

(ம-27)


### ENGLISH CLASSES

யாழ்நகரில் தனி வகுப்புகள்
ஆண்டு 07 தொடக்கம் பட்டதாரிகள்,
தொழில்புரிவோர்வரை சரளமாக
ஆங்கிலம் பேசவும் எழுதவும்
GCE O/L English Literature
K.Ganesh B.A 077 766 8725

### காணி விற்பனைக்கு

கந்தர்மடம் கந்தபுராண வீதி இல.22 ல் நிலப்பரப்பு 4 குளி 3.98 அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு

தொடர்பு :
077 618 3283, 077 289 4085

### வேலையாள்கள் தேவை

யாழ்நகரில் இயங்கிவரும் நிறுவனம் ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை.
- சாரதி Light - சாவகச்சேரி
- சாரதி AD - பருத்தித்துறை
- உதவியாள்கள் தேவை.

077 500 6769

### வேலையாட்கள் தேவை

Lovely Flower Center நிலையத்திற்கு யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களிற்கு வேலையாட்கள் தேவை.

077 400 5023

### ஆசிரியர்கள் தேவை

கட்டைப்பிராயில் உள்ள கல்வி நிறுவனத்திற்கு ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் தேவை.

077 193 0298

### காணி விற்பனைக்கு

யாழ். கச்சேரிக்கு அண்மையாக பேரின்பநாயகம் வீதியில் 3 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 076 675 7518

### வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணத்தில் நாயன்மார் வீதியில் சகல வசதிகளும் கூடிய வீடு. வாடகைக்கு உண்டு. வாகன தரிப்பிடமும் உண்டு

தொடர்பு :
074 059 4311, 074 014 7531

### பணியாளர் தேவை

நல்லூரில் அமைந்துள்ள புடைவைக் கடைக்கு அனுபவமுள்ள பெண் வேலை ஆட்கள் தேவை. நல்லூர் எல்லைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 077 0077 465

### வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள தனியார் நிறுவனத்திற்கு பொதிசெய்பவர் பதவி வெற்றிடங்கள் கோரப் படுகின்றன. வயதெல்லை ( 21 - 35 ) இடைப்பட்ட பெண்கள் விண்ணப்பிக்கலாம். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு
வ.வ. இராமசாமிப்பிள்ளை & சன்ஸ்
இல.58, நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்
தொ.இல:- 021 222 4766

### மின்சாரம் துண்டித்து விட்டதா?
### இதோ இதற்கான தீர்வை நாங்கள் பெற்றுத் தருகிறோம்.

மின்சாரம் இருக்கும் போது பற்றி சார்ஜர் மூலம் மின்சாரம் சேமித்து மின்சாரம் இல்லாத நேரத்தில் சேமித்து வைத்த மின்சாரத்தை பற்றி மூலம் 12V 220V INVERTER மின்சாரம் பயன்படுத்த முடியும். 10 மணித்தியாலம் LIGHT, FAN, TV , RADIO, CCTV CAMERA மின்சாரப் பொருள்கள் பாவிக்க முடியும்.

J.J GROUP No:603, K.K.S.Road Jaffna.
021 222 8854, 077 555 5100

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 9 பரப்புக் காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு
- ★ A9 வீதியில் இருந்து 150M தூரம்
- ★ லேடன் கொம்பனி பின்புறம்
- ★ நாவற்குழி சந்தியில் இருந்து 500 M தூரம்
- ★ நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- ★ நல்ல சூழல்
- ★ 20 அடி பாதையுடன்

முன் பகுதியாக உள்ள காணி 1 பரப்பு - 7 லட்சம்
பின் பகுதியாக உள்ள காணி 1 பரப்பு - 5 லட்சம்

தொடர்பு: 074 043 6673

### காணி விற்பனைக்கு

அரியாலை, நாவலடியில் உதயபுரத்திற்கு அண்மையில் 30 பரப்புக் காணி வீடு கிணற்றுடனும் மற்றும் 14 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. பரப்பு ஒன்றின் விலை - 10 லட்சம்

077 681 6074

### வீட்டுப்பணிப்பெண் தேவை

சமையல் அனுபவம் உள்ள வீட்டு பணிப்பெண் தேவை. இடம் - நல்லூர்

077 376 0594, 077 376 0595

### வேலைக்கு ஆள்கள் தேவை

தச்சு வேலை நன்கு தெரிந்தவர்கள் மற்றும் உதவியாளர்கள் உடன் தேவை.

077 772 2265


### முக்கிய அறிவித்தல்

ஒட்டகப்புலம், வயாவிளான் பகுதியில் அண்மையில் உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து விடுவிக்கப்பட்ட காணிகளை காணியின் உரிமையாளர்களுக்கு தெரியாமல் மோசடியாக ஆவணங்களைத் தயாரித்து ஒரு கும்பல் தமது காணிகள் போல விற்று வருகின்றனர். இது தொடர்பாக அண்மையில் தெல்லிப்பளை பிரதேச செயலகம் தமது முகநூலில் ஒரு விழிப்புணர்வுச் செய்தியை வெளியிட்டிருந்தது. தயவு செய்து ஒட்டகப்புலம் பகுதியில் காணிகளை வாங்க விரும்புபவர்கள் விழிப்பாக இருக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு
காணி விவகாரக் குழு
ஒட்டகப்புலம் வயாவிளான்
மின்னஞ்சல் : lacoddahappulam@gmail.com
(CS 19670) (3/6)

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 78 பரப்புக் காணிவிற்பனைக்கு.




- ✓இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ✓கைதடி சித்த போதனா வைத்தியசாலை. யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடம் கிழக்கு எல்லைகள்
- ✓சமுர்த்தி வங்கி வடக்கு எல்லை.
- ✓கைதடி சந்தி 200 M தூரம்
- ✓வட மாகாண சபை அலுவலகம் 250 மீற்றர் தூரம்.
- ✓மூன்று வழி பாதையுடன்
  - 01- A-09 வீதி 100 மீற்றர் (16 அடி பாதையுடன்)
  - 02- கைதடி கோப்பாய் வீதி 50 மீற்றர் தூரம் (20 அடி பாதையுடன்)
  - 03- சமுர்த்தி வங்கி அருகாமை 100 M தூரம் (16 அடி பாதையுடன்)
- ✓சுற்றி நல்ல சூழலுடன் நல்ல தண்ணீர் நிலம்
- ✓செம்மண் காணி.

தொடர்பு: 077 6234 204
077 2880 152
076 6583 621
(CS 19704) 1/6

### அரிசி வகைகள் விற்பனைக்குண்டு



### உழவர் அரிசிக்கடை

விசேட விலைக் கழிவு அனைத்து ரக அரிசி வகைகளுக்கும்

| | | | |
|---|---|---|---|
| கீரி சம்பா 1kg | 250.00 | நாடு 1kg | 215.00 |
| சம்பா 1kg | 225.00 | சிவப்பு பச்சை 1kg | 220.00 |

உங்கள் தேவைக்கேற்ப தரமான அனைத்து விதமான அரிசி வகைகளையும் ஒரே இடத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

Our Farmers PVT (Ltd).
இல. 418/33, மருதனாமடம் சந்தை
(CS 44656) (3/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஏய்பவர்க்கே காலம் என்று எண்ணி விடாதே
பொய் எத்தனை நாள் கைகொடுக்கும் மறந்து விடாதே
ஒரு நாள் இந்த நிலைமைகெல்லாம் மாறுதல் உண்டு
அந்த மாறுதலை செய்வதற்கு தேர்தல் உண்டு
- கவிஞர் புலமைப்பித்தன்

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2053 வைகாசி 1 ஞாயிற்றுக்கிழமை (15.05.2022) சிகரம் : 99





# வரலாறு ஒரு கண்டிப்பான கிழவி

○ நிலாந்தன்

**1939** இல் சேர்ச்சிலுக்கு நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவே காணப்பட்டது. அவர் எப்படிப் பிரதமரானார்? நெருக்கடி காரணமாகவே அவர் பிரதமரானார்.நானும் அதனையே செய்திருக்கின்றேன்.வரலாற்றைப் படியுங்கள்". இது ரணில் விக்ரமசிங்க கூறியது. இலங்கை தீவின் ஆறாவது பிரதமராக நியமிக்கப்பட்டபின் ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு அவர் கூறிய பதில் இது.உண்மை. வரலாற்றைப் படிக்க வேண்டும்தான். வரலாறு மிகவும் முக்கியம் பிரதமரே. ஆனால் அது புலிகேசி நாயகன் வடிவேலு கூறிய அர்த்தத்தில் அல்ல. ரஷ்யப் புரட்சிக்குத் தலைமை தாங்கிய லெனின் கூறிய அர்த்தத்தில்தான். லெனின் கூறுகிறார் "வரலாறு ஒரு கண்டிப்பான கிழவி" என்று.

கடந்த 9ஆம் திகதி அது நிரூபிக்கப்பட்டது.13 ஆண்டுகளுக்கு முன் மஹிந்த எந்த நாட்டை சிங்கள மக்களுக்கு வென்று கொடுத்து மண்ணைத் தொட்டு வணங்கினாரோ.அதே நாடு அவரை வடக்கு கிழக்கை நோக்கி துரத்திவிட்டிருக்கிறது. அவருடைய சொந்த ஊரிலேயே.அவருடைய சொந்தத் தேர்தல் தொகுதியிலேயே.அவருக்கும் அவருடைய வீடுகளுக்கும் சொத்துக்களுக்கும் பாதுகாப்பு இல்லை என்ற நிலை. அவரைப் போலவே அவருடைய ஆதரவாளர்களுக்கும் பாதுகாப்பு இல்லை என்ற நிலை. அப்படியென்றால் அவர்கள் பெற்றுக்கொடுத்த வெற்றி எங்கே? தேசிய பாதுகாப்பு,தேசிய பாதுகாப்பு என்றெல்லாம் சொன்னார்கள்.ஆனால் அவர்களுடைய சொந்தக் கிராமத்திலேயே அவர்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் போய் விட்டதே? அவரை இரண்டாவது துட்டகைமுனுவாகக் கொண்டாடிய மக்களே 'கிழட்டு மைனா'என்று கூறி ஓட ஓட விரட்டும் ஒரு நிலை ஏன் தோன்றியது? ஏனென்றால் வரலாறு ஒரு கண்டிப்பான கிழவி.

எந்தப் பேரவாவியில் அறுபத்தியாறு ஆண்டுகளுக்கு முன் தமிழ் அரசியல்வாதிகளை பண்டாரநாயக்கா ஏவிவிட்ட குண்டர்கள் தூக்கி எறிந்தார்களோ. அதே பேரவாவியில் மஹிந்த ராஜபக்ச அனுப்பிய குண்டர்களை போராட்டக்காரர்களும் பொதுமக்களும் தூக்கி எறிந்திருக்கிறார்கள்.66 ஆண்டுகளுக்கு முன் தமிழ் மக்களை.சிங்களக் குண்டர்கள் தூக்கி எறிந்தார்கள். இப்பொழுது சிங்களக் குண்டர்களை சிங்கள மக்களே தூக்கி எறிந்திருக்கிறார்கள்."பூமியிலே சூரியனுக்கு கீழே நூதனமானது எதுவுமேயில்லை".ஏனென்றால் வரலாறு ஒரு கண்டிப்பான கிழவி.

உலகிலேயே பொலிஸாரின் வாகனங்களை பொதுமக்கள் சோதனை செய்யும் ஒரு காட்சி இலங்கைத்தீவில்தான் கடந்த வாரம் இடம்பெற்றது.கட்டுநாயக்க விமான நிலையத்தை நோக்கிச் செல்லும் வழிகள் தோறும் பொதுமக்கள் ஆங்காங்கே நின்று வாகனங்களைச் சோதித்தார்கள். மஹிந்தவோ அவருடைய ஆட்களோ தப்பிச் சென்றால் பிடிப்பதற்காக அந்தச் சோதனை. அந்தவழியாக வந்த பொலிஸ் வாகனங்களும் சோதிக்கப்பட்டன.அதுதான் ஆசியாவின் அதிசயம்.

கடந்த சுமார் 45 நாள்களுக்கு மேலாக தெற்கில் நடந்துவரும் மக்கள் எழுச்சிகளின்போது. இரண்டு தரப்புக்கள் சாட்சிகளாக விலகிநிற்கின்ன்றன. முதலாவது சாட்சி தமிழ் மக்கள்.பெரும்பாலான தமிழ் மக்கள் நடப்பவற்றை விலகி நின்று சாட்சிகளாகப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். வடக்கு கிழக்கில் இருந்தும் கொழும்பிலிருந்தும் ஒப்பீட்டளவில் மிகச்சிறு தொகையினர் காலிமுகத்திடலை நோக்கி சென்றார்கள்.ஆனால் பொதுப்போக்கு எனப்படுவது தமிழ்மக்கள் சாட்சியாக நிற்கிறார்கள் என்பது தான்.

இரண்டாவது சாட்சி.படைத்தரப்பு.நாட்டின் அரசியலைத் தீர்மானிக்கும் தரப்புக்களில் ஒன்று.ஆனால் அது தொடர்ந்தும் சாட்சியாகவே காணப்படுகிறது.படையினரும் போராட்டக்காரர்களும் முட்டிக் கொண்ட சந்தர்ப்பங்கள் மிக அரிது.சில புறநடைகளைத் தவிர பெரும்பாலும் படைத்தரப்பு ஒரு மௌன சாட்சியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறது. அரசாங்கமும் படைத்தரப்பை போராட்டக்காரர்களுடன் மோதவிடத் தயாரில்லை.போராடும் மக்களும் படைத்தரப்புடன் மோதுவதைத் தவிர்க்கிறார்கள்.குறிப்பாக காலிமுகத்திடலில் குழுமிநிற்கும் புதிய தலைமுறை அதை இயன்றளவுக்கு தவிர்க்கிறது. ராஜபக்ச குடும்பத்தின் மீது அவர்கள் வைப்பது திருட்டுக் குற்றச்சாட்டுதான். போர்க்குற்றச்சாட்டு அல்ல. அது போர்க் குற்றச்சாட்டாக இருந்தால் அதன் தர்க்கபூர்வ விளைவாக படையினரையும் குற்றவாளியாகக் காணும்.எனவே புதிய தலைமுறையும் அந்தக்குற்றச்சாட்டை தவிர்க்கிறது.போராட்டம் தொடங்கிய புதிதில் இளம் ஊடகவியலாளர்கள் அமைப்பு ஒன்று அவ்வாறு போர்க் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் இரண்டு சுலோக அட்டைகளை ஏந்தியிருந்தது.

இப்பொழுது ரணில் ஒரு தற்கொலைப் படை மாலுமியாக மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலை பொறுப்பெடுத்திருக்கிறார்.அவருடைய வயதைப் பொறுத்தவரை இதுதான் அநேகமாக அவருடைய கடைசி ஆட்டம். மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலை யாரும் பொறுப்பேற்க மாட்டார்கள். அதிலிருந்து தப்பியோட முயல்வார்கள்.

ஆனால் பொதுப்போக்கு என்னவென்றால் அவர்கள் படைத்தரப்போடு முரண்பட விரும்பவில்லை என்பதுதான்.கோத்தா கோகமாவில் 'ரணவிரு குடில்' ஒன்று உண்டு. அதுவும் படைத்தரப்புடன் மோதலை தவிர்க்கக் கூடியது.அதாவது கோத்தாவை வீட்டுக்குப் போ என்று கேட்கும் புதியதலைமுறை படைத்தரப்புடன் மோதுவதைத் தவிர்க்கின்றது.

படைத்தரப்பும் தென்னிலங்கையில் போதிசத்துவர்கள் போல நடந்துகொள்கிறது. அவசரகாலச் சட்டத்தின்கீழ் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதி கொண்ட தனிநபர் மற்றும் பொதுச் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன. அரசியல்வாதிகளின் சொத்துக்களை அழித்து நாசமாக்கிய ஆர்ப்பாட்டக்காரர்களை படைத்தரப்பு எதுவும் செய்யவில்லை.அல்லது படைத்தரப்பு அந்தப் பகுதிகளுக்குள் வருவதைத் தவிர்த்தது. ஆர்ப்பாட்டக்காரர்களின் கூட்டுக்கோபம் ஓரளவுக்கு அடங்கத் தொடங்கும்போதே கண்டதும் சுட உத்தரவு வழங்கப்பட்டது. அதாவது மஹிந்த மூட்டிய தீ அவருடைய ஆதரவாளர்களின் சொத்துக்களின் மீது பரவி சேதத்தை விளைவிப்பதை அவருடைய சகோதரர் ஒரு கட்டம் வரையிலும் விட்டுப் பிடித்தார் என்று எடுத்துக் கொள்ளலாமா? ஏனென்றால் "இளவரசர்கள் நண்டுகளைப் போன்றவர்கள்,தகப்பனைத் தின்னிகள்"என்று சாணக்கியர் கூறியிருக்கிறார்.இங்கேயும் வரலாறு ஒரு கண்டிப்பான கிழவிதான்.

இப்பொழுது ரணில் ஒரு தற்கொலைப் படை மாலுமியாக மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலை பொறுப்பெடுத்திருக்கிறார். அவருடைய வயதைப் பொறுத்தவரை இதுதான் அநேகமாக அவருடைய கடைசி ஆட்டம். மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலை யாரும் பொறுப்பேற்க மாட்டார்கள். அதிலிருந்து தப்பியோட முயல்வார்கள். ராஜபக்சவின் தோல்விக்கு தாமும் பங்காளிகளாக மாற ஏனைய கட்சிகள் தயாராக இல்லை. அதனால்தான் பொருத்தமான இடைக்கால ஏற்பாட்டை உண்டாக்க முடியாமல் இருந்தது.இப்போது ரணில் துணிச்சலாக அந்தக் கப்பலைப் பொறுப்பெடுத்திருக்கிறார்.அவரைத் தெரிந்தெடுத்ததன் மூலம் கோத்தாபய தன்னையும் தனது குடும்பத்தையும் பாதுகாத்திருக்கிறார் என்றும் எடுத்துக் கொள்ளலாம். தமது சொந்தத் தேர்தல் தொகுதியில் தங்க முடியாமல் ஓடி ஒளிக்கும் அரசியல்வாதிகளை பாதுகாப்பதற்கு ரணில் தேவைதான்.தமிழ்ப்பகுதிகளில் ஒளிந்துக்கொண்டிருக்கும் ராஜபக்சக்களை தலைநகரத்துக்கு மீண்டும் கொண்டுவர ரணில் தேவைதான். ஆனால் இந்த இடத்தில் ரணிலுக்கு பதிலாக ஒரு அணில் இருந்தாலும் அது ஒரு சிங்கள பௌத்த கொயிகம அணிலாக இருந்தால், அதுவும் ராஜபக்சக்களைப் பாதுகாக்கும்தான்.அதுவும் ராஜபக்சக்களின் மீது திருட்டுக் குற்றச்சாட்டைத்தான் சுமத்தும். போர்க்குற்றச்சாட்டை அல்ல.




2018 இல் யாரைக் கவிழ்த்து மஹிந்த, பின்கதவின் மூலம் உள்ளே நுழைய முற்பட்டாரோ இப்பொழுது அவரிடமே தனது பதவியைக் கொடுத்துவிட்டு தமிழ்ப் பகுதியில் தஞ்சமடைந்திருக்கிறார்.

03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஈழத்தமிழர் விவகாரத்தை திசை திருப்பும் அரசியல் மாற்றங்கள்

## ஜெனிவா சொல்லப்போகும் செய்தி என்ன...

அ.நிக்ஸன்

ஜெனிவாவில் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவையில் ஈழத்தமிழர் விவகாரம் தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கு இறுக்கமான நிபந்தனைகள் விதிக்கப்படுமென முன்னர் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இந்தவொரு நிலையில், இலங்கையின் தற்போதைய நிலைமைகள் மற்றும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்ற பின்னரான அரசியல் சூழலில் இம்முறை ஜெனிவா அமர்வில் இலங்கையின் ஜனநாயகமே அதிகம் பேசப்படும் விடயமாக இருக்கப்போகின்றது என்பதில் ஐயமில்லை.

ஈழத்தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக் கோரிக்கைகள் சர்வதேச மட்டத்தில் அதிகளவு பேசப்பட்டு, முக்கியம் பெறுகின்ற ஒவ்வொரு காலகட்டத்திலும், பௌத்த தேசியம் ஏதோவொரு வகையில் தன்னை மீளக் கட்டமைக்கின்றது. சிங்கள அரசியல் தலைவர்களிடையே வேறுபாடுகள், குழப்பங்கள் இருந்தாலும் இலங்கையின் ஒற்றையாட்சிக் கட்டமைப்பைப் பாதுகாக்கும் விடயத்தில் 'முரண்பாட்டில் உடன்பாடு' கொண்டு விடுகின்றனர் என்பதற்கு கோத்தாபய ராஜபக்ச முன்னிலையில், ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியேற்றமை மாத்திரம் உதாரணமல்ல. 2002 ஆம் ஆண்டு நோர்வேயின் ஏற்பாட்டில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பித்தகாலத்தில் இருந்து அந்த உதாரணங்களைக் காணலாம். இலங்கைத்தீவில் காலத்துக்குக் காலம் எழுகின்ற அரசியல் - பொருளாதார நெருக்கடிகள், விலைவாசி உயர்வுகளுக்கு எழுபது ஆண்டுகால இனப்பிரச்சினையே மூல காரணம். ஆனால் இந்த மூல காரணம் ஏற்க மறுக்கப்பட்டு, இலங்கை மக்களின் ஜனநாயகப் பிரச்சினை, மனித உரிமைப் பாதுகாப்பு விவகாரங்களாகச் சுருக்கப்பட்டுப் பௌத்ததேசியவாதத்தை மையப்படுத்திய இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்பும் பாதுகாக்கப்பட்டு விடுகின்றமை வரலாறு. 'கோத்தாபய ராஜபக்ச வீட்டுக்குப் போ' என்ற போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு மூன்று வாரங்களில் கண்டியை மையப்படுத்திய மூன்று மகாநாயக்கர்கள் கோத்தாபய ராஜபக்சவுக்கும், மஹிந்த ராஜபக்சவுக்கும் மற்றும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் அனுப்பிய கடிதத்தில்கூட கோத்தாபய பதவி விலக வேண்டுமெனக் கோரவில்லை. மாறாகப் பொருளாதார நெருக்கடிக்கு இணைந்து தீர்வைக் காணுங்கள் என்றே அந்தக்கடிதத்தில் கூறப்பட்டிருந்தது. ஆகவே அதனடிப்படையிலேயே, ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்றிருக்கிறார் என்று கருதலாம்.

மகாநாயக்கர்களின் கடிதத்தின் அடிப்படையிலேயே இடைக்கால அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதற்கான பரிந்துரை ஒன்றை இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கமும் தயாரித்திருந்தது. அந்தப் பரிந்துரையில் இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் எதுவுமே முன் மொழியப்படவில்லை. மாறாக ஒற்றையாட்சியைப் பாதுகாப்பதற்குரிய பரிந்துரைகள் மாத்திரமே விதந்துரைக்கப்பட்டுள்ளன. ஆகவே 1958 இல் கொழும்பில் ஈழத்தமிழின அழிப்பு ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல், 2009 இல் முடிவுற்ற போரின் பின்னரான பதின்மூன்று வருடகால அரசியல் சூழலிலும், சிங்கள பௌத்த தேசியவாதம், தங்களுக்குள் அவ்வப்போது ஏற்படுகின்ற மோதல்கள், தமக்கெதிராக எழுகின்ற சிங்கள மக்களின் எழுச்சிப் போராட்டங்களுக்குள் சிக்குப்பட்டாலும், மகாநாயக்கர்கள் அனுப்பும் ஒரு கடிதத்தோடு முரண்பாட்டில் உடன்பாடாக இணக்க அரசியலுக்குள் வந்துவிடுவர்.

அந்த முரண்பாட்டில் ஓர் உடன்பாட்டு அரசியல்தான் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்றமை. அத்துடன் அமெரிக்க, இந்திய மற்றும் சீனப் புவிசார் அரசியல் போட்டிகளும் பௌத்த தேசியவாத அரசியல் சிந்தனைகளின் போக்குக்கு ஏற்பவே, ஆதரவை வழங்கித் தமக்குரிய தேவைகளையும் பெற்றுக் கொள்கின்றன. கோத்தாவுக்கு எதிரான போராட்டங்கள் கொழும்பிலும் அதன் புறநகர் பகுதிகளிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, ஜனநாயகப் போராட்டங்களை அடக்க முற்படக்கூடாது என்றே அமெரிக்கத் தூதரகம் அறிக்கை மூலம் கண்டனம் வெளியிட்டது. ஆனால் கோத்தாபய பதவி விலக வேண்டும் என்றொரு வார்த்தை அந்த அறிக்கையில் இல்லை. ஏனெனில் சிங்கள ஆட்சியாளர்கள், தமது உள்ளக மோதல்களை எப்படியாவது முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமெனக் காத்திருப்பரே தவிர, தமது புவிசார் அரசியல் -பொருளாதாரத் தேவைகளை எப்படியும் எந்தவொரு சிங்களத் தலைவரிடமும் பெற்றுவிடலாமென அமெரிக்கா போன்ற வல்லரசுகள் இலகுவாக நம்புகின்றன. மக்களின் எண்ண ஓட்டங்களை மையமாக் கொண்டு அதனைத் தனக்குச் சாதகமாக்கி வெற்றி பெறுகின்ற சிங்கள ஆட்சியாளர் ஒருவர், தான் வெற்றிபெற்ற பின்னர், மக்களின் கோபத்துக்கு உள்ளாகித் தோல்வி கண்ட ஆட்சியாளரை விசாரணை என்ற போர்வையில் காப்பாற்றி விடுகின்றனர்.

17 வருட ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் இடம்பெற்ற படுகொலைகள், ஊழல் மோசடிகள், அதிகாரத் துஷ்பிரயோகம் போன்றவற்றை விசாரணை செய்து அனைவரையும் கைது செய்து சிறையில் அடைப்பேன் என்று மார்தட்டி 1994 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற சந்திரிகா, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என்றும் உறுதியளித்தார்.

ஆனால் ஓகஸ்ட் மாதம் ஜனாதிபதியாகப் பதவியேற்று, ஆறு மாதங்களில் மீண்டும் போர் ஆரம்பித்தது. ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்ட படுகொலைகள், ஊழல்மோசடி, அதிகாரத் துஷ்பிரயோகம் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படவேயில்லை. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியைப் பூண்டோடு ஒழிக்க வேண்டும் என்ற ஆதங்கத்துடனேயே மக்கள் சந்திரிகாவுக்கு வாக்களித்தனர். 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரையான பதினொரு ஆண்டுகால ஆட்சியில் சந்திரிகா ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களை எந்தவொரு விசாரணைக்கும் உட்படுத்தவேயில்லை. மாறாக 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது, இன அழிப்பு இடம்பெற்றது. யாழ் .செம்மணியில் அறுநூறுக்கும் அதிகமான தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டனர். நவாலித் தேவாலயத்தில் விமானக் குண்டு வீச்சில் நூற்றுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். கிழக்கில் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் அரங்கேறின. படுகொலைகள் நடந்தன.

இதுதான் வரலாறு. பின்னர் அடுத்த அரசியல் சுற்று ஆரம்பித்தது. ஐக்கிய தேசியக் கட்சி தன்னை மீளவும் புதுப்பித்துத் தமிழ் மக்களின் மீட்பராகவும், சிங்கள மக்களின் புதிய ஆட்சியாளராகவும் தன்னை வெளிப்படுத்தியது. 2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐந்தாம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அனைத்துச் சிறிய கட்சிகளையும் உள்ளடக்கி ஐக்கிய தேசிய முன்னணியாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்றார். அப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மையப்படுத்திய சந்திரிகா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி தேர்தலில் தோல்வியடைந்து எதிர்க்கட்சியாக மாறியது.

ஆனால் சந்திரிகா தொடர்ந்தும் ஜனாதிபதியாகப் பதவி வகித்திருந்தார். சந்திரிகா ஜனாதிபதியாக இருந்தபோதுதான் நோர்வேயின் சமாதான ஏற்பாட்டு முயற்சி 2001 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்ற பின்னர் அவர் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமே நோர்வேயின் ஏற்பாட்டுடன் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டது. கொழும்பில் பௌத்ததேசிய இனவாத அமைப்புகளின் கடும் எதிர்ப்புகள், முரண்பாடுகள், இழுபறிகள் போன்றவற்றுக்கு மத்தியில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, இடைக்கால நிர்வாகத்துக்கான பரிந்துரை ஒன்றை 2003 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் விடுதலைப் புலிகள் கையளித்திருந்தனர்.

அப்போதுதான் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தில் இருந்து பாதுகாப்பு அமைச்சு உள்ளிட்ட மூன்று முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களை சந்திரிகா தன்வசப்படுத்தி, கொழும்பில் பெரும் அரசியல் குழப்பத்தை ஏற்படுத்தினார். இதனால் ரணில் அரசாங்கம் கவிழும் நிலைமைக்கு வந்தது. அதனால் 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மீண்டும் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது. ஆனால் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய மக்கள் முன்னணி தோல்வியடைந்து எதிர்க்கட்சியாக மாறியது. சந்திரிகா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மையப்படுத்திய புதிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. நோர்வேயின் ஏற்பாட்டுடன் பேச்சுவர்த்தை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி சுனாமிப் பேரலை வடக்கு,கிழக்கு உள்ளிட்ட இலங்கைத்தீவின் கரையோர மாவட்டங்களில் பெரும்பாதிப்பை ஏற்படுத்தியது.
தமிழர் தாயகப் பகுதிகளிலும் பெரும் உயிரிழப்புகள் ஏற்பட்டன. இதனால் நிவாரணம் மற்றும் உதவிகளை வழங்குவதற்கு பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்க நோர்வே முயற்சி எடுத்திருந்தது. அமெரிக்கா உள்ளிட்ட பல சர்வதேச நாடுகள் அந்தப் பொதுக் கட்டமைப்புக்கு உதவியளிக்க முன்வந்தன. ஆனால் கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி உள்ளிட்ட சிங்கள அரசியல் கட்சிகள், பௌத்த குருமார் எல்லோரும் ஒன்று சேர்ந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

இதனால் எதிர்ப்பைக் காரணம் காண்பித்துச் சந்திரிகாவும் பொதுக்கட்டமைப்பைச் செயற்படுத்த மறுத்துவிட்டார். அதற்கு முன்னரே நிதி வழங்கும் நாடுகள் பட்டியலில் இருந்து அமெரிக்கா வெளியேறியது. 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ச வெற்றிபெற்றதும், பௌத்த இனவாதச் செயற்பாடுகள் இலங்கை ஒற்றையாட்சி நாடாளுமன்றத்துக்குள் மேலும் ஏற்படுத்தின. 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் மீண்டும் போர் ஆரம்பிக்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டு இறுதிப் போரின் பின்னரான சூழலில், 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், போரில் ஈடுபட்டு இன அழிப்புக் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளான இராணுவத் தளபதி சரத்பொன்சேகா ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்டார். (எனினும் மஹிந்தவே வென்றார்) இது பௌத்த தேசியவாதத்தை இனஅழிப்புக் குற்றச்சாட்டில் இருந்து சர்வதேச அரங்கில் காப்பாற்றும் செயலாகவே அன்று ஈழத்தமிழர்களினால் விமர்சிக்கப்பட்டது. அதன் பின்னரான சூழலில் 2014 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்சவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக பதவி வகித்தவரும், இறுதிப் போர்க்காலத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவருமான மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியை மையப்படுத்திய கூட்டு எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராகக் களமிறக்கப்பட்டார்.

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகவும், ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் பதவியேற்றார்கள். இதே ஆண்டுதான் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில், இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் விவகாரம் தொடர்பான தீர்மானத்துக்கு இலங்கை அரசாங்கம் அனுசரணை வழங்கியது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் ஒத்துழைப்பு வழங்கியது. அதாவது இன அழிப்புப் பற்றிய பேச்சுக்களை சர்வதேச அரங்கில் இருந்து நீக்கம் செய்யும் சூழ்ச்சிகள் இடம்பெற்றன. ஈழத்தமிழர் விவகாரம் இலங்கையின் மனித உரிமைப் பிரச்சினையாக மடைமாற்றப்பட்டது. இந்தவொரு நிலையில் 2018 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி எவருக்குமே தெரியாமல், நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த மஹிந்த ராஜபக்சவுக்குப் பிரதமர் பதவியை வழங்கினார் மைத்திரிபால சிறிசேன. அந்த அரசியல் நெருக்கடி இழுபறி 52 நாட்கள் நீடித்தது. இதனால் ஈழத்தமிழர்களின் நிரந்த அரசியல் தீர்வுக்கான பிரச்சினைகள் எவையும் கலந்துரையாடப்படவில்லை.

மஹிந்தவின் ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமென்ற உணர்வோடு வாக்களித்து மைத்திரிபால சிறிசேனவை மக்கள் ஜனாதிபதியாக்க , அவரோ 2018 இல் மஹிந்த ராஜபக்சவை மீண்டும் அழைத்துப் பிரதமர் பதவி கொடுத்து பெரும் அரசியல் நெருக்கடியைத் தோற்றுவித்தார். இதுதான் 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்ட கோத்தாபய ராஜபசக்ச வெற்றிபெற வசதியாகவும் அமைந்தது. ஜனாதிபதியாக அநுராதபுரம் விகாரையில் கோத்தாபய பதவியேற்றார். பாதுகாப்புச் செயலாளராக இருந்து போரை நடத்தித் தமிழர்களை வெற்றி கொண்டவர் என்ற பிரசாரத்துடன், 69 இலட்சம் பௌத்த சிங்கள மக்களின் வாக்குகளில் வெற்றிபெற்ற கோத்தாபய ராஜபக்ச குறிப்பிட்ட ஒரு சிலரைத்தவிர, மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் எவருக்குமே அமைச்சுப் பதவியை வழங்கவில்லை.

இந்தவொரு சூழலில் இந்த ஆண்டு மார்ச் மாதம் முதன் முதலாகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார் கோத்தாபய. அதற்கு முன்னதாக ஆறு தமிழ்த்தேசியக் கட்சிகள் 13 தொடர்பாக இந்தியப் பிரதமர் மோடிக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியிருந்தன. ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைக்கு 13 தீர்வல்ல என்று வடக்கு,கிழக்கு தமிழ் மக்கள் ஏற்கனவே நிராகரித்தபோதும், அது பற்றிக் கூட எதுவுமே பேசாதவொரு நிலையில், தமிழ்த்தேசியக் கூட்டமைமைப்புடனான சந்திப்பு முடிவடைந்து ஒரு வாரத்துக்குள் பொருளாதார நெருக்கடிப் பிரச்சினைகள் எழுந்தன. மக்கள் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மஹிந்த ராஜபக்ச பதவி விலகிய நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தற்போது பிரதமராகப் பதவியேற்றுள்ளார். ஆகவே சிங்கள ஆட்சியாளர்கள் இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து, ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை பற்றிய பேச்சுக்கள் வரவுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும், அல்லது சர்வதேச அரங்கில் சூடு பிடிக்கவுள்ள நிலையில், தமக்குள் மோதுப்பட்டுப் பின்னர் ஒரு புள்ளிக்கு வந்துவிடுவர்.

இவர்கள் மோதுப்படும் காலத்தில் ஈழத்தமிழர் விவகாரம் திட்டமிட்டுத் திசை திருப்பப்படுகின்றது. மூடிமறைக்கப்படுகின்றது. பௌத்ததேசிய அரசியல் பின்னணிக்குள் அவ்வப்போது எழுகின்ற முரண்பாடுகள், மோதல்கள் ஆகியவற்றின் பின்னரான சூழலில், இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்பும் பாதுகாக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தர்ப்பத்தை பயன்படுத்துமா கூட்டமைப்பு?

ந.பரமேஸ்வரன்

நாட்டில் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக இடம்பெற்ற போராட்டங்கள்,இழுபறிகளின் பின்னர் ஐக்கிய தேசியக்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க ,ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவினால் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார். ரணில் விக்கிரமசிங்க தனது பிரதமர் பதவியைத் தக்க வைத்துக்கொள்வதற்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை பெற வேண்டும்.அதற்கு 113 நாடாளுமன்றஉறுப்பினர்களின் ஆதரவை ரணில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவைக்கு ஆதரவு வழங்குவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தீர்மானித்துள்ளது. இதேபோல் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அமைச்சரவையில் அங்கம் வகிக்கப் போவதில்லையென அறிவித்துள்ளது. இதேவேளை சுயாதீனமாகச் செயற்படப்போவதாக ரணில் பிரதமராக பதவியேற்க முன்னரே அறிவித்த சுயாதீன அணி, தாங்கள் தொடர்ந்தும் அவ்விதமே செயற்படப்போவதாக அறிவித்துள்ளது. மக்கள் விடுதலை முன்னணியும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவைக்கு ஆதரவு வழங்குவதில்லை என உறுதியாகக் கூறியுள்ளது.

சிறுபான்மைக்கட்சிகளான மலையக மக்கள் முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ். முஸ்லீம் காங்கிரஸ், ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன ரணிலுக்கு ஆதரவளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பனவும் ரணிலுக்கு ஆதரவளிப்பதில்லை என்று முடிவெடுத்துள்ளன.



> தேசியப்பிரச்சினையான இனப்பிரச்சினைக்கான தீர்வும் புதிதாக உருவாகப்போகும் அரசியலமைப்பில் அல்லது திருத்தத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்; கூட்டமைப்பு அதைச் செய்யுமா?

ரணில் விக்கிரமசிங்க தனது பிரதமர் பதவியை தக்கவைத்துக்கொள்ளப்போகிறாரா? இல்லையா? என்பது ஒரு புறமிருக்க ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டதால் தமிழ் மக்களுக்கு என்ன பயன் என்பதையே நாம் ஆராய வேண்டும். ரணில் பிரதமராக பதவியேற்ற ஒரு சில நிமிடங்களிலேயே இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் , ரணிலின் நியமனத்தை வரவேற்று தனது உத்தியோகபூர்வ ருவிற்றர் தளத்தில் பதிவிட்டுள்ளார். அவர் நீண்டகாலப் பிரச்சினைகளாக இலங்கை எதிர் கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கும் தாங்கள் ஊக்குவிப்போம்' எனப் பதிவிட்டுள்ளார்.

ருவிற்றரில் பதிவிட்டது மட்டுமன்றி பிரதமர் ரணில் பதவியேற்ற பின்னர் அவரை நேரிலும் சந்தித்து உரையாடியுள்ளார் அமெரிக்கத் தூதுவர் . அவர் மட்டுமன்றி இந்தியத் தூதுவர், சீனத் தூதுவர், ஜப்பானிய தூதுவர், பிரிட்டிஷ் தூதுவர்,கனேடியத் தூதுவர் எனப் பல இராஜதந்திரிகளும் ரணிலைச் சந்தித்து தமது நாடுகளின் பூரண ஒத்துழைப்பை , அமையவுள்ள தேசிய அரசாங்கத்துக்கு வழங்கப்போவதாக உறுதியளித்துள்ளனர். ஜப்பானியத் தூதுவர் இன்னும் ஒரு படி மேலே சென்று இலங்கையின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஜப்பானியப் பிரதமருக்கு விளங்கப்படுத்துவதற்காக ஜப்பானுக்கு உடனடியாகப் பறந்துவிட்டார்.

விரைவில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள அமெரிக்கத் திறைசேரிக் குழுவினருடன் 19 ஆவது திருத்தச்சட்டத்தினூடாக ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்து நாடாளுமன்றத்துக்கு அதிகாரங்களை வழங்குவது பற்றி ரணில் கலந்துரையாடவுள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழர் தரப்பு அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்யப்போகிறது என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. கிட்டத்தட்ட 2009 போன்ற ஒரு சூழல் இப்போது உருவாகிறது என்று சொல்லலாம். புலிகளை அழிப்பதற்கு சர்வதேசம் இலங்கை அரசாங்கத்துக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கியது ஒன்றும் இரகசியமல்ல. நாங்கள் தான் புலிகளை அழிப்பதற்கு உதவி செய்தோம் என சீனா அண்மையில் பகிரங்கமாகவே தெரிவித்திருந்தது. இவை யாவும் பழைய கதை.

இப்போது இலங்கையில் ஸ்திரத்தன்மையை கட்டியெழுப்புவதற்கு சர்வதேசம் முன்வந்துள்ளது. குறிப்பாக '20 'நீக்கம், 19 அல்லது 21 அமுலாக்கம் என்கிற ஒரு விடயம் இலங்கை நாடாளுமன்றத்தில் அரங்கேறப்போகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் தேசியப்பிரச்னையான இனப்பிரச்னைக்கான தீர்வும் புதிதாக உருவாகப்போகும் அரசியலமைப்பில் அல்லது திருத்தத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்; கூட்டமைப்பு அதைச் செய்யுமா அல்லது வழமை போல் கிடைத்த சந்தர்ப்பங்கள் எல்லாவற்றையும் கோட்டை விட்டது போல் இந்த வாய்ப்பையும் நழுவ விடப்போகிறதா என்பதே தமிழ் மக்களின் கேள்வி.

2015 ல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதயசுத்தியுடன் தமிழர் பிரச்சினையை கையாண்டிருந்தால் நல்லாட்சி அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தின் போது ஒரு நல்ல தீர்வை எட்டியிருக்க முடியும் ஆனால் சுயநலத்தில் ஊறித்திளைத்த கூட்டமைப்பு நல்லாட்சி அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தின் போது இதயசுத்தியுடன் செயற்படவில்லை என்பதை விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

ஜே.ஆரின் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த பத்திரிகைகள் சில ஜே.ஆரை நரியாக உருவகப்படுத்தி கார்ட்டூன்களை வெளியிட்டிருந்தன. மாமன் ஜே.ஆரை விட மோசமான நரி ரணில் என்பது உலகறிந்த விடயம். ரணில் என்ற நரியின் வலைக்குள் அகப்படாமலிருப்பதற்கு கூட்டமைப்பு முதலில் செய்ய வேண்டியது சில சந்திப்புகளை மேற்கொள்வதே. முதலாவதாக இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரைச் சந்திக்க வேண்டும்.

ஜெய்சங்கருக்கு யாரும் பூச் சுற்ற முடியாது.ஜெய்சங்கர் , ரணிலின் மாமனாரான ஜே .ஆரின் காலத்திலிருந்தே இலங்கைப்பிரச்சினையை கையாண்டு வருபவர். உங்களது தாத்தாவையும் எனக்குத் தெரியும் உங்களது தந்தையையும் தெரியும் என ஜே .ஆர் , ராஜீவ் காந்திக்கு கூறியது போல் ஜெய்சங்கரும் ரணிலுக்கு 'உங்களது மாமாவின் காலத்திலிருந்து இலங்கை இனப்பிரச்சினையை கையாண்டு வருகிறேன்' என்று சொல்லலாம். இலங்கையின் இனப்பிரச்சினைக்கு 13 க்கு அப்பால் சென்று தீர்வு காணப்பட வேண்டுமென மோடியும் ஜெய்சங்கரும் வலியுறுத்தி வருகின்றனர்.

இப்போது இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்ட வரைவைத் தயாரிக்கும் வேலையை ஜெய்சங்கரிடம் விட்டு விட்டு அல்லது அவரது ஆலோசனையுடன் தீர்வுத்திட்ட வரைவைத் தயாரித்து அதை வரப்போகும் அமெரிக்கத் திறைசேரிக் குழுவினரிடம் சமர்ப்பிப்பதே கூட்டமைப்பின் முன்னால் உள்ள பணி; அமெரிக்காவின் செல்லப்பிள்ளையான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளருக்கு அமெரிக்கத் திறைசேரி அதிகாரிகளைச் சந்திப்பது ஒன்றும் கடினமான விடயமல்ல. அதே போல் கூட்டமைப்பு சமர்ப்பிக்கவுள்ள வரைவை அமுல்படுத்துமாறு அமெரிக்காவின் செல்லப்பிள்ளையான ரணிலிடம் [illegible] அதிகாரிகளை வலியுறுத்தவேனும் செய்வார்களா?

# வரலாறு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த ராஜபக்சவின் நண்பராகிய ஒரு தமிழர் சில நாட்களுக்கு முன் முகநூலில் பின்வருமாறு பதிவிட்டிருந்தார்" அறுபத்தி ஒன்பது லட்சம் வாக்குகளை பெற்றவர் கடற்படை முகாமில் இருக்கிறார். இரண்டு லட்சம் வாக்குகளை பெற்றவர் அலரி மாளிகையில் இருக்கிறார்" என்று.ஏனெனில் வரலாறு ஒரு கண்டிப்பான கிழவி.அவள் அப்படித்தான் தீர்ப்பு வழங்குவாள்.

யுத்தமானது இலங்கைத்தீவின் இரண்டு பாரம்பரியக் கட்சிகளையும் சிதைத்து விட்டது.மிக மூத்த கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி முழுத்தோல்வி அடைந்த நிலையில் தேசியப் பட்டியல் ஆசனத்தின் மூலம் ரணில் நாடாளுமன்றத்துக்கு வந்தார். ஒரே ஒரு ஆசனம்.அதுவும் தேசியப் பட்டியல் ஆசனத்தை வைத்திருக்கும் ஒருவர் பிரதமராக நியமிக்கப்படுவது ஆசியாவின் அதிசயந்தான்.அது நாடாளுமன்ற அரசியலின் தோல்வியைக் காட்டுகிறது.தமிழ் மக்களுடனான யுத்தம் இலங்கைத்தீவின் பாரம்பரியக் கட்சிகளை மட்டுமல்ல, நாடாளுமன்றத்தின் ஆன்மாவையே சிதைத்து விட்டது.ஏனென்றால் வரலாறு ஒரு கண்டிப்பான கிழவி

ரணில் ஒரு வலிய சீவன். ஒரு கல அங்கியான அமீபாவைப் போல ஒரு பக்கம் நசுக்க இன்னொரு பக்கத்தால் நெளிந்து,சுழித்துக் கொண்டு வருவார். இப்பொழுது வந்துவிட்டார். அவருக்கு இரட்டை வெற்றி. முதல் வெற்றி.அரசியல் எதிரிகளான ராஜபக்சக்களே அவரை செங்கம்பளம் விரித்து வா என்று அழைத்தது.இரண்டாவது வெற்றி, உட்கட்சி எதிரியான சஜித் பிரேமதாஸவைக் கீழேதள்ளியது.ஆனால், நாட்டின் பொருளாதாரச் சீரழிவுக்கு ரணிலும் ஒரு காரணம்தான்.

நாட்டுக்கு இப்பொழுது தேவையாக இருப்பது ஒரு இடைக்கால ஏற்பாடு. அது ஒரு ஸ்திரமான ஏற்பாடாக இருந்தால்தான் பொருளாதாரத்தைத் திட்டமிடலாம். ஐ.எம்.எப் போன்றவற்றை அணுகலாம்.எனவே ஒரு இடைக்கால ஏற்பாடாகத்தான் ரணில் உள்ளே வந்திருக்கிறார்.அதன்மூலம் அவர் தன்னை நிரந்தரமாக்க முயற்சிப்பார்.இந்தக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறியது போல அவர்,வரலாற்றில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும். இலங்கைத்தீவைப் போன்று பொருளாதார நெருக்கடிகளை அனுபவித்த ஆர்ஜென்டினா ,கிரேக்கம் ஆகிய நாடுகளில் அரசாங்கங்கள் அடிக்கடி மாறின.நிதியமைச்சர்கள் மாற்றப்பட்டார்கள். நாடு மறுபடியும் நிமிர்ந்து நிற்க பல மாதங்கள் எடுத்தன. உதாரணமாக,கிரேக்கத்தில் ஐந்துஆண்டுகளுக்குள் ஏழு தடவைகள் அரசாங்கம் மாறியது.ஆர்ஜென்டினாவில் ஐந்து தடவைகள் அரசாங்கம் மாறியது. ஐந்து தடவைகள் நிதியமைச்சர்கள் மாற்றப்பட்டார்கள்.பஸில், நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டபொழுது அவருக்கு ஏழு மூளைகள் என்று அவருடைய ஆதரவாளர்கள் படங்காட்டினார்கள்.ஆனால் அவரால் எந்த மந்திர மாயத்தையும் செய்ய முடியவில்லை.முடிவில் சிங்களமக்கள் அவரை 'காகம்' என்று கூறி இகழ்ந்து வீட்டுக்கு அனுப்பினார்கள். பஸிலுக்கு பின்வந்த நிதியமைச்சர்,அலி சப்ரி. அவர் பதவியேற்ற உடனேயே அதனை வேண்டாம் என்று கூறிவிட்டார். எனினும் அவருடைய ராஜினாமாவை கோத்தாபய ஏற்றுக்கொள்ளவில்லை. ரணில் இப்பொழுது பொறுப்பெடுத்திருப்பது ஒரு தோல்வியை.அதை வெற்றியாக மாற்ற வேண்டும். இல்லையென்றால் தோல்வியோடு ஓய்வுபெற வேண்டியிருக்கும்.

சில மாதங்களுக்கு முன்பு - பஸில் ராஜபக்ச நாடாளுமன்றத்துக்குள் நுழைவதற்கு சில நாட்களுக்கு முன்னர்தான்- ரணில் தேசியப்பட்டியல்மூலம் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்தார். அவருடைய முதலாவது உரையிலேயே அவர் சுட்டிக்காட்டிய விடயம் ஐ.எம்.எஃப்ஐ நோக்கிப் போக வேண்டும் என்பதுதான்.இப்பொழுது அவர்தான் பிரதமர்.அவர் மேற்கின் செல்லப்பிள்ளை. இந்தியாவும் அவரோடு சுதாகரிக்கும். எனவே மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலை பத்திரமாக கரை சேர்ப்பதா அல்லது கப்பலோடு சேர்ந்து மூழ்கி விடுவதா என்பது அவருடைய தலைமைத்துவத்தில்தான் தங்கியிருக்கிறது.அவர் பதவியேற்றபின் அவரை ஆசீர்வதித்த ஒரு பிக்கு அவருடைய முகத்துக்கு நேரே கூறியதுபோல இந்த ஆபத்தான விளையாட்டில் அவர் தோற்பாராக இருந்தால் பேர வாவியில் யானைகள் குளிக்க வேண்டி இருக்கும். அதாவது மஹிந்த அனுப்பிய குண்டர்களை மக்கள் பேர வாவிக்குள் தூக்கி எறிந்ததைப் போல யானைக் கட்சியையும் தூக்கி எறிவார்கள் என்று அந்தப் பிக்கு எச்சரித்திருந்தார். உண்மைதான், ஏனென்றால் வரலாறு ஒரு கண்டிப்பான கிழவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றை ஆசனமாயினும் சிம்மாசனம்!

○ எஸ்.பிரஜீவன்ராம்

அடுத்த பிரதமர் யார்? என்ற கேள்விக்கு சஜித், அநுர, நிமல், விஜயதாஸ ராஜபக்ச என்று பரந்து விரிந்திருந்த தெரிவுகள் அனைத்தும் தவிடுபொடியாகிப்போக முடிவில் ரணில் விக்கிரமசிங்க அந்த ஆசனத்தை ஆறாவது தடவையாக அலங்கரித்துள்ளார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்களால் முற்றுமுழுதாக நிராகரிக்கப்பட்டது ஐக்கிய தேசியக் கட்சி. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையில் தேர்தல் நடைபெற்ற காரணத்தால் ஒரேயொரு ஆசனம் மட்டுமே ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிட்டியது. தேசியப் பட்டியல் மூலமாகக் கிடைத்த அந்த ஒற்றை ஆசனம்தான் இன்றைக்கு சிம்மாசனம் என்று அன்று எவரும் எண்ணியிருக்கமாட்டார்கள். இதன்மூலம் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவர்கூட பிரதமர் பதவியை வகிக்கலாம் என்ற செய்தியை உலகுக்கு உரைத்துள்ளது ஆசியாவின் அதிசயம்.




**சீனாவுடன் நல்லுறவு கொண்டிருப்பதால் எதுவும் ஆகிவிடப் போவதில்லை. சீனாவைத் தாண்டியும் பல நகர்வுகள் இன்று காலத்தேவை. அந்த நகர்வுகளுக்கான குறிப்பாக அமெரிக்காவுடனும் மேற்கத்திய நாடுகளுடனானதுமான நகர்வுக்கு தக்க நபராக இன்று மாறியுள்ளார் ரணில்.**

### ரணில் எனும் ஆளுமை

1970ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் களனி தொகுதியின் பிரதான அமைப்பாளராக தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்த ரணில், 1993ஆம் ஆண்டு மே மாதம் ரணசிங்க பிரேமதாஸ தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் இறந்த பின்னர் உருவான டி.பி. விஜேதுங்கவை ஜனாதிபதியாகக் கொண்ட இடைக்கால அரசாங்கத்தில் பிரதமராக நியமிக்கப்பட்டார். இதுவரை ஐந்து தடவைகள் பிரதமராக பதவி வகித்த போதும் அவர் ஒரு முறைகூட தனது பதவிக்காலத்தை முழுமையாக பூர்த்தி செய்தது கிடையாது. ஆனாலும் ரணில் விக்கிரமசிங்க இலங்கை அரசியலில் ஒரு தவிர்க்க முடியாத ஆளுமையாக உள்ளார். பொறுமையானவர், விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் கொண்டவர், சர்வதேச ரீதியிலான ராஜதந்திரத் தொடர்புகள் என்பன ரணிலை தவிர்க்க முடியாத அரசியல் ஆளுமையாக உருவாக்கியுள்ளன.

இன்று இலங்கை வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது. அரசாங்கம் மீது மக்கள் நம்பிக்கை இழந்து வீதிக்கு இறங்கியுள்ளனர். போராட்டங்கள் நாளுக்கு நாள் தீவிரம் பெற்று வருகின்றன. இதனால் எந்த நேரமும் ஆட்சிக் கவிழ்ப்பு இடம்பெறலாம் என்ற நிலை உருவாகியுள்ளது. இதனைச் சரிசெய்ய வேண்டிய இக்கட்டான நிலையில், தவிர்க்க முடியாத நபராக மாறியுள்ளார் ரணில். அதுவும் ராஜபக்சக்களிடம் சர்வ அதிகாரங்களும் குவிந்திருக்கும் நிலையில் அதற்குள் ஊடறுத்து தனது தேவையை உரக்க உரைத்துள்ளார் அவர்.

சீனாவுடன் நல்லுறவு கொண்டிருப்பதால் எதுவும் ஆகிவிடப் போவதில்லை. சீனாவைத் தாண்டியும் பல நகர்வுகள் இன்று காலத்தேவை. அந்த நகர்வுகளுக்கான குறிப்பாக அமெரிக்காவுடனும் மேற்கத்திய நாடுகளுடனானதுமான நகர்வுக்கு தக்க நபராக இன்று மாறியுள்ளார் ரணில். ரணில் பிரதமராகப் பதவி ஏற்ற பின்னர் இலங்கையின் பங்குச்சந்தை மெல்ல உயர்வடைந்துள்ளது. அதேசமயம் இலங்கையின் அந்நியச் செலாவணி இருப்பை அதிகரிக்க பல பில்லியன் அமெரிக்க டொலரை வழங்க பல நாடுகள் தயாராகியுள்ளன. குறிப்பாக இந்தியாவின் ஏற்றுமதி நிதியளிப்பு நிறுவனமான எக்ஸிம் வங்கி இலங்கைக்கு 1.3 பில்லியன் டொலரை கடனாக வழங்கத் திட்டமிட்டுள்ளது. அதேபோல் 2 பில்லியன் அமெரிக்க டொலரை ஜப்பான் வழங்கவுள்ளதாகக் கூறப்படுகின்றது. அதேநேரம் அமெரிக்கா மற்றும் ஏனைய நாடுகளுடன் எதிர்வரும் வாரங்களில் பேச்சுக்களில் ஈடுபட ரணில் திட்டமிட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளிவருகின்றன.



### தமிழர் கனவுகளை கலைத்தார் ரணில்

ரணிலின் வருகையால் இலங்கைக்கு மேற்கத்தேய உதவி கிட்டும் என்பது யாவரும் அறிந்தது தான். இலங்கையராக அவரின் வருகையை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தாலும் தமிழர்களுக்கு மீண்டுமொருமுறை ரணில் துரோகமே செய்துள்ளார். நாட்டில் அண்மைய நாள்களாக இடம்பெற்று வரும் போராட்டங்களால் ராஜபக்ச சகோதரர்களுக்கு இறைவனால் தண்டனை வழங்கப்பட்டுவிட்டது எனத் தமிழர்கள் கொண்டாடிக் கொண்டு இருக்கும்போது அரசியல் அரங்கினுள் ரணில் பிரவேசித்துள்ளார். அவருடைய இந்தப் பிரவேசம் ராஜபக்சக்களை பாதுகாப்பதற்காகத்தான் என்ற பொதுவான குற்றச்சாட்டு பரவலாகவே உள்ளது. அத்துடன் ரணிலின் இந்த வருகை ராஜபக்சக்கள் மீதிருக்கும் கோபத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக நீர்த்துப் போகச்செய்வதுடன் அவர்கள் மீண்டெழுவதற்கும் அவகாசத்தைக் கொடுக்கவல்லது என்றால் அதில் மாற்றுக் கருத்தில்லை.

### பதவியை தக்கவைப்பாரா?

ரணில் பதிவியேற்றது முதலே அவருக்கான எதிர்ப்புக்களும் அதிகரித்துச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. ரணிலை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மட்டுமல்லாது ஜனாதிபதியின் பொதுஜன பெரமுன உறுப்பினர்களும் கடுமையாக எதிர்க்கின்றனர். குறிப்பாக சந்திம வீரக்கொடி, சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே, விஜயதாச ராஜபக்ச போன்றோர் அமைச்சுப் பதவிகளை ஏற்க மறுத்துவிட்டனர். அதேபோல் ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க ரணிலை பிரதம ராக்கிய தன் மூலம் பிணைமுறி மோசடியின் மூளையாக 2015 தொடக்கம் 2019 வரை செயற்பட்டதற்காக ரணிலுக்கு சிங்கள மக்களால் வழங்கப்பட மக்கள் தீர்ப்பை ஜனாதிபதி செயலற்றதாக்கிவிட்டார் எனக் கூறியுள்ளார்.

புதிய பிரதமரான ரணிலுக்கு முன்னால் பல தடைகள் காணப்படுகின்றன. முதலாவது, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கவேண்டும். இரண்டாவது, மக்களின் மனங்களில் நம்பிக்கையூட்டி தன்னை ஒரு மீட்பராக அடையாளப்படுத்த வேண்டும். மூன்றாவது, இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க வேண்டும். இந்தத் தடைகளைக் கடந்து ரணில் தனது பதவியை தக்கவைத்துக் கொள்வாரா? அல்லது மஹிந்த போல மக்களால் ரணிலும் விரட்டியடிக்கப்படுவாரா? கோத்தாபய மீண்டும் ரணிலைப் பிரதமராக்கி புதிய சிக்கலில் சிக்கிக்கொண்டாரா? இதுபோன்ற கேள்விக்குக் காலம்தான் பதில் சொல்ல வேண்டும். ■

# மக்களுக்குத் தேவை தனிநபர்களல்லர்!

○ பௌஸர்



ரணில் இப்போது செய்திருப்பது , மக்களின் போராட்டத்தைக் காட்டி கொடுத்து, ஒடுக்குமுறையாளர்களையும், நாட்டின் வளங்களை கொள்ளையடித்தவர்களையும் தற்காலிகமாக பாதுகாத்திருப்பதே ஆகும்!

ரணில் பிரதமராவதால், மக்கள் பிரச்சினைகள் தீரப் போவதில்லை. இன்றைய அரசியலின் பிரதான அழுத்தக்குழுவான மக்களின் நலனை முன்னிறுத்திப் போராடி வருபவர்கள் தான் எமக்கு தேவை. இதுவரையான முறைமைகள் (System) மாற்றப்படல் வேண்டும். அவை மாறாத வரை நம்பிக்கையான எதிர்காலம் இலகுவானதல்ல, அதற்காகவே சமூக , அரசியல் சக்திகள் போராடி வரு கின்றன. இதுவரையான அடிப்படைகளின் (அரசியலமைப்பு, பொருளாதாரக் கொள்கை) வழியாக அதிகாரத்தைப் பெற்றவர்களால் சாதிக்க முடியவில்லை என்பதை நிகழ்கால வரலாறு மெய்ப்பித்திருக்கும் போது, அதிகாரத்தில் இருக்கும் கோத்தாபயவும் , ஏலவே பலமுறை அதிகாரத்தில் இருந்த ரணிலும் சேர்ந்து நாட்டைக் கட்டியெழுப்பி, மக்களின் அடிப்படை மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பார்கள் என நம்புவது, கொள்கை நிலைப்பாடு சார்ந்த பலவீன நிலையாகும்.

நேற்றைய இலங்கை அரசியலில் அசைக்க முடியா அதிகாரபீடம் என மார்தட்டிய மஹிந்தவை விரட்டி, கோத்தாபயவை அடிபணிய வைத்த , மக்கள், அரசியல், சமூக சக்திகளுக்கு ரணில் ஒரு பொருட்டல்ல. இதுவரை உள்ளூர் அதிகார மேலாதிக்கத்துக்கு எதி[illegible]ன்கதவு [illegible]திய மற்றும் ஏகாதிபத்திய நலன்களுக்கும் எதிராக ஒருசேர போராட வேண்டி வந்திருக்கிறது என்பதே இன்றைய அடுத்த கட்ட அரசியல் நிலைமையாகும்.

மக்களுக்குத் தேவையானது, தனி நபர்களை இட்டு நிரப்புவது அல்ல. மக்களும், அரசியல் போராட்ட சக்திகளும் அதனைக் கோரவும் இல்லை. ஒடுக்கப்படும் மக்களின் போராட்டம், உறுதியுடன் பரந்துபட்ட அரசியல் உள்ளடக்கத்துடன் மேலும் பலப்பட்டு முன் செல்ல வேண்டும் என்பதையே இந்த நாடாளுமன்ற சந்தர்ப்பவாத அரசியல் மீண்டும் எமக்கு சொல்கிறது! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஊர்ப்புதினம்

○ இராகவன்

காந்தண்ணை குடும்பம் போனாப் போலை சிவாப்பெரியப்பா வீட்டில விஜயரத்தினம் எண்டொராள் இருந்தவர். அவருக்கு பிரசாந்த், வினோதினி எண்டு ரண்டு பிள்ளையள். பிரசாந்த் மூத்தவன். அவன் தங்கைக்காரியை வினோதினி எண்டு கூப்பிடமாட்டான். 'னோனி' எண்டுதான் கூப்பிடுவான். 1989 முற்பகுதியில் இந்தியன் ஆமி 'கரண்டாதூது'வில பெரியமுகாமடிச்சிருந்தவன். கரண்டாதூது எண்டது பெரியதோட்டவெளி. யாக்கருப்பிள்ளையார் கோவில் கழிஞ்சுபோக வாறது ஆயத்துச்சந்தி. அதால நேர போனால் சாவகச்சேரி. கிழக்கை திரும்பினால் வரணி. மேற்கை திரும்பினால் கேவளை, மலட்டுத்தாய், மண்டான், கல்லுவம் எண்டுபோய் வல்லைச் சந்தியில மிதக்கும்.

இந்தியன் ஆமி வந்து ஆயத்துச் சந்திக்குக் கிழக்காலயும் மேற்காலயும் பிடிச்சு முகாம் அடிச்சிருந்தான். கரண்டாதூவில மெயின் காம்ப் அடிச்சிருந்தாலும் அங்கால தெணிதூ, தைதூ, மோதூ எண்டு அடுத்தடுத்து பெரிய தோட்டவெளியெல்லாம் அவங்கட கட்டுப்பாட்டிலதானிருந்திச்சுது. கேவளை, மலட்டுத்தாய் முழுக்க அவங்கள்தானிருந்தவங்கள். 1987 வடமராட்சிக்குள்ள ஆமிக்காறன் காலடி



வைக்கிறதுக்கு முன்னம் மலட்டுத்தாயிலயெல்லாம் நிறைய ஆக்கள் இருந்திருக்கினம்.

39

பக்கத்து வீட்டு வசந்தியக்கா பின்னேரங்களில என்னை டெயிலி மலட்டுத்தாய்க்குக் கூட்டிக்கொண்டு போயிருக்கிறா. மலட்டுத்தாய்க்கு இரண்டு பாதையால போகலாம். ஒண்டு ஆயத்துச் சந்திக்குப் போய் மேற்கை திரும்பினால் ஒரு கூப்பிடு தூரத்திலதான் மலட்டுத்தாயிருக்கு. இரண்டாவது தெடுத்தனைக்குள்ளால போய்ப் போகலாம். நானும் வசந்தியக்காவும் அதுக்குள்ளாலதான் போறனாங்கள். போறவழியில கார்க்காரக் கனகண்ணை வீடிருக்கு.

இந்தக் கனககண்ணை ஆரெண்டால் நான் இதுக்குமுன்னம் ஊர்ப்புதினத்தில சொன்ன கணேசுமாமாவின்ர அஞ்சு சகோதரியளில ஒராளான தங்கமுத்துவைக் கட்டினவர்தான் கனகண்ணை. அவற்றை வீட்டு முத்தத்தில எப்பவும் ஒரு கறுப்புக்கலர் 'ஏபோட்டி'க்கார் நிக்கும். அதைக் கடந்து போனால் பாம்புக்கடிக்கு வைத்தியம் பாக்கிற சரவணையப்பாவின்ர கோயிலும் வீடும் வரும். அதையும் கடந்தால் நார்க்கடகம், மாப்பெட்டி,மூடுபெட்டி,நீத்துப்பெட்டி,இடியப்பத்தட்டு,திருநீற்றுக்குட்டான் செய்யிறாக்களின்ர வீடுகள் வரும்.

அதுக்குள்ள என்ர சிநேகிதப்பொடியள் இரத்தினசோதி, ரமணகுமாரெல்லாம் இருக்கிறாங்கள். அதுகளையும் கடந்து போனால் மெயின்றோட்டில மிதக்கும். அதுதான் மலட்டுத்தாயின்ர மெயின். அதுக்குள்ளதான் மார்க்கண்டு மாமா, கமலிஅக்கா, ராமநாதண்ணை, செல்வராணியக்கா, அன்ரியப்பா, முகுந்தன், மிகுந்தன், மயூரன், கமல் எண்டு நிறையப்பேரிருந்தவை. இதிலை குமுந்தன், மிகுந்தன் மயூரன், கமல் எல்லாம் என்னோட்ட பொடியள். நான் அவங்களோட போளை அடிச்சிருக்கிறன். கிட்டிப்புள்ளு விளையாடியிருக்கிறன். ஒளிச்சுத்தொட்டு, கள்ளன் பொலிஸ்கூட விளையாடியிருக்கிறன்.

இதுக்கை முகுந்தனும் மிகுந்தனும் அன்ரியப்பாவின்ர பொடியள். அவரின்ரை பெயர் பாலேந்திரன்.. மயூரனும் கமலும் அன்ரியப்பா எண்டு கூப்பிட்டதால நானும் அவரை அன்ரியப்பா எண்டுதான் கூப்பிடுவன்.

(தொடரும்)

# பலமாகும் யானை




பொதுத்தேர்தலில் கட்சிக்கு ஏற்பட்ட தோல்வியையடுத்து, பதுங்கியிருந்த ஐக்கிய தேசியக்கட்சி அரசியல்வாதிகளெல்லாம், கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதமரான கையோடு மீண்டும் அரசியலுக்கு 'ரீ என்டரி' கொடுத்துள்ளனர்.
கட்சி ஆதரவாளர்களை சந்தித்து, மீண்டும் செயற்பட ஆரம்பிப்போம் என உற்சாகமளித்துவருகின்றனர். சஜித்துக்கு ஆதரவளித்த உள்ளாட்சிமன்ற உறுப்பினர்கள் பலர், மீண்டும் ரணில் பக்கம் சாயவுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது. இது தொடர்பில் கட்சியின் தவிசாளர் வஜீர அபேவர்தனவுக்கு பல தரப்பினரும் தூதனுப்பியுள்ளனர்.
பொருளாதாரத்தை மீட்கும் சவாலை தான் எதிர்கொள்வதால், கட்சி நிர்வாகத்தை தவிசாளர் வஜீர, செயலாளர் பாலித ரங்கே பண்டார, ருவான் விஜேவர்தன ஆகியோரிடம் ரணில் கையளித்துள்ளாராம்.

# யோஷிதவுக்கு வந்த சோதனை

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட இளையோர் மீது தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர், நாட்டில் வெடித்த வன்முறையையடுத்து, ராஜபக்ச குடும்பத்தினர் பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்தனர். நிலைமை மோசமானதையடுத்து, பாதுகாப்புத் தரப்பின் பங்களிப்புடன், அவர்கள் பாதுகாப்பான இடத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.



ராஜபக்சக்கள் பயன்படுத்திய அதிகாரபூர்வ தொலைபேசிகள், 'ஓப்'செய்யப்பட்டன. ஏனெனில் அதனை வைத்து தாமிருக்கும் இடத்தை போராட்டக்காரர்கள் கண்டுபிடித்து விடலாம் என்பதால், பிரத்தியேக தொலைபேசியையே அவர்கள் பயன்படுத்தினர்.
இதன்போது, தனக்கு நெருக்கமானவர்களுக்கு அழைப்பை ஏற்படுத்துவதற்கு யோஷித ராஜபக்ச முற்பட்டுள்ளார். ஆனால் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. தொலைபேசி கட்டணம் 4 ஆயிரம் ரூபா செலுத்தப்படாததாலேயே இந்நிலைமையாம். பின்னர் நண்பர்கள் ஊடாக கட்டணத்தைச் செலுத்தியே அவர் தனக்கு நெருக்கமானோரிடம் தொலைபேசியில் உரையாடினாராம்.

# சஜித்துக்கு எதிராகச் சதி?

பிரதமர் பதவியை ஏற்பதற்கு சஜித் பிரேமதாஸ இழுத்தடிப்பு செய்தார், தங்கத் தட்டில் வைத்து வழங்கப்பட்ட வாய்ப்பைத் தவறவிட்டார் என்ற விமர்சனங்கள் பரவலாக முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் பிரதமர் பதவியையும், இடைக்கார அரசையும் பொறுப்பேற்பது தொடர்பில் கட்சி உறுப்பினர்கள் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களுடன் சஜித் பிரேமதாஸ பல தடவைகள் பேச்சு நடத்தியுள்ளார். ஜனாதிபதி கோத்தா பதவி விலகாமல், எந்தவொரு இணக்கப்பாட்டையும் வெளியிடக்கூடாது என கட்சி மற்றும் கூட்டணி உறுப்பினர்களுள் பெரும்பாலானவர்கள் தெரிவித்துள்ளனர். இதற்கமையவே ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என சஜித்தும் உறுதியாக அறிவித்துவந்தார்.
ஆனால் கடைசி நேரத்தில், பிரதமர் பதவியை ஏற்காவிட்டால், நாங்கள் கட்சியில் இருந்து வெளியேறுவோம் என சில உறுப்பினர்கள் பல்டியடித்துள்ளனர். இதனையடுத்து ஜனாதிபதிக்கு பதவி விலக காலக்கெடு விதித்து கடிதமும் அனுப்பப்பட்டது. ஆனால் சஜித் தரப்பால் முன்வைக்கப்பட்ட 4 நிபந்தனைகளுக்கும் ஜனாதிபதி உடன்படவில்லை.
ஆக சஜித் பிரதமராவதை தடுக்க அவரின் கட்சிக்குள் இருந்த சிலரே சதி செய்தனரா என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி

83

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | ■ | 10 | | | ■ | |
| ■ | 11 | 12 | | | ■ | 13 | |
| 14 | ■ | 15 | | ■ | 16 | | |
| 17 | 18 | | ■ | 19 | | | ■ |
| 20 | | ■ | 21 | | ■ | 22 | 23 |
| 24 | | | | | | ■ | |

அனுப்புபவர் பெயர்:.................................................

முழுமையான தபால் விலாசம்: ..................................

.................................................................

கையொப்பம்:.......................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. விலாசம் 4. ஒத்தாசை 7. உணவில் சேர்ப்பது 8. அகப்பை வகையைச் சார்ந்தது 9. தான்/ தாங்கள் இரண்டையும் குறிக்கும் 10.பாத்திரம் 11. மகள் 13. போதை தருவது 15. ஒன்றாகப் போடு 16. போராட்டம் நடத்துபவன் 17. தினசரி மாறுவது 19. நீர் 20. முகத்தில் வரும் சிறிய புடைப்பு 21. சேர்ந்திருப்பது 22. அவனி 24. நீர்வாழ் உயிரினம்.

## மேலிருந்து கீழ்

1. முன்னிலையில் 2. கன்று போட்ட மாடு கறக்கின்ற பால் இந்த ரகத்தைச் சேர்ந்தது. 3. பிரி 4. பசளை 5. பசுமையான தன்மை 6. அதிகாலைப் பொழுதில் வானில் தெரிவது 8. ஒன்று சேர்வது 10. படிப்பு 12. தகைமைத் தன்மை 13. வாசனைத் திரவியம் 14. தலைவன் 16. போன்று 18. ஈயாதவன் 19. எல்லா 21. தோழி 23. பதில்

### சொற்சிலம்பம் போட்டி 80 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. பிரசவம் 4. வித 6. மலை 7. அரளி 8. மாதர் 10. தச்சர் 11. தலைக்கவசம் 13. கதறும் 15. களவு 16. தவிடு 17. பாவம் 18. பாவி 19. குலை 20. முதிர்ச்சி.

**மேலிருந்து கீழ்**

1. பிரமாதம் 2. சமர்க்களம் 3. வலை 4. விரசம் 5. தளிர் 7. அச்சம்தவிர் 9. தலை 10. தவறு 12. கதவு 14. நடுநிசி 15. கவலை 17. பாகு 18. பாதி.

**சொற்சிலம்பம் போட்டி இல.83**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

**20.05.2022** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 82 இல் வெற்றி பெற்றோர் விவரம்

**1 ஆம் பரிசு**
**த.மதுமிலன்**
58/1, சிவன் புது வீதி
நல்லூர்.

**2 ஆம் பரிசு**
**தி.யாதவி**
சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்

**3 ஆம் பரிசு**
**க.இரவீந்திரன்**
இல.18, கல்லூரி வீதி,
மானிப்பாய்.

**4 ஆம் பரிசு**
**மா.மகாலிங்கம்**
கைதடி மேற்கு
கைதடி.

**5 ஆம் பரிசு**
**அ.[illegible]**
[illegible]
யாழ்ப்பாணம்


# யாழ்ப்பாண வரலாறு

**1505-1948 வரை**

○ ந.பரமேஸ்வரன்

**1871 ஒகஸ்ட் 09**
Examiner பத்திரிகை ஆசிரியரும் பிரபல சட்டத்தரணியுமான லோறன்ஸ் (C.A.Lorenz ) காலமானார்.

**1871 டிசெம்பர் 12**
பூரண சூரிய கிரகணம்



**1872 ஜனவரி 01**
இலங்கையில் ரூபா, சதம் நாணயங்கள் அறிமுகம் செய்யப்பட்டன.

**1872 மே 21**
வைமன் கதிரவேற்பிள்ளை, ஆளுநர் வில்லியம் கிரகரியினால் ஊர்காவற்றுறை பொலிஸ் நீதிவனாக நியமிக்கப்பட்டார்.

**1872 ஜூலை 03**
**யாழ்ப்பாணக்கல்லூரி ஆரம்பம்**
5000 ஸ்டேர்லிங் பவுண் செலவில் யாழ்ப்பாணக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. ஹாஸ்டிங் (E.P.Hastings) முதலாவது அதிபராக நியமிக்கப்பட்டார். அமெரிக்க மிஷன்,வெஸ்லியன் மிஷன், இங்கிலாந்து திருச்சபை, யாழ்ப்பாண அரசாங்க அதிபர் ஆகிய நான்கு தரப்பு நிர்வாகத்தின் கீழ் யாழ்ப்பாணக்கல்லூரி நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது.

**1872 ஒகஸ்ட் 08**
ஆயர் பொன்ஜீன் அடிகளார் மடுமாதா தேவாலயத்துக்கு அடிக்கல் நாட்டினார்.

**1873 பெப்ரவரி**
கத்தோலிக்க அச்சியந்திரசாலை ஆரம்பம். 1871 ஆம் ஆண்டு பிரெஞ்சு அரசாங்கத்தினால் கத்தோலிக்க திருச்சபைக்கு அச்சியந்திரம் ஒன்று அன்பளிப்புச்செய்யப்பட்டது. அந்தக்காலத்தில் அச்சியந்திரத்தை இயக்கக்கூடியவர்கள் யாழ்ப்பாணத்தில் இருக்கவில்லை. இந்தச்சந்தர்ப்பத்தில் அன்ட்றூ (Andrew)என்பவர் ஒருவாறாக இயந்திரத்தை இயக்கப்பழகி அச்சுவேலைகளைச் செய்யத்தொடங்கினார்.

**1873 ஜூன் 18**
அமெரிக்க மிஷனைச் சேர்ந்த உடுவிலில் வசித்து வந்த ஸ்பால்டிங் தனது 83 ஆவது வயதில் காலமானார்.இவர் ஆங்கில-தமிழ் அகராதி ஒன்றையும்,தமிழ் - அகராதி ஒன்றையும் தொகுத்துள்ளார்.

**1873 செப்ரெம்பர் 06**
வடமத்திய மாகாணம் என்ற பெயரில் புதிய மாகாணம் ஒன்று உருவாக்கப்பட்டது.அநுராதபுரம்,புத்தளம்,கற்பிட்டி என்பன வடமாகாணத்திலிருந்து பிரிக்கப்பட்டன. அதுவரை ஐந்து மாகாணங்களாக இருந்த இலங்கையின் நிர்வாகக் கட்டமைப்பு ஏழு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது.

**1874 பெப்ரவரி 08**
ஆளுநர் வில்லியம் கிரகரி (Wiliam Gregary) நான்கு நாள் விஜயமாக யாழ்ப்பாணம் வந்தார். தனது விஜயத்தின் போது திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலைக்கும் அவர் விஜயம் செய்தார். பதினோராம் திகதி சவரிமுத்து முதலியார், கேற் முதலியாராக ஆளுநரால் நியமிக்கப்பட்டார்.
சவரிமுத்து முதலியார் யாழ்ப்பாண மக்களின் சார்பில் பதக்கம் சங்கிலி ஒன்றை ஆளுநருக்கு அன்பளிப்புச்செய்தார்.

**1874 மார்ச் 10**
முத்துக்குளிப்பு மூலம் 10,000 ஸ்டேர்லிங் பவுண் வருமானம் கிடைத்தது.

**1874 ஜூலை 23**
சட்டசபை தமிழ்ப் பிரதிநிதியான முத்துக்குமாரசாமிக்கு' Knight hood' எனப்படும் சேர் பட்டம் கிடைத்தது. இந்த இடத்தில் ஒரு சுவாரஷ்யமான சம்பவத்தையும் குறிப்பிட வேண்டும். இதே முத்துக்குமாரசாமி விக்ரோறியா மகாராணியின் முன்னிலையில் அரிச்சந்திர புராணத்தை ஆங்கிலத்தில் நடித்துக் காட்டியது பற்றியும் அரிச்சந்திரன் சுடலை காக்கும் காட்சியில் விக்ரோறியா மகாராணி மயங்கி வீழ்ந்தது பற்றியும் ஏற்கனவே பார்த்துள்ளோம். அப்போது மயக்கம் தெளிந்து எழுந்த மகாராணி தனது கட்டிலில் முத்துகுமாரசாமியை அமருமாறு கூறினார்.
இது வெள்ளைத்தோல் பத்திரிகை ஆசிரியர்களுக்கு விரும்பத்தகாத ஒரு விடயமாக இருந்தது. Observer பத்திரிகை தனது கிசு கிசு பக்கத்தில் 'விக்ரோறியா மகாராணி முத்துக்குமாரசாமியுடன் படுக்கையை பகிர்ந்து கொண்டார்' (Queen Victoria share her bed) என எழுதியது.

**1874 டிசம்பர் 30**
குமாரசாமி முதலியார் காலமானார். இவர் வைமன் கதிரவேற்பிள்ளையின் தந்தையாவார். இவர் அருளம்பலக்கோவை, இந்திரகுமார நாடகம் போன்ற நூல்களை இயற்றியுள்ளார்.

**1875 ஜூலை**
வாந்திபேதி தாக்கம் காரணமாக இந்தியாவிலிருந்து வந்த கூலித்தொழிலாளர்கள் 500 பேர் இறந்தனர்.

**1875 ஒக்டோபர்**
சேர் பட்டம் பெற்று நாடு திரும்பிய முத்துக்குமாரசாமிக்கு கொழும்புத் தமிழர்கள் மகத்தான வரவேற்பு அளித்தனர்.

**1875 நவம்பர்**
யாழ்ப்பாணத்தில் வாந்திபேதி தாக்கம் ஏற்பட்டது.

**1875 டிசெம்பர்**
பிரித்தானிய இளவரசர் கொழும்புக்கு விஜயம் செய்தார். இளவரசருக்கு அன்பளிப்புச் செய்வதற்கென யாழ்ப்பாணத்தில் நிதி திரட்டப்பட்டது. திரட்டப்பட்ட நிதி 10,000 ரூபாவைத் தாண்டியது இந்தப்பணத்தில் ஒரு நகைப்பெட்டியும் நகைகளும் யாழ்ப்பாண மக்களால் அன்பளிப்புச் செய்யப்பட்டன. நகைப்பெட்டியின் மேற்புறத்தில் தமிழிலும் ஆங்கிலத்திலும் இலங்கைத்தமிழர்களின் அன்பளிப்பு எனப் பொறிக்கப்பட்டிருந்தது. இந்த நகைப்பெட்டியினுள் வைரங்கள் பதிக்கப்பட்ட பாம்புக்காப்பு ஒரு சோடி, ரூபி வைரங்கள் பதிக்கப்பட்ட சிங்க முகக்காப்பு ஒரு சோடி, முத்துக்கள் பதிக்கப்பட்ட யானை முகக்காப்பு ஒரு சோடி, பட்டியம் ஒன்று, முத்துக்கள் பதிக்கப்பட்ட ரோஜா வடிவ கொண்டைப்பூ, வண்ணாத்திப்பூச்சி வடிவ கொண்டைப்பூ, ரோஜா வடிவத் தோடுகள், பல்வேறு வடிவ மோதிரங்கள் என்பன அடங்கியிருந்தன. சொலமன் ஜோன் பிள்ளை, அச்சேரி முதலியார் கனகரத்தினம் ஆகியோர் இலங்கைத்தமிழர்கள் சார்பில் வரவேற்புப் பத்திரத்தை வாசித்தளித்தனர்.

(வரலாறு தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முறம் செவி யானை வேந்தர்" ( புறம்.339:12)

"உயர் நிலை உலகம் அவன்புக, வரிநீறு
ஆடு. சுளகின் சீறிடம் நீக்கி
அழுதல் ஆனாக் கண்ணன்" (புறம். 249.1113)

"...... வயக்களிற்றுக்
கோடு உலக்கை யாகநல் சேம்பின் இலைசுளகா
ஆடுகழை நெல்லை அறை உரலுள் பெய்து இருவாம்" (கலி. 41.13)

"முறம் செவி மறைப்பாய்பு முரண் செய்த புலி செத்து" (கலி. 52)

"முறம் செவி வாரணம் முன் குளகு அருந்தீ" (கலி. 42.2)

"அகம் தனிலே வாழ்தலால் அன்றுலகு அளந்த
முகுந்தனுமே ஆகும் முறம்"
(காளமேகப் புலவர்)



# சுளகு

அற்றைத் திங்கள் 14



○ தி.செல்வமனோகரன்

அது ஒரு மத்தியான வேளை. அகோர வெயில் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. அவன் விரைந்து நடந்து வந்து கொண்டிருந்தான். எதிரில் ஒரு கிழவி நடக்கமுடியாமல் தளர்ந்து நடந்து வந்து கொண்டிருந்தாள். அவனது அம்மாவை ஒத்த வயதிருக்கும். அவனுக்குப் பாவமாயிருந்தது. அருகில் சென்று அன்புடன் உரையாடி வீட்டுக்கு உணவுண்ண அழைத்தான். கிழவிக்கும் பயங்கரப்பசி. அவனோடு நடந்தாள். வீட்டுத்திண்ணையில் கிழவியை அமர்த்திவிட்டு உள்ளே சென்றான். மனைவியைத் தேடினான். அவள் தலையில் ஈர் வாரிக்கொண்டிருந்தாள். இவன் அவளருகே சென்று ஈரொடு பேனும் எடுத்து அவளை மகிழ்வித்து உணவுண்ண ஒரு கிழவியை அழைத்து வந்திருப்பதாகச் சொன்னான். அவள் பத்திரகாளியானாள். ஆடினாள், பாடினாள் கணவனைப் பழமுறத்தால் ஓடஓட விரட்டியடித்தாள். இதனை'ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தால் சாடினாள் ஓடோடத் தான்' என்கிறாள் ஔவை.

சுளகு என்பது முறம், குல்லம், தட்டுப் புடை, தூற்று முறம், சூர்ப்பம் எனப் பலவாறு சுட்டப்படுகின்றது. பனையோலையின் இரு இதழ்களை இணைத்திருப்பதே ஈர்க்கு எனப்படுகிறது. மனிதரால் பனம் ஈர்க்கின் வழி கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கருவியே சுளகு. குருத்தோலை, சார்வோலை என்பவற்றில் சத்தகத்தால் ஓலையை ஈர்க்கில் இருந்து பிரித்தெடுப்பர். ஓலையின் மட்டையை ஒட்டியுள்ள காம்பிலிருந்து நுனியை நோக்கிக் குத்தியிழுக்க வேண்டும். ஓலையை சரிவரப் பிரிப்பின் கோணல் இல்லாமல் ஈர்க்குத் தனியே பிரிந்து வரும். ஈர்க்கின் அடிப்பகுதி பலமானதாகவும் நுனி வளையும் இயல்பும் மிருதுவானதாயும் காணப்படும். இதனைக் கூரை வேயவும் பயன்படுத்துவர். ஈர்க்கினால் வட்டத்தட்டு, சுளகு, ஈர்க்குப் பெட்டி, சடைக்கயிறு போன்றன இழைக்கப்படுகின்றன.

ஈர்க்கினால் தட்டு இழைக்கப்படும். அத்தட்டினை மட்டைகளுடன் பிணைத்து ஈர்க்கினால் பின்னப்பட்டே சுளகு உருவாக்கப்படுகிறது. தமிழகத்தில் பனம் மட்டைக்குப் பதிலாக மூங்கிலைச் சீவி வைத்துக் கட்டும் வழக்கமும் காணப்படுகிறது. பொதுவில் சுளகை கொம்பில்லாத மாட்டின் முகத்தோடு ஒப்பிட்டு உரைப்பர். சுளகின் மட்டையைக் கட்டும் முறையை அடிப்படையாகக் கொண்டு கட்டுச் சுளகு, சுற்றுச் சுளகு என்று கூறுவர். தட்டையாகப் பின்னப்பட்டதை இரு அங்குல பனைமட்டையுடன் வளைத்து பின்பகுதியை உயர்த்திக் (ஒரு சாண் வரை) கட்டுவர். நுனிப்பகுதி மட்டை தட்டையாக வைத்துக் கட்டப்படும். இரு கரைவிளிம்பு மட்டைகளும் பின்பக்கத்தில் இருந்து சாய்வாக நுனிப்பகுதியுடன் கட்டப்பட்டிருக்கும். தட்டுக்கும் மட்டைக்குமான முடைவு (கட்டு) குறித்த இடைவெளியில் பனம் ஈர்க்கினால் கட்டப்பட்டிருக்கும். இதனால் இது கட்டுச் சுளகு எனப்படுகிறது. இவ்வாறு கட்டாது மட்டையையும் தட்டையையும் பனம் ஈர்க்கினால் முழுவதுமாகச் சுற்றிச் சுற்றி முடைவது சுற்றுச் சுளகாகக் கூறப்படுகிறது.

தேவைகளுக்கேற்ப சுளகின் வடிவத்திலும் சிறுசிறு மாற்றங்கள் உள்ளன. பொதுவில் வீடுகளில் பயன்படுத்தப்படும் சுளகுகள் பின்புறம் அகன்றும் அதனைவிட சிறிது ஒடுங்கிய தட்டையான முன்பகுதியைக் கொண்டதுமாக இருக்கும். இது நெல், அரிசி உள்ளிட்ட தானியங்களைப் புடைக்கப் பயன்படுகின்றது. தானியங்களுடன் இருந்த உமி, கல், பதர் போன்றவற்றை நீக்கவே புடைத்தல் செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது. சுளகின் பின்னால் இடைவெளிகளின் வழி தானியங்கள் கொட்டுண்ணாது (சிந்தாது) இருக்க ஆரம்ப காலத்தில் சுளகின் பின்புறம் மண்ணாலும் பின்பு பசுஞ் சாணகத்தாலும் மெழுகப்பட்டது. மண்ணையும், சாணியையும் சேர்த்து மெழுகுதலும் உண்டு. சுளகின் பின்புறத்தில் வில் வம்பழத்தின் பிசினைப் பூசும் வழக்கமும் இருந்துள்ளது. சாதாரணமாக புடைத்தலை எல்லோராலும் உடனடியாகச் செய்து விடமுடி யாது. அது பயிற்சிவழி பெற்ற ஒரு திறமையாகவே காணப்படுகிறது. அரிசி, நெல்லிலிருந்து பதர் தனிய, உமி தனிய, கல் தனிய என அகற்றி தானியத்தைக் கொழித்து எடுத்தல் ஒரு தனிக்கலையே.

'தனக்குத் தனக்கெண்டா சுளகு படக்குப் படக்கு என்னும்' என்பது பழமொழி. தானியத்தைக் கொழித்து எடுக்கும்போது படக்குப் படக்கு என ஒலி எழும்புவதை மனித சுயநலத்துக்கு ஒப்பாகச் சொல்லப்படும் பழமொழி இது. வீட்டில் மாவிடித்து, அரித்து குறுணல் கொழித்தெடுத்து, அப்பம் சுடுதல் தனிச் சடங்காக அமையும். மாவிடித்தலின்போது குறுணல் கொழிக்கவும் ,மாவை அரித்து இடவோ அல்லது வறுத்த மாவைக் கொட்டி ஆறவிடவோ சுளகைப் பயன்படுத்துதலுமுண்டு. நெல்லுடைத்து தீட்டிய அரிசியில் தவிட்டைப் புடைக்கவும் முழு அரிசியிலிருந்து குருணலை வேறாக்கவும் சுளகே பயன்படுத்தப்பட்டது. கல்லும் பதரும், உமியும் நீக்க அவற்றைச் சுளகிலே அளவாகப் போட்டு மெதுவாகச் சுளகைத் தட்டி தானியத்தை எழுப்பி வீசி மீண்டும் அதனைப் பிடித்தலே புடைத்தல் கலை எனலாம்.



விவசாய நிலங்களில் அறுவடைக் காலத்தில் நெல்லிலிருந்து பதரை கல்லை அகற்ற "தூற்றல்" செயற்பாடு மேற்கொள்ளப்படும். அதற்குப் பயன்படுத்தப்படும் சுளகு 'குல்லம்' எனப்படும். இது அடி அகன்று சாதாரண சுளகிலும் அடிப்புறம் உயரம் கூடியதாகவும் முன்பகுதி கூடுதலாக ஒடுங்கி வாய் போலவும் காணப்படும். இதில் நெல்லினை இட்டு தலைக்கு மேலே உயர்த்திப் பிடித்து காற்றின் திசைவழி கொட்ட காற்று பதரை, உமியை, கல்லை அதன் அதன் கனத்துக்கு ஏற்ப விழுத்த நல்ல நெல் தனியே விழும். விவசாயச் செயற்பாடுகளில் படையலைப் படைப்பதற்கு சாதாரண சுளகுகளோ, தட்டைச் சுளகுகளோ பயன்படுத்தப்படுகின்றன. சுளகு குல தெய்வத்துக்கு, பிதுருக்கு படையற் சோறு வைக்கவும் ஊறுகாய், ஒடியல், புழுக்கொடியல் முதலானவற்றைக் காயவிடவும் எனப் பல வகையில் தேவைகளுக்கேற்ப பயன்படுத்தப்படுகின்றது. வீடுகளில் நீண்ட நாள் சேமிப்பில் இருக்கும் தானியம் உள்ளிட்ட பொருட்களை வண்டு பிடிக்காமல், ஈரலிப்பு இன்றி இருக்க காய வைக்கும் தட்டாகவும் சுளகு பயன்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் ஆடி பதினெட்டு விழாவின் போது சுளகில் பூ, பழம் முதலியவற்றை வைத்து ஆற்றில் விடும் வழக்கம் காணப்படுகிறது.

வீடுகளில் பயன்படுத்தப்படும் சுளகுகளில் அழகியல் தன்மை காணப்படும். ஈர்க்குகளுக்கு வெவ்வேறு வர்ணமூட்டிக் காயவைத்து அவற்றைத் தட்டுப் பின்னலாகவும் தட்டுடன் மட்டையைக் கட்டவும் அல்லது சுற்றவும் பயன்படுத்துவதனூடாக அதனை அழகுறச் செய்வர். குசினியின் ஒரு மூலையில் நிமிர்த்திச் சாத்தப்பட்டதாக இருந்த சுளகுகள் கல்வீடுகளின் எழுச்சிக் காலத்தில் குசினிச் சுவரில் அடிக்கப்பட்ட ஆணியில் மாட்டப்பட்டன.

"இன்று அம்மம்மாவும் இல்லை; அரிசி புடைக்கின்ற அந்த வலுவான கைகளும் இல்லை; புடைத்தலுமில்லை; சுளகுமில்லை. கோழிகளுமில்லை. எங்கள் பிள்ளைகள் புறோயிலர் கோழிகளாக 'முருக்குப் பெருத்தல் போல' வளர்கின்றனர்."

வீடுகளில் குழைத்த மாவை சுளகிலிட்டு சுண்டினால் அல்லது பேணியால் குத்திச் சிறு துகள்களாக்கி பிட்டுக்குரியதாக்குவர். குழைந்த சோறை சுளகில் இட்டு காயவிடுவதனால் தேறவைக்க முடியும். முறுக்குப் பிழியவும், முருக்கமிலையில் வடையைத் தட்டி வைக்கவும் அச்சுப் பலகாரம் செய்யவும் சுட்ட பலகாரங்களை ஆறவிடவும் எனச் சுளகு பல்வேறு அவதாரங்களை எடுக்கின்றது.

பனம் பொருட்கள் எங்கள் மண்ணின் குடிசைக் கைத்தொழிலாகக் குறிப்பாக பெண்களின் முக்கிய தொழிலாக சுயபொருளாதார வளர்ச்சியைத் தருவதாக இருந்தன. இன்று சுளகு பிளாஸ்ரிக்கில் வருகிறது. பிளாஸ்ரிக் கிண்ணங்களும், தட்டுக்களும் சுளகின் செல்வாக்கைக் குறைத்துவிட்டன.

விவசாய நிலங்களில் இன்று இயந்திர அரிவி வெட்டின் வழி தொழிலாளிகளின் வகிபாகம் வலுவிழக்கச் செய்யப்பட்டதைப் போல சுளகின் பயன்பாடும் அற்றுப் போயிற்று. குடிசைக் கைத்தொழிலும் வலுவிழந்து போயிற்று. வட்டச் சுளகில் குழைத்து சூழ்ந்திருந்து உண்ணும் மகிழ்வான தருணமும் காணாமல் போயிற்று.

'அம்மம்மா வீட்டின் பின்புறத் தாழ்வாரத்தில் பலகைக் கட்டையில் இருந்து கொண்டு அரிசி புடைச்சுக் கொண்டிருந்தா. நான் அருகில் குந்தியிருந்தன். சுளகில் இருந்து கொட்டுண்ணுகிற பதரையும் குருணியையும் பொறுக்கப் பலவித ஒலிகளை எழுப்பிக் கொண்டு கோழிகளும் சேவல்களும் நிற்கின்றன. வேலியில் காகங்கள் கரைகின்றன. இடையிடையே பறந்தோ தத்தித் தத்தியோ வந்து அரிசி பொறுக்குகின்றன' இது முப்பது வருசத்துக்கு முந்தின காட்சி.

இன்று அம்மம்மாவும் இல்லை; அரிசி புடைக்கின்ற அந்த வலுவான கைகளும் இல்லை; புடைத்தலுமில்லை; சுளகுமில்லை. கோழிகளுமில்லை. எங்கள் பிள்ளைகள் புறோயிலர் கோழிகளாக 'முருக்குப் பெருத்தல் போல' வளர்கின்றனர். நாங்கள் எங்களின் வாழ்வில் நல்லவை என நம்பி அல்லது தீயவை என்று அறிந்தே தீயவற்றை, தேவையற்றவற்றை 'சல்லடை' போல சேமித்துக் கொள்கிறோம்; பின்பற்றுகின்றோம். நல்லவற்றை, தேவையானவற்றை தவறவிட்டு விடுகிறோம். அது தவறு. 'சல்லடை போல இருக்காதே, முறம் போல இரு' எனும் பழமொழி மனதில் இருத்தத்தக்கது ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"தம்பி...என்ரை மகனும் உங்களைமாதிரித்தான் இயக்கம். போனதுக்கு இன்னும் நான் காணேலை. கண்டா இஞ்சை கூட்டிக்கொண்டு வாறியளே?" "அம்மா... நாங்கள் இயக்க மில்லை. றெயினிங் இன்னும் எடுக்கேலை. புதிசா இயக்கத்துக்கு வந்தனாங்கள்"**

# 35 மானத்தி

○ கருணை ரவி

பூ கஞ்சாக்கனகுவை கிளிநொச்சியில் தெரியாதவர்கள் இருக்கமாட்டார்கள். அவரின் பெயரை உச்சரித்தால் கரடிப் போக்குச் சந்தியில் இருக்கும் தேநீர்க்கடை ஞாபகத்தில் வரும். கரடிப்போக்குச் சந்தியில் இருந்து உருத்திரபுரத்துக்குத் திரும்பும் மூலையில் முப்பது வருசமாக தேநீர்க் கடை நடத்தி வருகிறார்.

வாழைக்குலை வியாபாரிகள், புகையிலை வியாபாரிகள், நெல்லுக்கட்டுவ தற்கு வரும் சிங்களவர், மணிக்கடை நடத்தும் முஸ் லிம்கள், கள்ளச்சாரா யத்தை வாங்கி மடிக்குள் செருகிக்கொண்டு போகும் மீன் வியாபாரிகள் எல்லோரும் கஞ்சாக்கனகுவிடம் ரீயும் ஒரு வடையும் சாப்பிடாமல் போவ தில்லை.

இவர்களில் வாழைக்குலைக்கார கிளியனையும் நெல்லுக்கட்ட வருகிற பிய தாஸவையும் கனகுவுக்கு நல்லாப்பிடிக்கும். பியதாஸா தான் கஞ்சா சுற்றிய பீடியை தம்புள்ளவில் இருந்து கொண்டுவந்து கொடுப்பான். வாழைக்குலைக் கார கிளியன் வெற்றிலையை வாய்க்குள் குதப்பிக் குதப்பி எப்பவும் சிரித்துக் கதைப்பான். சிரிக்க வெற்றிலைச் சாறு வாயிலிருந்து நெஞ்சுச் சட்டையில் ஊத்துப்படும். பற்கள் கே.ஆர். விஜயா மாதிரி நல்ல வடிவு. சிரிக்க முரசு இரத்த நிறமாகத் தெரியும். கிளியன் குறைந்த விலைக்கு வாழைக்குலை களை கொடுப்பான்.

காசை ஒருமாதம் கழித்துக் கொடுத்தாலும் சிரித்துக்கொண்டு வாங்குவான். கிளியன் போகும் வேளைகளில் கஞ்சா சுற்றிய பீடியை ஒரு பைக்குள் போட்டு கள்ளுக் குதத்துக்குப் பக்கத்தில் இருக்கிற சென்றிப் பொயின்றில் கொடுக் கும்படி கனகு கொடுப்பான். அதை கிளியன் பொயின்றில் இருக்கிற சீக்கிய னிடம் கொடுத்து விட்டுச் செல்வான். ஒருநாள் கிளியன் பீடியைக் கொடுத்து விட்டுச் சென்றதும் அரை மணித்தியாலத்தில் பீடி வெடித்தது. பீடியைப் பற்ற வைத்த சீக்கியனின் முகம் சிதறி உடனே இறந்தான்.

உடனே கனகுவிடம் வந்த படைகள் கனகுவைப் பிடித்துக் கொண்டு போனார் கள். பீடிக்குள் வெடிமருந்து யார் வைத்தது என மிரட்டினார்கள். அடித்தார்கள். கனகு தெரியாது என்ற ஒரே வார்த்தையை மட்டும் சொன்னான்.

கிளியனின் வீட்டைக் கேட்டார்கள். வீடும் தெரியாது என்று சொன்னான். கிளியன் ஒரு அப்பாவி. பீடியில் வெடிமருந்து சுற்றுமளவுக்கு அவனிடம் புத்தியில்லை. அவனைக் காட்டிக்கொடுக்க அவர் விரும்பவில்லை. கிளியன் நேரம் சென்றால் அவரின் கடையில்தான் தங்குவான். கிளியனில் அவர் நல்ல நம்பிக்கை. கடையில் இரவில் தங்கினாலும் கடையில் இருந்து ஒரு சாமானையும் எடுக்க மாட்டான். ரீ வைத்துக் குடித்தால் அதற்குரிய காசை விடியக் கொடுப்பான்.

கனகுவை மூன்று நாள்கள் கிளிநொச்சித் தியேட்டருக்குள் வைத்திருந்தார் கள். இரண்டு நாட்கள் காங்கேசன்துறைக்குக் கொண்டு போனார்கள். அவர் தான் வெடிமருந்து வைக்கவில்லை என்றும் கிளியனின் வீடு தெரியாது என்ற வார்த்தையைத் தவிர வேறு எதையும் சொல்ல வில்லை. ஐந்து நாள்களுக்குப் பிறகு கனகுவை விட்டார்கள். அதற்குப்பிறகு கிளியன் கடைக்கு வருவதில்லை. கிளியன் வந் தால் கடைக்கு வரவேண்டாம் என்று சொல்லவேணும் என நினைத்தார். ஒருநாள் கனகு பச்சைப் பாக்கு ஏழாம் வாய்க் காலில் வாங்கிக் கொண்டு வர, இயக்கப் பொடியன் அவ ரைப் பிடித்து சைக்கிளில் ஏற்றிக்கொண்டு போனான். கன குவுக்கு ஏன் இயக்கம் பிடித்துக்கொண்டு போகிறது என தெரியாது. இயக்கம் பிடித்துக்கொண்டு போகிறவர்கள் பெரும் பாலும் ஆமிக்கு உதவுபவர்களாக இருப்பார்கள். திரும்பி வர மாட்டார்கள். சிலர் வீதிகளில் சுடப்பட்டுக் கிடப்பார்கள். இயக்கப் பொடியன் கனகுவை சைக்கிள் கான்ரிலில் முகத்தை குற்றிப் படுக்க வைத்துக்கொண்டு போனான். தெருவால் போகிறவர்கள் பார்த்துக் கொண்டு போனார்கள். அவர்களுக்கு கனகுதான் என்று தெரியாது.

கனகுவை ஜெயந்திநகர் மீனாச்சியம்மன் கோயில் சங்கத்துக்கு முன்னால் இறக்கிவிட்டு சங்க பின்பக்கத்துக்கு கூட்டிக்கொண்டு போனான். சங்கப் பின்பக்கத்தில் சுற்றவர பீனாறிச்செடிகள் நின்றன. அதுக்குள் கிளியன் நின்றான். கையில் துப்பாக்கியுடன் கிளியனைக் கண்டதும் கனகுவின் தொண்டை வரண்டது. நெஞ்சு வீங்கி நாடித் துடிப்பு அதிகரித்தது.

இவ்வளவு நாட்களும் கிளியன் பீடிக்குள் வெடிமருந்து வைக்க வில்லை, அவன் ஒரு அப்பாவி என நினைத்தவர் இப்ப அவன் உட லெங்கும் வெடிமருந்துகள் என நினைத்தார்.

"என்ன கனகண்ணை...?"

கிளி சிரித்தான். கனகு சிரிக்கவில்லை.

"உம்மை ஏன் பிடிச்சனாங்கள் எண்டு தெரியுமே? உன்ர வாயாலை ஏன் எண்டு சொல்லு?"

அவரின் வாய் பதறியது. பற்கள் ஒன்றோடு ஒன்று அடித் தன. எதைச் சொல்வதென நினைத்தார். கடை உள்ளுக் குள் சாரதா இருக்க சீக்கியர்கள் உள்ளே நுழைவார்கள். அவர்கள் உள்ளே நுழைய கனகு வெளியில் வந்துவிடுவார். சாரதா ரகசியமாக உள்ளே நுழைவதை யாரும் கண்டு சொல்லியி ருப்பார்களா?

"கனகண்ணை... நீங்கள் செய்ததெல்லாம் எங்களுக்குத் தெரியும். இது முதலாவது வோணிங். இனிமேல் இப்பிடியான செயற்பாடுளைச் செய்தியள் எண்டால்..."

அவன் வார்த்தைகளை முடிக்கவில்லை. இடுப்புக்குள் இருந்த பிஸ்டலை கையிலெடுத்து சுழற்றினான். அதற்குப்பிறகு கிளியன் கதைக்கவில்லை. அவரைப்பிடித்தவன் அங்கே வந்தான். அவரின் மீசை அரைவாசியையும் தலையிலிருந்த மயிர்களையும் வழித்து விட்டு சைக்கிளில் ஏற்றிச்சென்றான். அதுக்குப்பிறகுதான் அவருக்குக் 'கஞ்சாக் கனகு' என்று பெயர் வந்தது.

இப்ப கடைக்கு வந்து ரீ குடிப்பவர்களை கனநேரம் கடையில் இருக்க விடமாட் டார். யாழ்ப்பாணத்தில் இருந்து சனங்கள் வந்து கிளிநொச்சியில் நிறைந்து விட்டார்கள். இப்ப கடையில் வாடிக்கையாளர்கள் வெளியில் போட்ட வாங்கி லில் இருந்த ரீயைக் குடித்துவிட்டு சிரித்து சளப்பல் கதைகள் கதைக்க, உருத்திரபுரம் போக பஸ்ஸை காத்துக் கொண்டு நிற்கும் பொம்பிளைகள் கடைக்கு வருவதில்லை. இதனால் கனநேரம் இருந்து கதைக்க விடமாட்டார். காலை எழுந்ததும் கடையில் ஒரு பக்திப்பாட்டைப் போட்டு விட்டு புலிகளின் குரல் வானொலியைப்போடுவார். பஸ்ஸைப் பார்த்து நிற்பவர்கள் செய்தி களை கேட்டு ரீயையும் குடித்துவிட்டுச் செல்வார்கள். எப்ப பார்த்தாலும் இயக்கப்பாடல்கள் கடையில் பாடிக் கொண்டி ருக்கும். தேனிசைசெல்லப்பா வின்

**"மாங்கிளியும் மரங்கொத்தியும்
கூடு திரும்ப தடையில்ல
நாங்க மட்டும் உலகத்தில
நாடு திரும்ப முடியல"**

எனும் பாடலை ஒருநாளைக்கு ஐந்து தடவைகள் போடுவார். அவருக்கு செல் லப்பாவின் குரலிலும் காசியானந்தனின் வரிகளிலும் தனி விருப்பம். புது வையின் பாடல்கள் வசை என்பார். புதிதாக ஏதும் பாடல்கள் வந்தால் செல் லப்பாவோ என்று பார்ப்பார். அவர் பாடவில்லையென்றால்

"உது வாய்க்கேலை"

என்று சொல்லுவார். இயக்கப்பொடியள் ரீக்கு வந்தால் 'செல்லப்பா' என்று தான் அவரைக் கூப்பிடுவார்கள். அப்படிக் கூப்பிட்டால் அவருக்கு பெரிய புளுகு. இரவில் போகும் பொடியள்

"பேய் கஞ்சா..."

எனக் கூப்பிட்டுக்கொண்டு போவார்கள்.

"[illegible] பிறந்ததுகள். உதுகளை இயக்கம் காணுறேலையே..." என்று திட்டுவார். இரவில் 'பேய்' என்றவர்கள் பகலில் 'கனகண்ணை' என வந்து ரீ குடிப்பார்கள். பொடியளோடு பம்பலடித்துக்கொண்டு ரீயை ஆத்தும்போது குருவிகள் மாதிரி குரல் எழுப்புவார். கிளி மாதிரி கதைப்பார். நரி மாதிரி ஊளையிடுவார். காகம் மாதிரிக் கரைந்தால் உடனே கடைக்கு காகங்கள் வரும். அவர் சிறுவயதில் இருந்து பறவை கள், விலங்குகளின் குரல்கள் மாதிரி ஒலியெழுப்புவார். உருத் திரபுரப் பிள்ளையார் கோயிலில் திருவிழா நடக்க, வரணி அம்பிகை கோஷ்டியினரின் சின்னமேளம் நடந்தது. நாட்டியக் காரிகள் மேடைக்கு வரமுதல் பாட்டுக்கச்சேரி வைப்பார்கள். வந்தவர்களில் ஒருவன் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் பாடிய

"கடவுள் அமைத்து வைத்த மேடை"

என்ற பாடலைப்பாட கனகு பிராணிகளின் ஒலிகளை எழுப்பினார்.

அதற்குப்பிறகு அவரின் திறமையை எல்லோரும் பாராட்டினார்கள். ஈழத்துச் சதன் இந்தச் செயற்பாட்டில் வித்துவக்காரன். கனகுவுக்கு "கிளிநொச்சிச் சதன்" என்று பெயர் வைத்தார்கள்

பூங்கொடி பன்னங்கண்டிக்குப் போறவழியில் நிக்கிற ஆலமரத்துக்குக் கீழே இருக்கின்றாள். கஞ்சாக்கனகுவின் கடையில் இருந்து ஐநூறு யார் தூரம் வரும். தறப்பாள் வீடு. பிலிப்பு உருத்திரபுரத்தில் இருக்கிறான். பிலிப்பு போகும் போது பூங்கொடி அவனுடன் உருத்திரபுரத்துக்குப் போகவில்லை. யாழ்ப்பா ணத்தில் இருந்து ஏற்றிக் கொண்டு வந்து பன்னங்கண்டிப் பள்ளிக்கூடத்தில் ஐந்து நாட்கள் தங்க வைத்தார்கள். தங்கியிருப்பவர்களைப் பார்ப்பதற்கு கிளிநொச்சியில் இருந்து வந்தவர்கள் தங்கள் உறவுகளை வீட்டுக்கு அழைத் துச் சென்றனர்.

பூங்கொடி தம்புவை நினைத்தாள். தம்பு மருதநகரில் பெரிய பண்ணையார். மருதநகரில் தம்பு கமம், அம்பலவாணர் கமம், தேசிகர் கமம் என்றால் நெல் அறுவடையின் போது, மருதடிப்பிள்ளையாரில் பெரிய படையல் நடக்கும். தெருவில் போகிறவர்களுக்கு புக்கை மோதகங்களை அள்ளிக் கொடுப் பார்கள்.

மருதநகர்ப் பிள்ளையாரில் தம்பு பெரிய படையல் வைத்த அன்று தான் கந் தவிக்கிழவனுடன் பூங்கொடியும் வந்தாள். பொங்கல், திவசம், என்றால் கந் தவிக்கிழவனை தம்பு கூப்பிடுவார். கிழவன் போனால் இரண்டு மூன்று நாட்கள் தம்பு வீட்டில் தங்குவார். கோயில்களில் தீக்குளிப்பு என்றால் கந்த விக்கிழவனை உடுக்கடிக்கக் கூப்பிடுவார்.

தம்பு ஊரில் பெரிய அண்ணாவி. கோயில் திருவிழாக்களில் பி.யு. சின்னப்பா, தியாகராஜபகவதர் குரல்களில் பாடுவார். ஏழரைக் கட்டை சுதியில் குரல் எழுப் பினால் கைதட்டல்கள் வானத்தைத் தொடும். அவரின் கச்சேரி என்றால் அக்கராயன், முறிகண்டி, வட்டக்கச்சி என பல இடங்களில் இருந்து மாட்டு வண்டிலில் வருவார்கள். தம்பு ஊரில் பெரிய சண்டியர். மருதநகரில் எவரும் சண்டித்தனம் செய்து விட்டுப் போனால், தம்பு தனித்துப்போய் அவர்களின் வீட்டில் சண்டித்தனம் செய்வார். அவருக்கு எவரும் திருப்பி அடிக்க மாட்டார் கள். அவருக்கு கம்படி, நரம்படி, ரெசிலிங் தெரியும். செய்வினை, சூனியம், பேய் ஏவல் என எல்லாம் கற்றவர். அதனால் அவர் தெருவில் யாருக்கும் அடித்து முறித்தாலும் ஏன் என்று எவ ரும் கேட்கமாட்டார்கள்.



அவர், சண்டித்தனத்தால் ஊரில் பேசப்படவில்லை. 'விசகடி வைத்தியர்' என்றால் வன்னிக்கே தெரியும் அது தம்புதான் என்று. யாரும் குழந்தை பிறக்க சிரமப்படு கிறார்கள் என்றால் முட்கொம் பனில் இருந்தும் கார் பிடித்து வருவார்கள். தேங்காயை வயிற்றில் உருட்டி உருட்டி சுகப்பிரசவமாக்குவார்.

பாம்பு கடித்தால் ஆஸ்பத்திரிக்குப் போகமாட்டார் கள். தம்புவிடம் ஓடிவருவார்கள். தேங்காயை வாசலில் உருட்டி விடுவார். வாசல் படிக்கட்டால் தேங்காய் முடிகுற்றி விழுந்தால் தன்னால் ஏலாது என்பார். அவர் ஏலாது என்று சொன்னவர்கள் எவரும் தப்பியதாக இல்லை. முடி குற்றாது விழுந் தால் போவார். ஆழியவளை கந்தசாமி செத்ததென்று பாடையும் கட்டினார் கள். தம்பு போய் இரவிரவாகக் குழைக்கடித்து உயிர்ப்பித்து விட்டுத்தான் வீட்டுக்கு வந்தார்.

கந்தவிக்கிழவனும் தம்புவிடம்தான் விசகடி வைத்தியம் கற்றார். பூங்கொடி சாமத்தியப்பட்டதை அறிந்ததும் தம்பு பச்சையரிசி கொண்டு வந்தார். நாலாந் தண்ணி ஊற்றிய அன்று இரவு உடுக்கடித்து வீட்டில் பெரிய கச்சேரி வைத் துத்தார். கந்தவிக்கிழவன் தம்புவை சைக்கிளில் ஏற்றிக்கொண்டுபோய் கிளாலியில் விட்டு வந்தார். இரவுகளில்தான் படகுகளில் பூநகரிப்பயணம் நடக்கும்.

அப்ப வன்னிக்குப் போறதுக்கு கிளாலிதான் பாதை. ஆனையிறவுப் பாதையை ஆமிக்காரர்கள் மூடிவைத்திருந்தார்கள். பாதையை மூடிவிட்டு அரசாங்கம் பொருளாதாரத்தடையை விதித்திருந்தது. ஊரில் எண்ணெய், சவுக்காரம், தீப்பெட்டி என பல பொருட்களுக்குத் தடை விதித்திருந்தார்கள். வியாபாரிகள் கொம்படிப் பாதையால் சைக்கிளில் எண்ணெய் கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வருவார்கள். ஆமிக்காரர் பற்றைகளில் படுத்திருந்து வியாபாரிகளைப் பிடித்துக்கொண்டு போவார்கள். பிடிப்பவர்கள் திரும்பி வரமாட்டார்கள். தம்புவை விட்டுவந்த அடுத்த நாள் காலை கிளாலிக்கரையில் பிணங்கள் குவிவதாக சனங்கள் கதைத்தார்கள். இரவு போன படகுகளை ஆனையிறவு ஆமி வழிமறித்து வெட்டிக் கொத்தியதாகவும் ஐம்பது சனங்க ளின் உடல்கள் கரையில் ஒதுங்குவதாகவும் காலைப் பத்திரிகையில் செய்தி வந்தது. கூடுதலாக பல்கலைக்கழக மாணவிகள் என கதைத்தார்கள். ஊரெல்லாம் ஒலிபெருக்கியில் சோக கீதங்கள் போட்டார்கள்.

கந்தவிக்கிழவன் தம்புவை நினைத்தார். கிளாலிக்குப் போய் பிணங்களில் தம்புவைத் தேடினார். சில பிணங்களை அடையாளம் காண முடியாதிருந்தது. தம்புவை நினைத்து கிழவன் கவலையோடு வீட்டுக்கு வந்தார். சாப்பிடவு மில்லை. சனங்களை ஒவ்வொரு நாளும் ஆனையிறவு ஆமிகள் கிளாலிக் கடலில் வெட்டிவிட்டுச் செல்வதால் இயக்கம் கடற்கரை பற்றைகளுக்கு நடு [illegible] ஏற்றி பய [illegible] போய்க்கொண்டி ருக்க கந்தவிக் கிழவன் தம்புவின் நிலையறிய கிளிநொச்சிக்குப் போனார். கந்தவிக்கிழவன் போனன்று ஆனையிறவில் இருந்து ஆமிக்காரர் வந்தார் கள். இயக்கத்தின் படகுகள் துப்பாக்கிகளை உமிழ்ந்தபடி அவர்களின் படகு களை சுற்றி வளைத்தன. துப்பாக்கிக் குண்டுகள் நெருப்புத்தணல்களாக ஆமியின் படகுகளில் பாய்ந்தன. ஆமியின் படகுகள் தீப்பற்றி எரிய தப்பிய வர்கள் படகுகளில் ஆனையிறவுக்கு ஓடினார்கள். இயக்கம் அவர்களை துரத்திச் செல்ல படகுகளில் போன சனங்கள் சத்தமிட்டு கைகளை தட்டி சந்தோசமாகப் பூநகரியைச் சென்றடைந்தன.

கிழவன் தம்புவை சந்தித்ததும் ஆறுதல் அடைந்தார். அவர் போனபிறகுதான் ஆமிக்காரர் வந்து படகில் சென்றவர்களை வெட்டிக் கொன்றதாக தம்பு சொன் னார். தம்புவைக் கண்ட நிம்மதியோடு கந்தவிக்கிழவன் வீடு வந்தார்.

பள்ளிக்கூடத்துக்கு வருபவர்களில் ஒருத்தி மருதநகர் என்றாள். உடனே பூங்கொடி தம்புவை விசாரித்தாள். தம்பு செத்ததாகச் சொன்னாள். தம்பு செத்தது அவளுக்கு கவலையாக இருந்தது. பூங்கொடி ஐந்து நாட்கள் தான் பள்ளிக்கூடத்தில் இருந்தாள். ஐந்து நாட்களால் இயக்கம் ஒவ்வொருவருக்கும் தறப்பாள் கொடுத்து விட்டார்கள். பூங்கொடிக்கு தூர இடங்களுக்குப் போக உதவி இல்லாததால் இயக்கம் அவளுக்கு ஆலமரத்துக்குக் கீழே சிறியவீடு அமைத்துக்கொடுத்தது.

வீடு அமைக்க வந்த இயக்கப்பொடியளுக்கு பதினெட்டு, பத்தொன்பது வயது வரும். ஒருவனுக்கு மீசை முளைக்கவில்லை. மற்றவன் சவரக்கத்தியை இன்னும் முகத்தில் வையாதவன். தறப்பாளுடன் வந்து காட்டில் போய் தடிக ளையும் அவர்களாகவே வெட்டி வந்து வீடாக்கினார்கள். பூங்கொடி பக்கத்தில் இருந்த கல்லுகளை எடுத்து அடுப்பாக்கி அவர்களுக்கு தேநீர் வைத்துக்கொ டுத்தாள். அவர்களில் ஒருவன் நித்தியை மாதிரியே இருந்தான். சிரிக்க கன் னத்தில் குழி விழுந்தது. தேநீரை குவளையில் இருந்து உவியும் போது கண்களை மூடுதல், சும்மா இருக்கும் நேரங்களில் இருவிரல்களால் இமை மயிர்களை புடுங்குவது. அப்படிச் செய்கையில் அவள் அவனையே அதிக மாகப் பார்த்தாள்.

"தம்பி...என்ரை மகனும் உங்களைமாதிரித்தான் இயக்கம். போனதுக்கு இன்னும் நான் காணேலை. கண்டா இஞ்சை கூட்டிக்கொண்டு வாறியளே?"

"அம்மா... நாங்கள் இயக்கமில்லை. றெயினிங் இன்னும் எடுக்கேலை. புதிசா இயக்கத்துக்கு வந்தனாங்கள்"

ஒருவன் சொன்னான். அவர்கள் போகும் போது அவர்களையே பார்த்துக் கொண்டு நின்றாள். நிருபன் தறப்பாளை தொட்டு விளையாடினான். அவ ளுக்கு அந்த தறப்பாள் வீடு மிகவும் அழகாக இருந்தது. சின்னச் சின்ன தடிகளால் சுற்றவர அடைத்து முன்னுக்கு கதவும் போட்டு தறப்பாளைச் சுற்றி மண்ணால் அணை போட்டிருந்தார்கள்.

அவள் உரப்பையில் இருந்த சாமான்களை எடுத்து வைத்தாள். சீலை ஒன்றை எடுத்து வீட்டை இரு அறைகளாக்கினாள். பையின் அடியில் அப்பச் சட்டி இருந்தது. அதைப்பார்த்ததும் அப்பம் சுட்டு கடைகளுக்கு கொடுக்கலாம் என்று யோசனை வந்தது. கடைகள் எங்கே இருக்கிறது? என அவளுக்குத் தெரியாது. நிருபனை படிக்கவிட பள்ளிக்கூடம் எங்கே இருக்கிறதென்றும் தெரியாது. மத்தியானம் சமைத்துச் சாப்பிட்டுவிட்டு சந்திக்குப்போனாள். அப்பதான் அவளுக்குத் தெரியும் அது கரடிப்போக்குச் சந்தியென்று. பக்கத் தில் பள்ளிக்கூடமும் தெரிந்தது. எல்லாம் அவளின் வீட்டுக்கு அருகாகவே இருந்தன.

அவள் தேடிய கடையைக் கண்டாள். முன்னால் வாழைக் குலைகள் தூக்கி யிருந்தன. வெளியில் போடப்பட்ட வாங்கிலில் இருந்து தேநீர் அருந்தினார் கள். அவள் போய் தேநீர் குடித்ததே அப்பம் கொடுப்பதைக் கேட்பதற்கே. அவள் தேநீர் குடித்துக் கொண்டிருக்கும்போது கஞ்சாக்கனகு அவளை மூன்று தடவைகள் பார்த்தார். அவ ரின் பார்வையில் கஞ்சா தடவப்பட்டி ருந்தது. அவரின் ஒவ்வொரு பார் வையும் மூன்று நிமிடங்களைத் தின்றது.

அந்த ஒன்பது நிமிடங்களிலும் அட் டைகள் ஊர்ந்தமாதிரியிருந்தன அவளுக்கு. அரைவாசி ரீயை ஒரு குவளையில் ஊற்றி நிருப னுக்குக் கொடுத்து விட்டு அரைவாசியை தான் குடித்தாள்.

"உங்கடை சொந்த இடமெது?"

அவள் எப்படிக் கதைப்பதென்று யோசித்துக்கொண்டிருக்க அவர் கதையைத் தொடுத்தார்.

"பொலிகண்டி"

"எத்தனை பிள்ளையள்?"

"ரண்டு"

"மற்றவர் வீட்டிலையே?"

மகன் இயக்கம் என்றும் கணவன் செத்ததாகவும் தனக்கு உழைப்பு இல்லை என்றும் சொன்னாள்.

"இஞ்சை வந்து வேலை செய்யுமன்"

அவள் மறுத்தாள். வேலைக்குப் போனால் நிருபனை பள்ளிக் கூடம் கொண் டுபோக முடியாது. பள்ளிக்கூடம் இல்லாத நாட்களில் நிருபன் தனிய இருக் கமாட்டான். எல்லாவற்றையும் உணர்ந்து மறுத்தாள்.

"நான் அப்பம் சுட்டுத்தரலாம்"

அவர் சம்மதித்தார். ஒவ்வொரு நாள் காலையிலும் ஐம்பது அப்பங்கள் தேவை என்றார். சொல்லிவிட்டு முற்பணமாக முந்நூறு ரூபா கொடுத்தார். பக்கத்து வெற்றிலைக்கடைக்காரன் அவளையே பார்த்தான். அவள் தேநீர் குடிக்கும்போது அவனும் வந்து பக்கத்தில் இருந்து தேநீர் குடித்தான். தேநீர் குடித்துக் குடித்து கஞ்சாக்கனகு அவளில் கண்கொட்டுவதை ஏந்தியபடியிருந் தான். அவள் கடையை விட்டு போகும்போது வெற்றிலைக்கடைக்காரன் அவளைக் கூப்பிட்டான்.

"நீ கடைக்கு வேலை செய்யப்போகாதை. இந்த மாதம் ஐந்து பொம்பிளையள் வேலைக்கு வந்திட்டுதுகள். ஒருதரும் ரண்டு மூண்டு நாளைக்குப்பிறகு நிக் கேலை."

அவன் வேறெதுவும் சொல்லவில்லை. அவள் தான் வேலை செய்ய சம்ம திக்கவில்லை என்று கூறினாள். அவள் போகும்போது வெற்றிலைக்கடை காரன் ஏன் அப்படிச்சொன்னான்? என நினைத்தாள்.

சம்பளம் கொடுக்கவில்லையா? அல்லது மரியதாஸ் போலவா? நிருபன் தேநீர் குடிக்கும்போது ஒரு வாய்ப்பன் கொடுத்தார். அதற்கு காசு வாங்க வில்லை. இது அவரின் நல்லமனமா? அல்லது தன்மேல் ஒரு ஈர்ப்பு வரு வதற்கான ஒரு நடிப்பா? வீட்டுக்குப் போனதும் கடைக்காரனின் நினைவு களொன்றும் அவளுக்கு வரவில்லை. பொழுது பட்டதும் விளக்கைக் கொளுத்திவிட்டு அப்பத்துக்கு மாவைக் கரைத்தாள். தறப்பாளுக்கு முன் னால் ஒரு சைக்கிள் வந்து நின்றது.

"பூங்கொடி..."

குரலைக்கேட்டதும் கனகு ஞாபகத்தில் வந்தார். பூங்கொடி என்று எப்படி பெயர் தெரியும்? தான் பெயரைச் சொன்னேனா? அவளுக்கு ஞாபகங்கள் எதுவும் வரவில்லை. எழும்பினாள். வெளியில் போக பார்சல் ஒன்றை நீட்டினார்.

"என்ன பாசல்?"

"கொத்துறொட்டி"

(வருவாள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org